சிலுவையில் அறையப்படும் சத்தியங்கள்



சாம்சன் பால்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

சிலுவையில் அறையப்படும் சத்தியங்கள்

முதல் பதிப்பு
நவம்பர் – 2005

சகோ. சாம்சன் பால் எழுதி வெளியிடும் ஜீவ நீரோடை மாத இதழ் மற்றும் ஜீவ நீரோடை தினசரி தியான நூலின் மாதிரிப்பிரதி ஆகியவற்றை தெளிவான முகவரியுடன் கடிதம் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

SAMSON PAUL
126, Muthaiya Muthaliar Street,
Pondicherry - 605 003. INDIA
Phone : 0413-2236042
e-mail : jeevaneerodai@eth.net

Typesettings by : Mercurry Graphics, Pondicherry - 1.
Printed by : United Bind Graphics, Chennai-4 Ph. : 24661807

ஆசிரியரிடமிருந்து...

சத்தியத்திற்கு ஜனங்கள் தங்கள் காதுகளை விலக்கி கட்டு கதைகளுக்கு சாய்ந்து போகும் ஒரு காலம் வரும் என்ற எச்சரிக்கை அப்போஸ்தலனாகிய பவுல் மூலம் தரப்பட்டது. (11 தீமோ - 4:4) இவ்விதமான ஒரு காலத்தில் தான் நாம் இன்று வாழ்கின்றோம். அன்று சத்தியமாகிய இயேசு புறக்கணிக்கப்பட்டு சிலுவையில் அறையப் பட்டார். சிலுவையில் அறையப்படுவதற்கு தகுதியான கலகக்காரனாகிய பரபாஸோ ஜனங்களால் விரும்பி ஏற்கப்பட்டான்.

இன்றும் அதே நிலைதான். சத்தியம் பெரும்பான் மையினரால் புறக்கணிக்கப்பட்டு சிலுவையிலறையப் படுகிறது. ஆனால் கட்டுக்கதைகளும், போலியான உபதேசங்களும் அதிக கனத்துடன் ஏற்கப்படுகிறது. தேவனுடைய மாற்றக்கூடாத சத்தியங்கள் தங்களின் சுய நல ஆசைகளுக்கு உகந்ததாக இராத காரணத்தினால், தேவ ஊழியர்கள் என அறியப்பட்ட அநேகரால் அவை மறைமுகமாகவும், தந்திரமாகவும் புறக்கணிக்கப்பட்டு, தங்களின் மனதுக்கு பிரியமான விஷயங்கள் சத்தியம் என்று தவறாக காண்பிக்கப்படுகிறது.

சத்தியங்கள் எங்கே புரட்டப்படுகிறதோ, அங்கே சாத்தானின் தந்திரங்கள் நிறைவேறுகின்றன. சரியான சத்தியங்கள் எங்கே இல்லையோ, அங்கே சரியான வாழ்க்கையும் இராது. இப்படிப்பட்ட ஒரு ஆவிக்குரிய வஞ்சகத்தின் காலத்தில் அன்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறியது போல, நாம் மனத்தெளிவுள்ளவர்களாக இருக்க வேண்டியது அவசியம். இந்த மனத்தெளிவை ஏற்படுத்தும் நோக்குடன் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு அவ்வப்பொழுது நான் எழுதிய சில கட்டுரை களே இந்த புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. இதனை கருத்தாகப் படிக்கின்றவர்கள், சத்தியத்தைக் குறித்த சரியான, சமநிலையான அறிவைப் பெறுவதோடு, தங்களின் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு புதிய வெளிச்சத்தைக் கண்டடைவது நிச்சயம்.

உங்கள் சகோதரன்,

சாம்சன் பால்

உள்ளே.....

பக்க எண்

சத்தியத்தை சிலுவையில் அறைந்துவிட்டு.......... 5-14

மெய்யான தேவன் எங்கே ?.......... 15-20

ஆரோனின் கன்று குட்டி.......... 21-30

ஆன்மீக வேடம் அணிந்த நாத்திகர்கள்.......... 31-35

சிலுவை வழியாகவே சிங்காசனம்.......... 36-43

சபை கூடும் இடங்களில்.......... 44-55

பெந்தெகோஸ்தே சபைகளின்
இன்றைய நிலைமை.......... 56-62

தேவனுடைய அன்பின் அடுத்த பக்கம்.......... 63-76

கர்த்தருடைய வார்த்தைக்கு பஞ்சம்.......... 77-82

தொடர்ந்து குறைகளைக் கூறுவது ஏன்?.......... 83-91

கண்டிப்பின் வடிவத்தில் தேவ அன்பு!.......... 92-101

அர்த்தமுள்ள ஆராதனை.......... 102-105

காணிக்கை கொடுத்தால் போதுமா?.......... 106-111

சத்தியத்தை சிலுவையில் அறைந்துவிட்டு

பிலாத்துவுக்கு இயேசு குற்றமற்றவர் என்பது நன்றாகவேத் தெரியும். அவர் மேல் யூதர்கள் சுமத்திய எந்த குற்றச்சாட்டுகளும் உண்மையல்ல என்பதை அவன் அறியாதிருக்கவில்லை. எது சரி, எது தவறு என்பதை உணர முடியாத நிலையிலும் அவன் இல்லை. உண்மையைக் குறித்து கவலைப்படாமல் போகின்ற அளவுக்கு அவனுடைய மனசாட்சி மழுங்கிப் போனதாயும் இருக்கவில்லை. தன்னுடைய மனதிற்கு சரியாகப்பட்டதை செயல்படுத்தத் தேவையான அதிகாரமும் அவனிடம் இருக்கவே செய்தது.

ஆயினும் இறுதியில் அவன் ஜனங்களின் தவறான கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, இயேசு கிறிஸ்துவின் மேல் இருந்த நியாயத்தையும், நீதியையும் வேண்டுமென்றே அலட்சியப்படுத்தினான். அவருடைய உண்மையை நிலைநாட்டவும், அவர் மேல் இருந்த நியாயத்தை நிலை நிறுத்தவும் நீண்ட நேரமாக யூதர்களோடு போராடிய அவன் ஏன் இறுதியில் பின் வாங்கினான்? ஜனங்களின் விருப்பத்திற்கு இசைந்து போக அவன் ஏன் தனது மனதை தயார்ப்படுத்தினான்?

நியாயம் எது என்று தெரியாமல் போனதாலா? உண்மை எது என்று உறுதிபடுத்த முடியாமல் போனதாலா? இல்லை, இல்லை. அவன் ஜனங்களை பிரியப்படுத்த முடிவு செய்தான்? நியாயாதிபதியாகிய நின்ற அவன் ஏன் அநீதிக்கு அங்கீகாரம் வழங்கிவிட்டு நீதியை அலட்சியப்படுத்

தினான்? அவன் சுயநலத்திற்கு சாய்ந்து தனக்கு எது லாபமாயிருக்கும், எது நஷ்டமாயிருக்கும் என்று கணக்கு போட்டுப் பார்த்தான். அவன் எது நீதி, எது அநீதி, எது உண்மை, எது பொய் என்று சிந்தித்துக் கொண்டிருந்தவன் பாதையை விட்டு விலகி எது தனக்கு சாதகம், எது தனக்கு பாதகம் என்று சிந்திக்க ஆரம்பித்தான். முடிவு. அக்கிரமத்தை ஆசனம் போட்டு அமர வைத்துவிட்டு, நீதி நியாயத்தை குப்பையைப் போல வீசி எறிந்தான்.

அவன் ஜனங்களை பிரியப்படுத்த மனதுள்ளவன் ஆனான். (மாற்கு – 15:15) ஜனங்களின் பிரியம் சரியானதல்ல. அவர்கள் கலகக்குணமும், கொடுங்குற்ற வாஞ்சையுமுள்ள பரபாஸை விரும்பினார்கள். சாந்தமும், சமாதானமும், அன்பும் உண்மையும் நிறைந்த இயேசுவை வெறுத்தனர். தவறானதை தங்களுக்காக கேட்டு சரியானதை சிலுவையிலடிக்கச் சொன்னார்கள். அவர்கள் வெறுக்க வேண்டியதை விரும்பி, விரும்ப வேண்டியதை வெறுத்தார்கள்.

ஆனாலும் பிலாத்து அவர்களுடைய மனநிலையைப் பிரியப்படுத்தவே முன் வந்தான். ஏனென்றால் பெரும்பான்மையினராகிய ஜனங்களின் உணர்வுகளுக்கு எதிராகப் போனால் தன்னுடைய பதவிக்கும் எதிர்கால உயர்வுகளுக்கும் பல பாதிப்புகள் வரும் என்பதை அறிந்தான். எனவே ஜனங்கள் விரும்பியதை அவர்களுக்கு கொடுக்க முன்வந்தான்.

ஜனங்களை பிரியப்படுத்தி, தன்னுடைய பக்கத்திற்கு ஆதாயமான ஒரு நிலையை அவன் எதிர்பார்த்த போது, அவன் இயேசுவை சிலுவையில் அறைய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அங்கே சிலுவையில் அறைய ஆணையிட்டது. இயேசு என்ற ஒரு மனிதரை அல்ல. அவன் சிலுவையில் அறைய உத்தரவிட்டது உண்மையை, சத்தியத்தை, நீதியை, நியாயத்தை இயேசு தம்மைக் குறித்து கூறும்போது "நானே சத்தியம்" என்றார். (யோவான்–14:6) இப்போது பிலாத்து சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்தது சத்தியத்தையே.

ஆம். உண்மையின் மேல் உறுதியாக நிற்காமல் ஜனங்களின் மனநிலைக்கேற்றபடி செயல்பட்டு, உண்மையை உதாசீனம் செய்கின்றவர்கள் சத்தியத்தை சிலுவையில் அறைந்துதான் ஆக வேண்டும். சுயலாபத்தை முக்கிய நோக்கமாகக் கொண்டவர்கள் உண்மையையும், நீதியையும் அலட்சியப்படுத்தி சத்தியத்தை சிலுவையில் அறைந்துதான் ஆகவேண்டும். ஜனங்களை பிரியப்படுத்த மனதாயிருக் கின்றவர்கள் ஒரு போதும் சத்தியத்திற்கு உரிய இடத்தையும், கனத்தையும் கொடுக்க முடியாது.

ஜனங்களை பிரியப்படுத்தும் ஆவி

இன்று ஊழிய வட்டாரங்களில் அநேகரை ஆளுகை செய்வது அன்று பிலாத்துவிடம் இருந்த "ஜனங்களை பிரியப்படுத்த விரும்பும் ஆவிதான்" இவர்கள் ஜனங்களை பிரியப்படுத்தி செயல்படும் தவறான நிலைப்பாட்டிற்கு ஜனங்கள் மேல் மனதுருக்கம் என்றும் ஜனங்கள் மேல் கரிசனை என்றும், ஜனங்களுக்காக பரிதவித்தல் என்றும் பொய்யான பெயர்களை சூட்டிக் கொண்டார்கள்.

அன்று பிலாத்து ஜனங்களின் மனதை பிரியப்படுத்த விரும்பியது அவர்களுக்கு நல்லது செய்யும் நோக்கிலோ, அவர்களுக்கு நலமானதைக் கொடுக்கும் வாஞ்சையாலோ அல்ல. அவ்விதம் செயல்படுவதால் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெறலாம். அவர்களோடு சமரசமாகிப் போனால் தனக்கு பிரச்சனைகள் இராது. அதனால் தன்னுடைய பதவிக்கும் ஆபத்து இல்லை. முன்னேற்ற குறிக்கோள்களுக்கு தடையில்லை. இவைகளே உண்மையான நோக்கங்கள்.

ஆனால் ஜனங்களை பிரியப்படுத்தி ஆதாயத்தைத் தேடும் பாதையில், சத்தியத்தை சிலுவையில் அறைய ஒப்புக் கொடுத்துதான் அவர்களிடமிருந்து நற்பெயரைப் பெற முடியும்.

இன்று சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் சீடர்களாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட அநேகர் வேத சத்தியங்களையும், தேவனுடைய மாறாத நியாயங்களையும், நீதி நெறிகளையும் தங்களுடைய சுயநலத் தேடல்களின் நிமித்தம் அனுதினமும் சிலுவையில் அறைகின்றார்கள் என்பது உண்மை.

பாவிகளை இரட்சிக்க இயேசு கிறிஸ்து உலகத்திற்கு வந்தார். (1 தீமோ – 1:15) நம்முடைய பாவங்களை சுமந்து தீர்க்கவே தேவகுமாரன் வெளிப்பட்டார். (1 யோ – 3:5) பாவிகளை மனந்திரும்ப அழைக்கவே இயேசு கிறிஸ்து வந்தார். (லூக் – 5:32) இவைகள்தான் புதிய ஏற்பாட்டின் முக்கிய சத்தியங்கள். ஆனால் இன்று இந்த சத்தியங்களை பெரும்பான்மையான தேவ ஊழியர்கள் சிலுவையில் அறைந்துவிட்டார்கள். பாவிகளை இரட்சிக்க வந்தவராக இயேசுவைக் காட்டுவது ஜனங்களுக்கு பிரியப்படுகிற ஒன்றல்ல. பரிசுத்தமாக வாழ்வதற்கு வல்லமை தர வந்தவராக இயேசுவை அறிவிப்பது ஜனங்களுக்கு கவர்ச்சிக்கத்தக்கதாக இல்லை.

அவர்கள் விரும்புவது பிரச்சனைகளிலிருந்து, கஷ்டங்களிலிருந்து, வியாதிகளிலிருந்து துன்பங்களிலிருந்து விடுவிக்கின்ற ஒரு கடவுளைத்தான். எனவே பல தேவ ஊழியர்கள் ஜனங்கள் விரும்புகிறதின்

அடிப்படையில், புதிய ஏற்பாட்டு போதனைகளை மாற்றுகின்றார்கள். அங்கே உண்மையான தெய்வீக சத்தியங்கள் தைரியமாய் சிலுவையில் அறையப்படுகின்றன.

கவர்ச்சியற்ற போதனைகள்

மனந்திரும்புதல், பாவங்களுக்காக மனஸ்தாபப்படுதல், சத்தியத்திற்கு கீழ்ப்படிதல், அனுதின வாழ்க்கையில் சிலுவை சுமத்தல், இச்சைகளுக்கு எதிராகப் போய் ஒழுங்கு முறைகளின் படி வாழ்தல், பரிசுத்த குணநலன்களோடு வாழ்தல் ஆகியவை ஜனங்களை எளிதாக கவரத்தக்க போதனைகள் அல்ல. இவைகள் ஜனங்களின் பார்வையில் நற்செய்திகளாகத் தோன்றுவதில்லை. இவைகளை தேவ ஆசீர்வாதங்களாக மக்கள் பார்க்க முடிவதில்லை.

அன்று இயேசுவை ஜனங்கள் ஏன் விரும்பாமல் பரபாஸை விரும்பி ஏற்க முன் வந்தார்கள்? இயேசுவை அவர்கள் ரோம ஆதிக்கத்திலிருந்து தங்களை விடுவித்து செழிப்பான ஒரு சமுதாய வாழ்வை தருகின்ற இரட்சகராக பார்க்க விரும்பினார்கள். ஆனால் அவரோ பாவம், பாவம், மனந்திரும்புதல், பரிசுத்தம், நியாயத் தீர்ப்பு என்று பேசிக்கொண்டிருந்தார். யூதர்களை அரசாட்சி செய்யும் ரோமர்களை அவர் எதிர்த்து நின்று தங்களுக்கு நல்லதை செய்யாமல், யூதர்களின் பாவங்களையும், குற்றங்களையும், மாய்மாலங்களையுமே அவர் ஓயாமல் கடிந்து கொண்டிருந்தார்.

எனவே அவர்கள் அவரை வெறுத்தார்கள். எனவே அவரைவிட அவர்களின் பார்வைக்கு பரபாஸ் விரும்பத்தக்கவனாக இருந்தான். அங்கே சத்தியம் சிலுவையில் அடிக்கப்பட்டது. போலித்தனம் பிரதான விருந்தினராக ஏற்கப்பட்டது.

அன்று எரேமியா அக்கால ஜனங்களுக்கென்று கர்த்தர் விசேஷமாகக் கொடுத்த வார்த்தைகளைப் பிரசங்கித்தான். ஆனால் அவை கேட்டோருக்கு இனிமையாக இருக்கவில்லை. அவைகளில் கண்டிப்பும், எச்சரிக்கையும், கடினச் சொற்களும் மிகுந்திருந்தன. ஆண்டவரிடமிருந்து ஆசீர்வாதமான, கட்டுகின்ற வார்த்தைகளை அவர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அந்த நேரத்து தேவ செய்தி இடிக்கின்றவைகளாகவும், உடைக்கின்றவைகளாகவும், நொறுக்குகின்றவைகளுமாக இருந்தன. கனிவான ஒரு கடவுளை எதிர்பார்த்த அவர்களுக்கு எரேமியா காண்பித்த கடவுள் கடுங்கோபத்தோடு சீறுகிறவராயிருந்தார். அதை அவர்கள் விரும்பவில்லை. பாவங்களைக் கண்டிக்கின்ற தவறுகளை எச்சரிக்கின்ற, மனந்திரும்புதலுக்கு அறைகூவல் விடுகின்ற எரேமியாவை அவர்கள்

வெறுத்தனர். வேண்டாம் இது போன்ற தீர்க்கத்தரிசி என்றனர். அங்கே எரேமியா கட்டி காவலில் போடப்பட்டான்.

அவர்கள் கட்டியது எரேமியாவை அல்ல. அவர்கள் எதிர்த்தது எரேமியாவை அல்ல. அவர்கள் புறக்கணித்தது எரேமியாவை அல்ல. அவர்கள் கட்டியதும், எதிர்த்ததும், புறக்கணித்ததும் சத்தியத்தை, சத்தியத்தை. ஆனால் அனநியா என்பவன் சத்தியத்தை சிலுவையில் அறைந்து விட்டு, அந்த நேரத்தில் அந்த மக்களின் மனநிலையை உற்சாகப்படுத்தும் விதமாக ஆசீர்வாதமான வார்த்தைகளைப் பேசினான். அவர்களுக்கு நம்பிக்கையான வாக்குறுதிகளை கர்த்தரின் பெயரில் அள்ளி வீசினான். ஆனால் அது போலித்தனத்தின் வெளிப்பாடு என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அங்கே சத்தியம் சிலுவையில் அறையப்பட்டது. போலித்தனம் விரும்பி ஏற்கப்பட்டது. ஆனால் இறுதியில் எரேமியாவின் சத்திய வாக்குகளே உண்மை என்பதை காலம் நிரூபித்தது.

இன்றும் ஜனங்களின் மனநிலை இவ்விதமே உள்ளது. தங்களின் பாவங்களைக் குறித்தோ, பரிசுத்தக் குறைவுகளைக் குறித்தோ, தேவனுக்கு உகந்ததல்லாத வாழ்க்கை நிலைகளைக் குறித்தோ எதையும் பேசாமல், தங்களுக்கு கனிவான வார்த்தைகளையும், இனிமையான தீர்க்கத்தரிசனங்களையும், ஆசீர்வாதமான வாக்குறுதிகளையும் அள்ளி வீசும் ஊழியர்களை அவர்கள் மனதுருக்க மகான்களாகவும், தங்களுக்கு ஆறுதலளிக்க ஆண்டவரால் அனுப்பப்பட்டு விசேஷ வரங்களோடு வந்தவர்களாகவும் எண்ணுகின்றனர்.

ஆனால் அவர்கள் எதை தேவன் பேச விரும்புகிறாரோ, எதை ஜனங்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றாரோ அவைகளையெல்லாம் புறக்கணித்துவிட்டு, எதை ஜனங்கள் விரும்புவார்களோ அதையே பேசிட தங்களை ஆயத்தப்படுத்தி வந்தவர்கள் என்பதை அறியவில்லை. அவர்கள் சத்தியத்தை சிலுவையில் அறைந்து விட்டு, ஜனங்களை பிரியப்படுத்தி எதையோ எதிர்பார்த்து வந்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் அறியவில்லை. அவர்கள் தங்களின் உள்ளான ஓநாய்த்தனங்களை வெளித்தோற்ற ஆட்டுத்தோலால் மறைத்துக் கொண்டு, ஆதாயந்தேடி தந்திரமாய் வந்தவர்கள் என்பதை அறிய வாய்ப்பிருந்தும், அறிந்துகொள்ள விரும்பவில்லை.

அற்புதமா, உபதேசமா?

ஆண்டவராகிய இயேசு எத்தனையோ அற்புதங்களைச் செய்தார். எத்தனையோ ஆச்சர்யமான காரியங்களை நடப்பித்தார். ஆனால் அவைகளை உலகமெங்கும் போய் பிரஸ்தாபம் செய்யும்படி யாரிடமாவது,

எங்காவது, என்றாவது கூறியதுண்டா? இயேசுவோடு கூட இருந்து பிரமிக்கத்தக்க பல அற்புத அடையாளங்களை நேரில் கண்ட சீடர்கள் அவைகளை அடிப்படையாக வைத்து என்றாவது பிரசங்கம் செய்ததுண்டா? அவைகளை அடிப்படையாக வைத்து யாருக்காவது நிருபம் எழுதியதுண்டா? படித்துப் பாருங்கள். வேதாகமத்தில் தேடித் தேடிப் படித்துப் பாருங்கள்.

அவர்கள் சிலுவையைக் குறித்தும், சிலுவை உபதேசங்களைக் குறித்துமே பிரசங்கிக்கவும், எழுதவும் செய்தனர். ஏனென்றால் இயேசு அவர்களுக்கு போதித்த போதனைகளைத்தான் சர்வ சிருஷ்டிக்கும் போய் பிரசங்கிக்க கட்டளை பெற்றிருந்தனர். (மத் – 28:20)

ஆனால் இன்று எங்கு சென்றாலும் அற்புதங்களும் அடையாளங்களும் தான் பிரதான பிரசங்கத் தலைப்புகளாக இருக்கின்றன. ஜனங்கள் அற்புதங்களுக்காக அழைக்கப்படுகின்றனர். அற்புதங்களைக் குறித்துப் பிரசங்கிக்கப்படுகின்றனர். அற்புதங்களை எதிர் பார்க்கவே போதிக்கப் படுகின்றனர். அற்புதங்களைப் பெறுவது தான் கிறிஸ்தவ சாட்சியாகவும் அறிவிக்கப் படுகிறது.

எதற்காக இயேசு வந்தார்?

சிலுவையில் அடிக்கப்பட்டவராக இயேசுவை காண்பிப்பதே பவுலின் பிரதான பிரசங்க நோக்கமாயிருந்தது. (1 கொரி – 2:2) அதுவே புதிய ஏற்பாட்டு சத்தியமாகவும் இருக்கிறது. ஆனால் இன்று எங்கு போனாலும் அற்புதம் செய்கிறவராக இயேசுவை காண்பிக்கின்றார்களேயன்றி, சிலுவையில் அடிக்கப்பட்டவராக இயேசு காட்டப்படவில்லையே. அப்படியே கொஞ்சம் காட்டப்பட்டாலும் உங்களுக்கு அற்புதங்களை செய்யவே இயேசு சிலுவையில் அறையப்பட்டார் என்றல்லவா பிரசங்கிக்கின்றார்கள். என்ன பரிதாபம், பரிதாபம்!

அற்புதம் செய்வதற்காக இயேசு சிலுவையில் அறையப்பட வேண்டிய தேவை ஏற்படவில்லையே. யாத்திராகமம் புத்தகத்தில் நாம் காணும் மாபெரும் அற்புதங்களின் அளவுக்கு வேதத்தின் வேறு எங்கும் நாம் அற்புதங்களை காணவில்லையே. அந்த அற்புதங்களையெல்லாம் செய்வதற்கு அவ்விதம் அற்புதம் செய்ய தேவன் அன்று உலகத்திற்கு மனிதராக வரவில்லையே? சிலுவையிலும் அறையப்படவில்லையே. ஒரு சாதாரண மனிதனாகிய மோசேயைக் கொண்டு தேவன் மாபெரும் அற்புதங்களைச் செய்தாரே.

மனிதர்களின் பாவங்களை சுமந்து தீர்க்கத்தானே இயேசு பூமிக்கு வர நேர்ந்தது. பாவத்திலிருந்து மனிதனை இரட்சிக்கத்தானே இயேசு சிலுவையில் அறையப்பட நேர்ந்தது. மனிதனை பரிசுத்தமாக்கத்தானே அவர் இரத்தம் சிந்தவேண்டி வந்தது.

ஆனால் இன்று பாவத்தைக் குறித்தும், பரிசுத்தமாகுதலைக் குறித்தும், சாட்சி வாழ்க்கையைக் குறித்தும் கறிவேப்பிலை அளவிற்கு பிரசங்கித்துவிட்டு, அற்புதங்கள் பற்றியே துவக்கமாகவும், தொடர்ச்சியாகவும், முடிவாகவும் பிரசங்கிக்கும் காரணம் என்ன?

வேறொன்றுமில்லை. ஜனங்களின் மனதை பிரியப்படுத்தத்தான். கஷ்டங்களில், கவலைகளில், பிரச்சனைகளில், நெருக்கடிகளில் பொருளாதார பற்றாக்குறைகளில் ஜனங்கள் துன்புறுகிறார்கள். அவர்களுக்கு பாவவிடுதலை அல்ல. துன்ப விடுதலையே முக்கிய விருப்பமாக இருக்க முடியும். எனவே அவர்களை பிரியப்படுத்த விரும்பினால் சிலுவைக் குறித்து அல்ல. அற்புதங்களைக் குறித்தே பேச வேண்டும்.

வனாந்திரத்திலே இயேசுவின் அற்புதத்தை எதிர்பார்த்து பல்லாயிரக் கணக்கில் வந்ததோடு, அவர்கள் அவரைத் தேடி அலைந்து காத்தும் கிடந்தனர். ஆனால் இயேசு அவர்கள் எதை விரும்பினார்களோ அதைக் குறித்து பேசாமல், தாம் அவர்களிடம் எதை விரும்பினாரோ அதைக் குறித்துப் பேசினார். அவர் அற்புதத்தைக் குறித்துப் பேசாமல் சத்தியத்தைக் குறித்துப் பேசினார். என்ன நடந்தது? அற்புதம் தேடி வந்தவர்கள் பல்லாயிரம். சத்தியத்தை கேட்க மீதமாக இருந்தவர்கள் வெறும் பன்னிரெண்டு பேர். ஜனங்களின் கஷ்ட சூழ்நிலைகளின் பின்னணியில் அவர்களின் மனதுக்கேற்றபடி பேசி அவர்களை பிரியப் படுத்தாத இயேசுவுக்காக வெறும் பன்னிரெண்டு ஆத்துமாக்கள்தான் மிச்சமாயிருந்தனர். மற்றவர்கள் யாவரும் சத்தியத்தின் வார்த்தைகளால் பிரியப்படாதவர்களாக இடையிலேயே அங்கிருந்து கிளம்பிச் சென்றனர். இன்றும் இதுதானே நிலைமை.

சத்தியத்திற்காக நின்றால்...

எனவேதான் இன்றைய பெரும்பான்மையான ஊழியங்களும், ஊழியர்களும் இயேசுவின் சத்தியத்தைப் பேசாமல், இயேசுவின் அற்புதங்களையேப் பேசுகின்றனர். ஏனென்றால் இயேசுவின் அற்புதங்களுக்காக ஆயிரக்கணக்கில் வருவார்கள். ஆனால் இயேசுவின் சத்தியங்களுக்காக வெகு சிலரே வருவார்கள். பெருங்கூட்டங்களைக் காண விரும்புகின்றவர்களும், பெருந் தலைவர்களாக மாற விரும்புகின்ற

வர்களும் என்ன செய்வார்கள்? சத்தியத்திற்காக நின்றால் ஆயிரங்களையும், லட்சங்களையும் காண்பது எளிதல்ல.

எனவே என்ன நடைபெறுகிறது. சத்தியம் சிலுவையிலடிக்கப் படுகிறது. சிலுவையின் உபதேசங்கள் சிலுவையில் அறையப்படுகிறது. பெரும்பான்மையான ஜனங்கள் பிரியப்படுகிறவிதமாக செயல்பட வேறு வழியில்லை. ஏனென்றால் பெரும்பாலான ஜனங்கள் தங்கள் வாழ்க்கைத் துன்பங்களாகிய சிலுவைகளிலிருந்து விடுதலை அடையத்தான், இறைப்பணி ஊழியர்களிடம் வருகிறார்களேயன்றி, இயேசுவின் சத்தியமாகிய இன்னொரு பாரச் சிலுவையை சுமக்க அல்ல.

ஆனால் இயேசுவின் சத்தியமாகிய சிலுவையை சுமக்க முன்வருவதின் வாயிலாகவே, வாழ்க்கையின் பலவித துன்பச் சுமைகளின் அழுத்தங்களிலிருந்து விடுதலையடைவதற்கான வழி ஏற்படும். வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருகிறேன் என்று சொன்ன இயேசு, தொடர்ந்து என்ன சொன்னார்? "என் நுகத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றார். (11:29) அவருடைய சத்தியமாகிய நுகத்தை ஏற்றுக் கொள்வதின் மூலமாகவே உலகத்தின் துன்பங்களிலிருந்து இளைப்பாறுதல் கிடைக்கின்றது.

இயேசுவின் போதனைகளை ஏற்றுக் கொள்ள ஜனங்களை அழைப்பது என்பது, ஒரு கசப்பான மருந்தை நோயாளியிடம் ஏற்கச் சொல்வது போன்றது. அது அவ்வளவு விருப்பமாயிராது. அதற்குப் பதிலாக சற்று இனிப்பாக எதையாவது கொடுத்தால், அது மிகவும் விருப்பமாயிருக்கும். ஆனால் அது நோயாளியை மேலும், மேலும் நோயாளியாக்குமேயன்றி, எந்த சுகத்தையும் கொண்டு வராது.

எனவேதான் உண்மையான சிலுவையின் உபதேசத்தின் அடிப்படைக்கு தங்களை ஒப்புக் கொடுக்காமல், அற்புதங்கள், நன்மைகள் ஆகியவற்றின் அடிப்படைக்கு தங்களை ஒப்புக் கொடுத்தவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் தரம் மேலும் மேலும் கீழ்நோக்கியே செல்கின்றது.

இவ்விதம் கூறுவதால் அற்புதங்கள் இல்லை என்றோ, அதிசயங்கள் இல்லை என்றோ, அவைகளை எதிர்பார்ப்பது கூடாது என்றோ, சுவிசேஷ அறிவிப்புகளுக்கு அவை அவசியமானவை அல்ல என்பதோ அர்த்தமல்ல. அற்புதங்களை பற்றி பேசுவதும், எதிர்பார்ப்பதும் விசுவாசத்திற்கு அப்பாற்பட்ட விஷயங்கள் அல்ல.

ஆனால் சிலுவையில் மனிதனின் பாவங்களுக்காக அடிக்கப்பட்ட இயேசுவை அடிப்படையாக சுவிசேஷம் அறிவித்து, மனிதனின் பாவத்திலிருந்து விடுவிக்கிறவராக இயேசுவை பிரதானமாக காண்பிக்காமல், அற்புதங்களுக்காகவும், வல்லமையான சில செயல் களுக்காகவுமே ஜனங்களை அழைப்பதே தவறு. ஏனெனில் அது வேத அடிப்படையானது அல்ல.

வேத அடிப்படை ஒரு சிலுவை

ஆனால் வேத அடிப்படையில் எதையாவது செய்ய வேண்டுமானால், அது ஒரு சிலுவை சுமக்கும் அனுபவமே. எனவேதான் இன்றைய பெரும்பாலான ஊழியர்கள் வேத அடிப்படையிலான உபதேசங்களை சிலுவையில் அறைந்து விட்டு, ஜனங்களின் மனநிலைகளின் அடிப்படையில் இலகுவான உபதேசங்களை உருவாக்கி கொள்கின்றார்கள். ஜனங்களை கர்த்தருடைய உபதேசங்களுக்கு இசைந்து போகிறவர்களாக மாற்ற வேண்டிய ஊழியர்கள், உபதேசங்களை ஜனங்களின் மனதிற்கு இசையும் விதமாக மாற்றிக் கொள்கின்றனர். உபதேசங்களைக் கொண்டு ஜனங்களை செதுக்க வேண்டியவர்கள், ஜனங்கள் பிரியப்படும் விதமாக உபதேசங்களை செதுக்கிக் கொள்கின்றனர்.

அன்று ஆரோன் அந்த தவறைத்தான் செய்தான். தேவனை அறிந்த ஒரு மனிதனாக அவன் இருந்த போதிலும், ஜனங்களின் மனதுக்கு ஏற்றபடி இயங்கும் மாய்மாலத்தில் அவன் விழுந்தான். உண்மையான தேவனை அறிந்திருந்த அவன் ஜனங்கள் விரும்புகின்ற விதமான ஒரு கடவுளை உருவாக்கி அவர்களை பிரியப்படுத்தினான். எந்த ஒரு விக்கிரகத்தையும் உருவாக்கவோ, வழிபடவோக் கூடாது என்பது தேவனுடைய கட்டளையாயிருந்தது. ஆனால் ஜனங்களின் பிரியத்தைப் பெற விரும்பிய அவன் சத்தியத்தை சிலுவையில் அறைந்துவிட்டு, தன்னுடைய வசதிக் கேற்ப ஜனங்களை திருப்திப்படுத்தும் விதமாக ஒரு பொய்யான கடவுளை உருவாக்கி தேவ கோபத்தை சம்பாதித்தான்.

ஆம். ஊழியரின் நோக்கமாயினும், ஊழியங்களின் நோக்கமாயினும் அது தேவனை பிரியப்படுத்துவதாகவே இருக்க வேண்டும். ஜனங்களைக் கவரவும், அவர்களுக்கு பிரியப்படவும் விரும்பி, கர்த்தருடைய அடிப்படை சிலுவை உபதேசப் பாதையை விட்டு விலகிச் செல்வது வேதத்தின்படி சபிக்கப்படுகிற ஒரு அனுபவமாகும். (கலா – 1:10)

பவுல் அப்போஸ்தலன் தான் சுவிசேஷத்தை போதித்த விதமாகப் போதியாமல் சற்று வித்தியாசமாக போதித்தவர்களை சபிக்கப்படக் கடவர் கள் என்றான். அப்படிப்பட்டவர்கள் தறிப்புண்டுப் போனால் நலமாயிருக்கும்

என்று கோபமாகக் கூறுகின்ற அளவிற்கு அது அவனுடையப் பார்வையில் மிகவும் தவறான விஷயமாகத் தோன்றியது. (கலா – 5:12)

கிருபையினால், விசுவாசத்தின் மூலம் நிறைவேற்ற வேண்டிய தேவ நீதியை, நியாயப்பிரமாணக் கிரியைகளின் மூலம் நிறைவேற்றத் தூண்டும் விதமாக, சுவிசேஷத்தை சற்று மாற்றி பிரசங்கித்ததால் பவுலின் பார்வையில் அது அவ்வளவு பெரிய தவறாகத் தோன்றியது. அதைத்தான் அவன் வேறே சுவிசேஷம் என்றான். (கலா – 1:6)

பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தை பின்பற்ற போதித்ததே அவ்வளவு பெரிய தவறாயிருந்தது. அப்படியானால் இன்று மனிதர்களின் பாவங்களை சுமந்துத் தீர்க்க இயேசு வந்தார் என்ற சுவிசேஷ செய்தியை இருட்டடிப்பு செய்து, மனிதர்களுக்கு அற்புதங்கள் மூலமாக நன்மை செய்ய வந்தார் என்ற விதமாக தொடர்ந்து போதிப்பது எவ்வளவு பெரிய தவறு. பாவங்களிலிருந்து விடுவிக்க வந்த கர்த்தராகிய இயேசுவை, ஒரு சமுதாய சேவகரைப் போல காண்பிப்பது எவ்வளவு பெரிய பாவம்.

பலவித துன்பங்களின் நடுவில் அல்லல்படும் ஜனங்களுக்கு கர்த்தர் நன்மை செய்வார். அற்புதம் செய்வார் என்று பிரசங்கிப்பதே அவர்களுக்கு ஆறுதலாகவும், தேறுதலாகவும், பிரசங்கிப்பதற்கு எளிதாகவும் இருக்க முடியும். மனந்திரும்புங்கள், பாவங்களைவிட்டு விலகுங்கள், குணநலன் களை மாற்றுங்கள். பரிசுத்தமாகுங்கள் என்று போதிப்பதைவிட, ஆறுதலான பிரசங்கங்கள் செய்வதுதான் ஜனங்களுக்கு நம்பிக்கையை ஊட்டி கர்த்தரை ஏற்கத் தூண்டும் என்று நாம் எண்ணலாம்.

ஆனால் நம்முடைய மனதுக்கு சரியாக தோன்றுகிறபடி சுவிசேஷத்தை அறிவிக்க நமக்கு அதிகாரம் இல்லையே. கர்த்தர் எதைச் சொன்னாரோ, வேதம் எதைச் சொல்லுகிறதோ அதைத் தானே நாம் செய்தாக வேண்டும். நோயாளி விரும்புகின்ற விதமாக அல்ல, மருத்துவர் நலமானது என்று நம்புகின்ற விதமாகத்தானே மருந்து கொடுக்க வேண்டும். பாவத்தைக் குறித்தும், பரிசுத்தத்தைக் குறித்தும் பேசி ஜனங்களை கர்த்தரோடு சேர்ப்பதே தேவனுடையப் பார்வையில் நலமாகத் தோன்றும் போது, எப்போதும் நன்மை செய்கிறார், நன்மை செய்கிறார் என்று நாம் விரும்பிய விதம் இயேசுவை அறிவிப்பது அவருக்கு பிரியமாயிராதே.

நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரன் அல்லவே (கலா – 1:10)

நாங்கள் மனுஷருக்கல்ல. எங்கள் இருதயங்களைச் சோதிக்கிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம். 1 தெச – 1:4

○ ○ ○

2

மெய்யான தேவன் எங்கே ?

ஆசா ராஜாவின் காலத்தில் அசரியா என்ற தீர்க்கத்தரிசி ஆசா ராஜாவிடம் வந்து சில காரியங்களை உணர்த்தினான். அக்கால கட்டத்தில் நிலவிய ஆவிக்குரிய பின்மாற்ற நிலைகளை சுட்டிக்காட்டினான். அங்கே அவன் மூன்று முக்கிய விஷயங்கள் தேசத்தில் இல்லாமலிருப்பதை தெளிவாகக் கூறினான்.

1. ***இஸ்ரவேலிலே அநேக நாளாக மெய்யான தேவன் இல்லை***
2. ***உபதேசிக்கிற ஆசாரியன் இல்லை.***
3. ***வேதம் இல்லை.***

அக்கால இஸ்ரவேல் மக்களின் நடுவில் மெய்யான தேவன் இல்லை என்று சகரியா தீர்க்கத்தரிசி கூறினான். மெய்யான தேவன் இல்லை என்றால், மெய்யான தேவன் அவர்களின் நடுவில் வெளிப்படவில்லை என்பதே அர்த்தம். யாரும் அங்கே மெய்யான தேவனை ஆவலாய் தேடவுமில்லை. தேவனுடைய உண்மையான செயல்பாடுகளும் அங்கு இல்லை. உண்மையான தேவனின் பிரசன்னத்தை இஸ்ரவேலர் இழந்திருந்தனர். தேவனற்றவைகளையெல்லாம் அவர்கள் தேவனாக எடுத்துக் கொண்டு உண்மையான தேவனைத் தேடும் உணர்ச்சியை இழந்து போனார்கள்.

இன்றைய கிறிஸ்தவ சபைகளின் நடுவிலும் இவ்விதமான ஒரு சூழ்நிலை நிலவுகிறது. இன்றைய பெரும்பாலான சபைகள் மெய்யான தேவனை காண்பிக்கவுமில்லை. சபையார் மெய்யான தேவனைக் காணவுமில்லை. சபைத் தலைவர்களும், தேவ ஊழியர்களும் ஒரு உண்மையான தேவனைக் காண்பிக்கத் தவறிப் போனார்கள்.

இன்று தேவனுடைய மனதுருக்கம், அன்பு, இரக்கம், நன்மை செய்யும் தயவு, அற்புதம் செய்யும் வல்லமை, ஆகியவை மட்டுமே பிரசங்கங்களின் கருப்பொருளாகவும், பாடல்களின் மையக்கருத்துக்களாகவும் விளங்குகின்றன. ஜனங்களுக்கு நன்மை செய்கிற அற்புதம் புரிகிற, ஆறுதல் செய்கிற ஆசீர்வதிக்கிற ஒரு தேவன் மட்டுமே காண் பிக்கப்படுகின்றார். ஜனங்களும் அவ்விதமான ஒரு தேவனை மட்டுமே அறிந்திருக்கின்றனர்.

மெய்யான தேவனை அறிவிப்பதென்றால் அவருடைய ஒரு சில குணாதிசயங்களை மட்டுமே அறிவிக்காமல், அவருடைய எல்லா குணாதி சயங்களையும் தெளிவாகக் காண்பிக்க வேண்டும். அவருடைய நீதியை அறிவிக்காமல், அவருடைய பரிசுத்தத்தை அறிவிக்காமல், அவருடைய உண்மையை அறிவிக்காமல், அவருடைய கோபத்தை அறிவிக்காமல், அவருடைய எதிர்பார்ப்புகளையும், கண்டிப்பான கறார் நிலைகளையும் அறிவிக்காமல் அவருடைய நியாய நெறி முறைகளையும், சத்தியங்களையும் அறிவிக்காமல், அன்பு, இரக்கம், அற்புதம், போன்றவற்றையே தேவனின் மொத்த குணநலன்களாக அறிவிப்பது உண்மையான தேவனை அறிவித்தல் ஆகாது. அங்கே மெய்யான தேவன் வெளிப்படவும்மாட்டார். அவருடைய பிரசன்னத்தை அங்கே காணவும் முடியாது.

தேவனின் குணநலன்கள் அரை குறையாகப் பிரசங்கிக்கப்படுகிற இடங்களில் மெய்யான தேவன் வெளிப்படமாட்டார். தேவனுடைய ஒரு சிறுப் பகுதியைபற்றி மட்டுமே அறிந்து, அதன் அடிப்படையில் அவரைத் தேடுகின்றவர்கள் ஒருபோதும் மெய்யான தேவனை காணவும்மாட்டார்கள்.

குருடர்களும் யானையும்

குறிப்பிட்ட ஒரு தேவ ஊழியர் இயேசு கிறிஸ்துவின் அன்பைப் பற்றி மட்டுமே எந்த கூட்டத்திலும் பேசுவார். அவருடைய அற்புத வல்லமையைப் பற்றியே பத்திரிகைகளில் விசேஷ செய்திகள் எழுதுவார். இயேசுவின் அன்பைப் பற்றி மட்டுமே பேசவும் எழுதவும், அவர் சொன்ன காரணம்" அவர் எனக்கு அவரின் அன்பைப்பற்றி மட்டுமே அறிந்திடவும், பேசவும் விசேஷ கிருபைத் தந்துள்ளார்" என்பதாகும். "இயேசு அன்பானவர்" என்பது மட்டுமே எனக்குத் தெரியும். எனவே வேறெதையும் பற்றி அறிய நான்

ஆசைப்படவில்லை. அவருடைய அன்பைக் குறித்த அறிவு மட்டுமே போதுமானது"

இது குருடர்கள் யானை பார்த்த கதை போன்றது. யானையின் காதைத் தொட்டவனுக்கு யானை என்பது முறம் போன்றது. யானையின் காலைத் தடவிப் பார்த்தவனுக்கு யானை என்பது மரம் போன்றது. யானையின் வாலைத் தடவிப் பார்த்தவனுக்கு யானை என்றால் துடப்பம் போன்றது.

பெரும்பாலான இன்றைய தேவ ஊழியர்கள் இந்த குருடர்களைப் போல தேவனுடைய ஏதாவது ஒரு குணாதிசயத்தை மட்டும் அறிந்து அதனையே தேவன் என்று எண்ணி விடுகிறார்கள். எனவே அவர்களின் பிரசங்கத்தைக் கேட்பவர்களும் குருடர்களைப் போல கர்த்தருடைய ஏதாவது ஒரு பக்கத்தை மட்டுமே அறிந்து அதனையே தேவன் என்று எண்ணிவிடுகிறார்கள். போதிக்கிறவர்களும், கேட்கிறவர்களும் குருடர்களைப் போல சரியான வழிகாட்டுதலின்றி மீண்டும் மீண்டும் குழியிலேயே விழுகிறார்கள். எனவே மெய்யான தேவனுடைய சமுகம் இல்லாமல் போகிறது.

இன்று நூறு கிறிஸ்தவ பத்திரிகைகளைப் படித்தால் 98 பத்திரிகைகளிலும் இயேசு அற்புதம் செய்கிறார் என்ற செய்தி மட்டுமே இருக்கும். தொலைக் காட்சிகளில் வரும் கிறிஸ்தவ நிகழ்ச்சிகளைக் கவனித்துப் பாருங்கள். 99 சதவீத நிகழ்ச்சிகளில் கர்த்தர் அற்புதம் செய்கிறவர் என்ற செய்தி மட்டுமே இருக்கும். மெய்யான தேவனைக் காட்டுவாரும் இல்லை. மெய்யான தேவனை காண்பாருமில்லை.

தேவன் அன்றைய எபிரேயர்களின் நடுவில் ஏராளமான அற்புதங்களை செய்தார். ஆயினும் அவர் தம்மைப் பற்றிக் கூறும் போது, "நான் அற்புதர், எனவே நீங்கள் என்னிடம் அற்புதம் பெற வாருங்கள்" எனக் கூறவில்லை. அதற்குப் பதிலாக "நான் பரிசுத்தராயிருக்கிறதுப் போல, நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாய் இருங்கள்" என்றுதான் சொன்னார். (லேவி : 20: 26)

அவர் தம்முடைய பரிசுத்த நிலையைத்தான் முன்னிலைப்படுத்தி தம்மைக் குறித்து வெளிப்படுத்தினார். ஆனால் இன்றோ அவரை பரிசுத்தராக முன்னிலைப்படுத்தாமல் அற்புதராகவே முன்னிலைப் படுத்துகிறோம். பரிசுத்தர் என்ற பதம் தேவனைத் துதிப்பதற்காகவும், ஸ்தோத்தரிப்பதற்காகவும் உபயோகப்படுகிறதேயன்றி, அது பெரும்பாலும் தியான தலைப்பாக மாறவில்லை. எனவே மெய்யான தேவனைக் குறித்த அரைவேக்காட்டு அறிவு தேவ ஊழியர்களின் அறிவாகவும், தேவனைக் குறித்த அரை

குறைவான அறிவு விசுவாசிகளின் அறிவாகவும் உள்ளது. எனவே மெய்யான தேவனை ஜனங்கள் கண்டறியாத நிலை தொடருகிறது.

யார் காரணம்

ஆசா ராஜாவின் ஆட்சிகால துவக்கத்தில் மெய்யான தேவன் தேசத்தில் தேடப்படவில்லை. அவர் வெளிப்படவில்லை. அதற்கு முக்கிய காரணம் உபதேசிக்கின்ற ஆசாரியர்கள் இல்லை. தேவனுடைய சத்தியங்களையும், நியாயப்பிரமாணங்களையும் ஜனங்களுக்கு உபதேசித்து, அவர்களை தேவனுக்கு பிரியமான விதத்தில் வழிநடத்துகின்ற ஆசாரியர்கள் அன்று இருக்கவில்லை. ஆசாரியர்கள் முக்கியமாக ஜனங்களை சரியான உபதேசத்தின் பாதையில் நடத்த வேண்டும். சத்திய வேதம் அவர்கள் வாயில் இருக்க வேண்டும். ஏனென்றால் ஜனங்கள் வேதத்தை அவர்கள் வாயிலே தேடுவார்கள். (மல் – 2:6,7)

ஆனால் அன்று வேதத்தை சரியாக போதிக்கின்ற ஆசாரியர்கள் இல்லை. எனவே தேசத்தில் வேதமும் இல்லை. இன்றும் அப்படியான ஒரு நிலைமையை சபைகளின் நடுவில் காண்கின்றோம். இன்று பெரும்பாலான போதகர்களும், சுவிசேஷகர்களும் கர்த்தருடைய வேதத்தை போதிக்க வேண்டிய கரிசனையான கடமையிலிருந்து வெகு தூரம் விலகிப்போய்விட்டார்கள்.

அவர்கள் பிரசங்கங்கள் செய்கிறார்கள், உண்மைதான். அவர்கள் புத்தகங்கள் எழுதுகிறார்கள் உண்மைதான். அவர்கள் மாதப் பத்திரிகைகளில் பல கட்டுரைகள் வரைகின்றார்கள், உண்மைதான். ஆனால் அவைகளில் வேதம் வெளிப்படவில்லை. அவைகளில் கர்த்தருடைய உபதேசத்தின் சாரம் இல்லை.

அவர்களின் பிரசங்கங்களும், பத்திரிக்கைக் கட்டுரைகளும் உபதேசங்களாயிராமல், வெறும் விளம்பர செய்திகளாகவே உள்ளன. வானொலியிலும், தொலைக்காட்சியிலும் வர்த்தக விளம்பரங்கள் செய்யப்படுவது போல, இவர்கள் இயேசுவின் அன்பு, இரக்கம், அற்புதம், அதிசயம், வல்லமை இவைகளைப் பற்றி விளம்பரம் செய்கின்றார்கள். இயேசு நேசிக்கிறார், இயேசு அற்புதம் செய்கின்றார், இயேசு உதவி செய்கின்றார், இயேசு சுகமாக்குகிறார் என்று இயேசு எதையெல்லாம் செய்வார் என்ற விளம்பரத்தையே பிரசங்கங்களாகச் செய்கின்றார்கள்.

அவர்கள் வேதாகமத்திலிருந்து ஜனங்கள் உற்சாகமடையத்தக்க பகுதிகளை மட்டும் பிரித்தெடுத்து அவைகளையே திரும்ப திரும்ப பிரசாரம் செய்கின்றார்கள். அவர்கள் தேவன் நன்மை செய்வது சம்பந்தமான வசனங்களையும் வாக்குத்தத்தங்களையும் பிரித்தெடுத்து அவைகளையே பிரசங்கங்களாக பேசுகிறார்கள். எனவே கர்த்தரால் என்ன நன்மை பெற முடியும் என்ற அறிவு மட்டுமே ஜனங்களுக்கு ஊட்டப்பட்டு, அந்த அறிவின் அடிப்படையிலேயே அவர்கள் தேவனிடம் எதிர்பார்க்

கின்றார்கள். அங்கே மெய்யான தேவன் தேடப்படவும் இல்லை. அவர் வெளிப்பட வாய்ப்பும் இல்லை.

அங்கே தேவன் அருளிய வேதாகமம் அவருடைய எண்ணங்களையும், சிந்தையையும், நியாயங்களையும், நோக்கங்களையும், கொள்கைகளையும், திட்டங்களையும் பிரதிபலிக்கும் வேதாகமமாகக் கருதப்படாமல், நன்மை பெறுவது சம்பந்தமான தகவல் அறியும் புத்தகமாக எண்ணப்படுகிறது. அநேகருக்கு வேதாகமம் என்பது நமக்கு எந்தெந்த விதத்தில் அவர் நலமான நன்மைகளைச் செய்வார் என்பதை அறிந்து கொள்ள அளிக்கப்பட்ட புத்தகமாகவே உள்ளது. அநேகருக்கு வேதாகமத்திலுள்ள தேவனுடைய நியாயங்களும், சட்ட திட்டங்களுமாகிய வேதம் தெரியாது. அவர்களுக்கு தெரிந்ததெல்லாம் வேதாகமம் முழுவதும் பரவிக் கிடக்கும் ஏராளமான ஆசீர்வாத வாக்குறுதிகளே. ஏனென்றால் ஏராளமான போதகர்கள் கர்த்தருடைய வேதத்தைப்பற்றி எதுவும் பேசாமல், வேதாகமத்திலுள்ள வாக்குத்தத்தங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

சத்திய ஓசையா? விளம்பர ஓசையா?

இன்று பெரும்பாலான சபைகளிலும், சுவிசேஷ மேடைகளிலும் இயேசு நன்மை செய்கின்றார் என்ற விளம்பர பேரோசை கேட்கிறதேயன்றி, இயேசு தம்மை பின்பற்றி வர அழைக்கும் சத்தியத்தின் ஓசையை கேட்க முடியவில்லை. நம்மிடத்தில் நீதியை, பரிசுத்தத்தை, உண்மையை, நேர்மையை, ஒழுங்கை, சாட்சியை, கட்டுப்பாட்டை, அர்ப்பணிப்பை, தாழ்மையை, அன்பை, சுய வெறுப்பை, தயாள குணத்தை தேவன் மிக முக்கியமாக விரும்பி எதிர்பார்க்கின்றார். ஆனால் இந்த தேவனுடைய உணர்வை வெளிப்படுத்தும் சபைகளும், போதகர்களும் மிக, மிகக் குறைந்து போய்க் கொண்டிருக்கின்றன.

கர்த்தருடைய வழியில் நடக்கும்படி விசுவாசிகளுக்கு உபதேசிக்கும் உபதேசிகள் மிகவும் குறைவாக உள்ளனர். நாம் எப்படி வாழ வேண்டும், நம்முடைய செய்கைகள் எப்படியிருக்க வேண்டும். நம்முடைய குணநிலைகள் எப்படி மாறவேண்டும். நம்முடைய நிலைப்பாடுகளும், கொள்கைகளும் எவ்விதம் இருக்கவேண்டும் என்பது போன்ற உபதேசங்களை சரியாக உபதேசிக்கும் கரிசனையான போதகர்கள் குறைந்து போனதால் ஜனங்களின் நடுவில் மெய்யான தேவன் போதுமான அளவு வெளிப்படவில்லை. வேதமும் வெளிப்படவில்லை.

அன்று மோசே அற்புதங்கள் பலவற்றை ஜனங்கள் நடுவில் செய்திருந்தும், அவன் தேவனுடைய கட்டளைகளையும், போதனைகளையும் மிகக் கவனமாக கடைப்பிடிப்பது தொடர்பாகவே மிகுதியானக் கரிசனையுடன் பேசினான். அவன் ஒரு விளம்பர மனிதனாகயிராமல், கர்த்தருடைய வழிகளையும், நியாயங்களையும் மிகத் தெளிவாக திரும்ப

திரும்ப வற்புறுத்தும் சரியான உபதேசியாக விளங்கினான்.

ஏனென்றால் அவன் கர்த்தரோடு நெருங்கிப் பழகி அவருடைய நீதி நியாயங்களையும், உணர்வுகளையும், விருப்பு வெறுப்புகளையும், எதிர்பார்ப்புகளையும் நன்கு அறிந்து வைத்திருந்தான். எனவே அவருக்கு முன்பாக ஜனங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் குறித்து அவன் அதிகமாக பேசினான்.

அவனுக்குள் ஒரு ஆத்ம பாரமும் கரிசனையும் இருந்தது. எப்படியாவது ஜனங்கள் கர்த்தருடைய ஆசீர்வாதங்களை இழந்து போகாமல் அவைகளை அனுபவிக்க வேண்டுமே என்ற தாகம் இருந்தது. அவர்களுக்கு கர்த்தரைக் குறித்தும் அவருடைய வழிகளைக் குறித்தும் சரியான எச்சரிப்பு உணர்வைக் கொடுக்காவிட்டால், கர்த்தருக்கு முன்பாக எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவர்கள் அறியாமல் போய் விடுவார்களே என்ற ஆதங்கம் இருந்தது. எனவே கர்த்தர் என்னென்ன நன்மைகள் செய்வார் என்பதைக் குறித்த விளம்பரத்திற்கு அவன் அதிக நேரத்தை செலவிடாமல், கர்த்தருக்கு முன்பாக ஞானமாகவும், உண்மையும், உத்தமுமாக நடப்பதைக் குறித்துப் பேசவே அதிக நேரங்களை செலவிட்டான். எனவே தேவனுடைய பரிசுத்த ஒழுங்குகளைக் குறித்து திரும்ப, திரும்ப பேசிக்கொண்டிருந்தான்.

இவ்விதமான தேவனைக் குறித்த தனிப்பட்ட அறிவும், ஜனங்களைக் குறித்த உண்மையானக் கரிசனையும் பாரமும் இன்றைய பெரும்பாலான போதகர்களிடம் இல்லாமல் போனதால்தான், ஜனங்கள் தேவாசீர்வாதங் களை பெறும் வழிகளை அறியாமல் போகிறார்கள். ஏனென்றால் ஜனங்களுக்கு தேவன் எதைச் செய்ய விரும்புகிறார் என்பதைப்பற்றி மட்டுமே அவர்கள் பேசிவிட்டு, ஜனங்கள் என்ன செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்பதை சொல்லாமல் போகிறார்கள். சொல்லத் தெரியாமையும் ஒரு காரணம். எனவே ஜனங்கள் மெய்யான தேவனையும், மெய்யான தேவ வழிகளையும் அறியாமல், மேய்ப்பனற்ற மந்தையின் ஆடுகளைப் போல நல்ல மேய்ச்சலைக் கண்டடைய முடியாமல் தொய்ந்து போகிறார்கள்.

ஆம். கர்த்தருக்கு இன்று தேவை தம்முடைய ஆசீர்வாதங்களைக் குறித்து சிறப்பாக விளம்பரம் செய்கின்றவர்கள் அல்ல. தம்மை அறிய வேண்டிய விதமாக அறிந்து தம்முடைய வழிகளையும், நியாயங்களையும் கரிசனையோடு போதிக்கின்ற ஆத்மபாரமுடைய உபதேசிகளே தேவைப்படுகின்றனர். ஏனென்றால் அப்போதுதான் மெய்யான தேவனை ஜனங்கள் அறிந்து அவருடைய மெய்யான வழியில் நடக்க முன்வருவார்கள்.

○ ○ ○

ஆரோனின் கன்று குட்டி

தேவனுடைய மனிதனாகிய மோசே பல நாட்கள் சீனாய் மலையில் தேவனோடு தங்கியிருந்தான். இஸ்ரவேல் மக்களுக்காக தேவன் கற்பித்த சட்ட திட்டங்களை பெற்றுக் கொண்டு மலையிலிருந்து கீழே இறங்கி வந்தபோது, அவனுக்காக பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

அங்கே இஸ்ரவேல் ஜனங்கள் அவனுடையப் பார்வையில் அருவருப்பானவர்களும், பகைவர்கள் நடுவில் அவமானப் படத்தக்கவர்களாகவும், வெட்கப்படத்தக்க விதமான நிர்வாணிகளாகவும் காணப்பட்டார்கள். (யாத் – 32:25) அவர்கள் கன்றுக்குட்டி கடவுளை உருவாக்கி அதற்கு முன்பாக ஆடிப்பாடி, கூத்தடித்து, கொண்டாடி ஒழுங்கீனமாகக் காணப்பட்டார்கள்.

அவ்விதம் அவர்கள் அருவருப்பாகவும், நிர்வாணிகளாகவும் காணப்பட காரணம் யார்? அவர்களை அவ்விதம் வெட்கப்படத்தக்க நிலைக்குக் கொண்டு வந்தவன் யார்? பிற மத மனிதன் அல்ல. விக்கிரக வழிபாட்டாளர்கள் அல்ல. அந்நிய தெய்வங்களுக்கு பூஜை செய்கிற பூஜாரி அல்ல. அவர்களை தாறுமாறான அருவருப்பின் மக்களாக மாற்றியது வேறு யாரும் அல்ல. தேவனுடைய ஜனங்களை எகிப்திலிருந்து வழி நடத்தி வந்த மோசேயோடு இணைந்து செயல்பட்ட ஆசாரியனாகிய ஆரோன்தான்.

அவன் மிகப் பெரிய ஒரு ஊழியத்தின் முக்கியப் பொறுப்பில் இருந்தவன். ஜனங்களை சத்தியத்தில் நடத்த வேண்டியவன். தேவனுக்காக நின்று ஜனங்களை தேவனுக்கேற்றவர்களாக மாற்ற வேண்டியவன் ஜனங்களுக்கு சரியான வழிகளைக் காட்டி அவர்களை பரிசுத்த அலங்காரமுடையவர்களாக ஆயத்தப்படுத்த வேண்டியவன்.

ஆனால், அந்தோ, பரிதாபம். அவன் ஜனங்களை நிர்வாணிகளாக மாற்றியிருந்தான். ஜனங்களுக்கு தவறான ஒரு கடவுளைக் காட்டி அவர்களுக்கு அருவருப்பான ஒரு தோற்றத்தை எற்படுத்தியிருந்தான். தவறான வழிபாட்டு முறையை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்து, பிற ஜனங்கள் மத்தியில் அவர்களை நகைப்பிற்குரியவர்களாக மாற்றியிருந்தான். மொத்தத்தில் ஜனங்களை அழகுபடுத்த வேண்டியவன், அசிங்கப்படுத்தி விட்டான்.

மோசே அவனைப் பார்த்து "இந்த ஜனங்கள் மேல் இந்த பெரும்பாதகத்தை சுமத்துகிறதற்கு இவர்கள் உனக்கு என்ன செய்தார்கள்?" என்று கேட்டான். (யாத் – 32:21)

இன்றைய கிறிஸ்தவ உலகத்தில் இது போன்ற ஆரோன்கள் ஏராளம். ஏராளம். அவர்கள் மிகப்பெரிய ஊழியர்கள்தான். மிகப்பெரிய ஊழியப் பொறுப்பில் இருப்பவர்கள்தான். மிகப் பெரிய சாதனை மன்னர்கள்தான். அவர்கள் மிகப்பெரிய ஸ்தாபனங்களை உருவாக்கி உலகளாவிய அளவிற்கும் அதனை விரிவுபடுத்தியவர்கள்தான். ஆனால் ஜனங்களை தங்களின் தவறான ஆவிக்குரிய கொள்கைகளாலும், வேதத்தை மையமாகக் கொள்ளாத போதனைகளாலும், தப்பிதமான வழிபாட்டு முறைகளினாலும் நிர்வாணிகள் என்ற நிலைமைக்கு கொண்டு வந்து விட்டார்கள். ஜனங்களை பரிசுத்த சாயலுடையவர்களாக மாற்ற வேண்டியவர்கள், தேவனுக்கு முன்பாக அருவருப்பாகக் காணப்பட செய்துவிட்டார்கள்.

இன்று ஆலயங்களுக்கு செல்கின்ற மக்கள் அநேகர். ஆண்டவரை தீவிரமாக விசுவாசிக்கின்ற விசுவாசிகள் அநேகர். தங்களை ஆவிக்குரியவர்களாக எண்ணியதோடு அப்படியே பிறருக்கு தங்களை அடையாளப் படுத்திக் கொள்வோர் அநேகர். ஆராதனைகளில் ஈடுபட்டு, அற்புதங்களை எதிர்பார்த்து, பரமக்கானானை நோக்கி பயணம் செய்கிறவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்வோர் அநேகர். தாராளமாக காணிக்கை வழங்கி தாகமாக ஊழியம் செய்வோர் அநேகர்.

ஆனால் அவர்களில் பெரும்பான்மையினரிடம் எந்த ஆவிக்குரிய அழகும் இல்லை. அவர்களிடம் எந்த பரிசுத்த பிரகாசமும் இல்லை. அவர்களிடம் எந்த குணநிலை மேன்மைகளும் இல்லை. அவர்கள் பரிசுத்த

அலங்காரமாகக் காணப்படுவதற்குப் பதிலாக பிறமதத்தினர் நடுவில் தூஷிக்கப்படத் தக்க அருவருப்பாக தோன்றுகிறார்கள். அவர்களிடம் தெய்வீகக் காட்சியும் இல்லை. மாட்சியும் இல்லை.

இதற்கு பிரதானக் காரணம் யார்? அவர்களை நடத்துகின்ற ஆரோன்கள். அவர்களை நடத்துகின்ற ஆரோன்களின் தவறானப் போதனைகளினாலும், வேதத்தோடு ஒத்துப்போகாத, தப்பிதமான உபதேசங்களினாலும், தங்களின் மனம் போதித்த நூதனமான ஆன்மீகக் கொள்கைகளினாலும் ஜனங்களை பரிசுத்த அலங்காரமானவர்களாக மாற்றுவதற்குப் பதிலாக தேவனுக்கு முன்பாக நிற்க முடியாத நிர்வாணிகளாக மாற்றினார்கள். ஜனங்களை பரிசுத்தவான்களாக உருவாக்க வேண்டியவர்கள் வழி தவறி அவர்களை பரவசவான்களாக மாற்றுவதில் தீவிரமானார்கள். விண்ணக வாஞ்சையை அவர்களுக்கு ஊட்ட வேண்டியவர்கள், மண்ணுலக ஆசைகளால் மயக்கிப் போட்டார்கள். அவர்கள் ஜனங்களுக்கு கவர்ச்சிகரமான ஒரு கிறிஸ்தவத்தைக் காட்டினார்கள். ஆனால் அவர்களுக்கு அஸ்திபாரமுடைய ஒரு கிறிஸ்தவ வாழ்க்கையின் தேவையை அறிவிக்க அலட்சியமானார்கள்.

ஜனங்களை பிரியப்படுத்தும் கொள்கை

ஜனங்களை அலங்கரித்து ஆவிக்குரிய அழகுடையவர்களாக மாற்றுவதற்கு பதிலாக ஆரோன் அவர்களை தேவனுக்கு முன்பாக நிற்க முடியாத நிர்வாணிகளாக எப்படி மாற்றினான்? பகைவர்களுக்கு முன்பாக அவமானமடையத் தகுந்தவிதமாக ஜனங்களை எப்படி அவன் மதியீனர்களாகச் செய்தான்?

அவன் ஜனங்களின் பிரியத்திற்கு இசைந்துபோக முடிவு செய்தான். ஜனங்கள் மோசே அறிவித்த உண்மையான தேவனைத் தொடர்ந்து விசுவாசிப்பதற்கு பதிலாக தங்களை வழிநடத்த புதிய தெய்வங்கள் வேண்டும் என்றார்கள். (யாத் – 32:1) அவர்கள் மோசேயின் தேவன் விஷயத்தில் விருப்பமாயிராமல், தங்களுடைய மனதிற்கேற்றபடியான கடவுள்களை தங்களுக்காக ஏற்படுத்த விரும்பினார்கள்.

அதற்கு ஆரோன் உடன்பட்டு போனான். ஜனங்களைக் கண்டித்து, அவர்களின் தவறான வாஞ்சைக்கு எதிராக நிற்க வேண்டிய அவன் அவர்களின் மனதுக்கேற்றபடி செயல்பட முன்வந்தான். அவன் அவர்களுடைய வெறுப்பை சம்பாதிக்க விரும்பவில்லை. அவர்களின் மனம் விரும்பும் பாதைக்கு அவன் வந்து அவர்களுடைய உணர்வுகளுக்கு ஏற்றபடி

செய்ய, தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டான். அவன் தேவனுடைய சத்தியத்திற்காக நிற்பதை தவிர்த்து, ஜனங்களின் மனவிருப்பங்களுக்கு ஏற்ற போக்கைத் தெரிந்து கொண்டான். எனவே கன்றுக் குட்டியை செய்து, அதனையே அவர்களை வழி நடத்தும் கடவுளாகக் காண்பித்தான். ஏனென்றால் அவ்விதமான ஒரு கடவுளைத்தான் அவர்களின் மனம் நாடுகிறது என்பதை அவன் அறிந்திருந்தான்.

அங்கே ஆரோன் செய்த தவறு என்ன? ஜனங்கள் தனக்கு எதிராக வந்தால்கூட பயப்படாமல் உண்மையான தேவனைக் குறித்து உரக்கப் பேசுவதற்குப் பதிலாக ஒரு தவறான விக்கிரகத்தை உருவாக்கி தன்னைக் காத்துக் கொண்டான். அவன் தேவனை பிரியப்படுத்துவதை விட, ஜனங்களைப் பிரியப்படுத்துவதுதான் தனக்கு ஆதாயம் தரும் என எண்ணி அவர்களின் வழியில் போனான். அவன் தெய்வம் அல்லாததை தெய்வமாகக் காட்டினான். அவன் ஒரு தவறான ஆன்மீகப் பாதையை அவர்களுக்குக் காட்டி, தேவ மகிமை அவர்களை விட்டு விலகிப் போகக் காரணமானான். மனிதர்களின் மனதை தேவனுக்கேற்றபடி மாற்ற வேண்டியவன், தேவனை மனிதர்களின் மனதுக்கேற்றபடியாக மாற்றிட முன் வந்தான்.

இன்றைக்கும் இதுதான் நடக்கிறது. ஆன்மீக உயர்நிலையில் உள்ள ஆரோன்கள் தேவனை பிரியப்படுத்துவதினால் வரும் பாதகங்களை ஏற்கமனமில்லாமல் ஜனங்களை பிரியப்படுத்துவதால் கிடைக்கும் ஆதாயங்கள் மேல் குறியாயிருக்கின்றார்கள். ஆகாப் ராஜாவின் காலத்தில் தேவனைப் பிரியப்படுத்த விரும்பிய மிகாயாவுக்கு சிறைவாசம் கிடைத்தது. ஆனால் ஆகாபை பிரியப்படுத்துவதில் குறியாயிருந்த நானூறு தீர்க்கதரிசிகளுக்கோ அரசனிடமிருந்து பல சலுகைகள் கிடைத்தன. ஆம். தேவனுடைய உண்மைகளுக்காக நிற்க முன் வரும்போது மனிதர்களிடமிருந்து கவருகின்ற பல ஆதாயங்கள் தடைபட்டு போகும்.

இதனை விரும்பாததால்தான் இன்றைய கிறிஸ்தவ உலகத்தின் பெரும்பான்மையான ஆரோன்கள், தேவனுடைய சரியான சத்தியத்தின் பாதையை விட்டு விலகி, ஜனங்களை கவர்ச்சிக்கத்தக்க கன்றுக்குட்டிக் கடவுள்களை உருவாக்கிக் கொள்கின்றனர்.

உண்மையான தேவ ஊழியர், அவர் பாஸ்டரோ, சுவிசேஷகரோ யாராகயிருந்தாலும் ஜனங்களை பிரியப்படுத்துவதற்கு முதல் முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது. ***"நான் இன்னும் மனுஷரை பிரியப்படுத்துகிறவனா யிருந்தால், நான் கிறிஸ்துவின் ஊழியக்காரன் அல்லவே"*** **என்றான் அப்போஸ்தலனாகிய பவுல்.** (கலா – 1:10)

ஜனங்களைப் பிரியப்படுத்த விரும்பும் போதெல்லாம், அங்கே அவர்களை திருப்திபடுத்தும் விதமாக ஒரு கன்றுக் குட்டி விக்கிரக தெய்வத்தை உருவாக்கும் கட்டாயம் நேரிடுகிறது.

இன்றைய கிறிஸ்தவ உலகத்தில் ஏராளமான கன்றுக்குட்டி தெய்வங்கள் உண்டு என்பது மிகையான கூற்று அல்ல. ஆனால் அனேகருடைய கண்களுக்கு அது தெரிவதில்லை. ஏனென்றால் மனிதர்களின் மனநிலையைப் பிரியப்படுத்தி, ஆதாயம் தேடும் நோக்குடன் செய்யும் எந்த ஊழியமும் தேவனுடைய சத்தியங்களை அடிப்படையாகக் கொண்டிருக்க முடியாது. அங்கே ஆரோன்கள் கன்றுக்குட்டி விக்கிரக தெய்வங்களை உருவாக்குவது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது.

தேவனைத் தேடாமல் தேவ நன்மைகளைத் தேடுதல்

இன்று பெரும்பாலான ஜனங்கள் தேவனைத் தேட விரும்பவில்லை. ஆனால் தேவனுடைய நன்மைகளை அவர்கள் தேடுகிறார்கள். அநேகர் பாவத்திலிருந்து விடுதலை பெற வேண்டியதை பெரிதாக எண்ண வில்லை. அவர்களின் ஆன்மீகம் பிரச்சனைகளிலிருந்து விடுதலை அடைதல் மட்டுமே. அநேகர் இயேசு கிறிஸ்துவை நேசிக்கவும், விசுவாசிக்கவும் விரும்புகிறார்கள். ஆனால் அவர்கள் இயேசுவின் வழியில் நடப்பதையோ, அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்படிந்து வாழ்வதையோ விரும்பவில்லை. அநேகர் ஆவிக்குரியவர்களாக வாழ விரும்புகின்றார்கள். ஆனால் அதற்காக தங்களையும், தங்களின் குணங்களையும், அடிப்படைத் தன்மைகளையும் மாற்ற தயாராகயில்லை. ஆக, தங்களின் மன உணர்வுகளுக்கேற்ற ஒரு இறைவாழ்க்கையை அவர்கள் விரும்பு கிறார்களேயன்றி, தேவனுடைய வேதத்திற்கேற்ற ஒரு வழியை அவர்கள் விரும்பவில்லை. ஆம். அவர்கள் இயேசுவின் இடுக்கமான வாசலை புறக்கணித்துக் கொண்டே, இயேசுவினால் வரும் ஆசீர்வாதங்களை எதிர்பார்க்கின்றார்கள்.

இப்படிப்பட்டவர்கள் அதிகமாக தேவ வார்த்தைகளைக் கேட்க விரும்புவார்கள். ஆனால் அதன்படி வாழமாட்டார்கள். அவர்கள் ஆராதனைப் பரவசங்களை விரும்புவார்கள். ஆனால் ஆவிக்குரிய பரிசுத்தங்களைக் குறித்து கவலைப்படமாட்டார்கள். இவர்கள் தங்களுக்காக ஜெபிப்பவர்களை தேவ தூதர்களாக எண்ணுவார்கள். ஆனால் இவர்களோ ஜெபிக்க மாட்டார்கள். இவர்கள் காணிக்கை கொடுப்பதில் தாராளமாயிருப்பார்கள். ஆனால் தங்களையோ ஒருபோதும் கர்த்தருக்கு அர்ப்பணிக்கமாட்டார்கள். இவர்கள் ஆத்தும ஆதாயப் பணிகளை அதிகமாகத் தாங்குவார்கள். ஆனால் தங்களின் ஆத்தும நிலையைக் குறித்து சற்றும் கவலைப்படமாட்டார்கள்.

இவர்களுக்கு இதுதான் சத்தியம், இதுதான் தேவ ஒழுங்கு, இப்படித்தான் நீங்கள் வாழவேண்டும் என்றால் அது அவர்களுக்கு கசப்பாக இருக்கும். அது அவர்களுக்கு கடின உபதேசமாக இருக்கும். எனவே இவர்களுக்கு சத்தியத்தைக் கூறுகின்றவர்கள், அவர்களின் புறக்கணிப்பை பலனாகப் பெற முடியுமேயன்றி, பெரிதாக எந்த பயனும் பெற முடியாது.

எனவேதான் இன்றைய தேவ ஊழியர்கள் அன்றைய ஆரோனைப் போல தேவனுடைய சத்தியத்தை அவர்கள் விரும்புகின்றவிதமாக வளைத்துக் கொள்கின்றனர். இவ்விதமான ஜனங்களுக்கு பொருந்துகின்ற விதமான அல்லது அவர்கள் ஏற்றுக்கொள்ளுகின்ற விதமான ஒரு ஆன்மீக வழியை அவர்கள் புதிதாக உருவாக்கிக் கொள்கின்றனர். இங்குதான் கன்றுகுட்டி தோன்றுகிறது. இங்குதான் பரிசுத்த அலங்காரம் பெற வேண்டிய விசுவாசிகள், தேவ ஊழியர்களால் நிர்வாணிகள் என்ற அருவருப்பான நிலைக்கு மாற்றப்படுகின்றார்கள்.

இன்றைய விக்ரகங்கள்

பழைய ஏற்பாட்டு கால தீர்க்கத்தரிசிகளின் காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் கல், மண், மரம், வெள்ளி, பொன் ஆகியவற்றால் செய்யப்பட்ட விக்கிரகங்களை நாடி வழிபட்டார்கள். எனவே தீர்க்கத்தரிசிகள் அந்த விக்கிரகங்களை நாடிச் செல்கின்றவர்களைக் கடுமையாகக் கண்டித்தனர். இயேசுவின் காலத்திலோ அவ்வித விக்கிரகங்கள் இருக்கவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக பாரம்பர்யங்களும், தவறான உபதேசங்களும், தேவநோக்கம் இல்லாத சாதாரண வழிபாட்டு முறைகளும் விக்கிரகங்களாக இருந்தன. இயேசு அந்த விக்கிரகங்களுக்கெதிராகத் தான் அடிக்கடி கண்டனக் கணைகள் தொடுத்தார்.

இப்போதோ இயேசுவின் மூலம் வந்த புதிய ஏற்பாட்டு தேவ ஒழுங்குகளே திரிக்கப்பட்டு வித்தியாசமான பொருள் கொடுக்கப்பட்டு அவைகள் விக்கிரகங்களாக மாற்றப்பட்டுள்ளன. அன்று ஆரோன் செய்தது போல இன்றைய பெரும்பாலான ஊழியர்கள் வேத நியாயங்களை தங்கள் வசதிக்கேற்றபடி மாற்றி அர்த்தம் கொடுத்து புதிய கன்று குட்டிகளை உருவாக்குகிறார்கள். ஏனென்றால் அவை ஜனங்களால் பிரியமுடன் ஏற்றுக்கொள்ளத்தக்க விதமான கவர்ச்சியோடு உள்ளன.

இயேசு தம்முடைய போதனைகளை சகல சிருஷ்டிகளுக்கும் போதிக்கச் சொன்னார். (மத் – 28:20) ஆனால் இன்று நூற்றுக்கு 95 சுவிசேஷகர்களும் எதைச் செய்கிறார்ள். இயேசு செய்த அற்புதங்களைப் பற்றித்தான் அனைவருக்கும் சொல்கின்றார்களேயன்றி, இயேசு

சொன்னபடியாக அவருடைய போதனைகளை உபதேசிக்கவில்லை. ஏனென்றால் ஜனங்கள் விரும்புவது போதனை அல்ல, அற்புதம். எனவே அவர்கள் திருப்திப்படும் விதமாக ஒரு புதிய கன்றுக்குட்டி செய்யப்படுகிறது.

இயேசு தாம் பாவிகளை மனந்திரும்பவே அழைக்க வந்தேன் என்றார். (லூக் - 5:32) ஆனால் இன்றைய சுவிசேஷகர்களாகிய ஆரோன்கள் இயேசு நமக்கு அற்புதம் செய்யவே வந்தார் என்று பேசுவதையே முழு நேர ஊழியமாகக் கொண்டிருக்கின்றார்கள். தேவ நோக்கம் இருட்டடிப்பு செய்யப்பட்டு, மனிதர்களின் விருப்பங்களுக்கு ஏற்றபடி சுவிசேஷம் மாற்றப்படுகிறது. ஆம். அங்கே மனிதர்களுக்கேற்ற படியான ஒரு புதிய கன்றுக்குட்டி விக்கிரகக் கடவுள் செய்யப்பட்டு விட்டது.

சிலுவை சுமக்க வேண்டியதின் தேவையை இயேசு மிகவும் முக்கியப் படுத்தினார். (லூக்-9:23) ஆனால் இன்றைய தேவ ஊழியர்களாகிய ஆரோன்கள் இதனை அலட்சியம் செய்துவிட்டு, இயேசுவை நன்றாக விசுவாசியுங்கள், அப்போது நீங்கள் ஆபிரகாமைப் போல செல்வ சீமானாகி, சாலோமோனைப் போல சகல சுக செல்வங்களையும், செழிப்புகளையும் பூமியில் அனுபவிக்கலாம் எனக் கூறுகின்றனர். இங்கே இதைத்தான் ஜனங்கள் விரும்புகின்றனர். எனவே அவர்களின் ஆசைக்கேற்றபடி ஒரு கன்றுக்குட்டி தெய்வம் உருவாக்கப்படுகிறது.

அன்று அற்புதங்களுக்காக விசுவாசித்து தேடிவந்த ஆயிரக்கணக்கானோரை இயேசு ஏற்றுக் கொள்ளவில்லை. அழிந்து போகிற நன்மைகள் சம்பந்தப்பட்ட ஆசீர்வாதங்களை நோக்கமாகக் கொண்டு வருவதை இயேசு விரும்பவில்லை. (யோவான் - 6:27) ஆனால் இன்று நடப்பது என்ன? நூற்றுக்கு 98 ஊழியர்களும் அற்புதம் பெற இயேசுவிடம் வாருங்கள் என்றே அழைப்பு விடுகின்றனர். ஒரு சில பத்திரிகைகள் தவிர்த்து எல்லா கிறிஸ்தவ பத்திரிகைகளும் அற்புதம், அற்புதம் என கூவுகிறதேயன்றி, இயேசு இரட்சிப்பை ஏற்படுத்தவே பூமிக்கு வந்தார் என்பதை கறிவேப்பிலை அளவிற்குக்கூட சொல்லவில்லை. எது மனிதர்களுக்கு பிரியமும், இனிமையுமாக இருக்குமோ அதுவே கிறிஸ்தவ உபதேசம் என்ற பெயரில் பொய்யாகப் பிரசங்கிக்கப்படுகிறது. இங்கே மனிதர்களின் மனதிற்கேற்றபடி புதிய கன்றுக்குட்டி மார்க்கம் உருவாக்கப்படுகிறது.

இன்று உலகமெங்கும் பெரும்பாலும் வளமையான, செல்வ செழிப்பு அடிப்படையிலான உபதேசங்கள் கொண்ட ஊழியங்கள்தான் மிக வேகமாக வளருகின்றன. ஏனென்றால் சிலுவையின் உபதேசத்தை அவர்கள் தூக்கி எறிந்துவிட்டு, செல்வ செழிப்பையே விசுவாசத்தின் விளைபலனாகக்

காட்டுகின்றார்கள். எனவே அது எல்லாருக்கும் பிரியமானதாயிருக்கின்றது. ஆனால் அது ஒரு கன்றுக்குட்டி விக்கிரக ஊழியம். அது தேவனால் வந்தது அல்ல. மனிதர்களை பிரியப்படுத்த ஆரோன் உருவாக்கிய புதிய கடவுள் அது.

பரிசுத்தம் தேடாமல் பரவசம் தேடி...

இன்று ஏராளமான விசுவாசிகள் சபைகளுக்கு வருவதின் விசேஷ நோக்கம் பரிசுத்தமடைதலோ, சத்தியத் தெளிவடைதலோ அல்ல. அவர்கள் பரவசத்தையே நாடி வருகிறார்கள். அவர்கள் தங்களுக்கு ஏதாவது நன்மை கிடைப்பது சம்பந்தமான நல்வார்த்தைகள் பிரசங்கிக்கப்படாதா என்ற எதிர்பார்ப்புடனேயே வருகின்றார்கள்.

எனவே இன்றைய சபைகளில் பரவசம் தரும் பல நிகழ்ச்சிகள் உண்டு. ஆனால் பரிசுத்தம் இல்லை. கேட்பவர்களுக்கு மாயையான ஒரு நம்பிக்கையை ஊட்டும் பிரசங்கங்கள் உண்டு. ஆனால் கர்த்தருடைய ஆவியில் ஒருவரை கட்டி எழுப்பும் உபதேசங்கள் இல்லை. இன்றைய புராதான பாரம்பர்ய சபைகளுக்கு சென்றால் இயேசு அங்கே சமுதாய சேவகராகக் காட்டப்படுகிறார். அவரை அவர்கள் ஒடுக்கப்படுகிறவர்களை விடுவிக்க வந்த ஒருவராகவும், சமுதாய ஏற்றத்தாழ்வுகளை நீக்க வந்த ஒருவராகவும் காண்பிக்கின்றனர். பெந்தெகோஸ்தே சபைகளுக்கு சென்றால், இயேசுவை அவர்கள் அற்புதம், அதிசயம் செய்ய வந்த ஒருவராகக் காட்டுவதிலேயே பெரும்பாலான நேரங்களையும் செலவழிக்கின்றனர்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் சபைகளும், சுவிசேஷ ஊழியங்களும் இன்று அபூர்வ மாகிக் கொண்டு வருகின்றன. பரிசுத்தமான வாழ்க்கையை முக்கிய தலைப்பாக வைத்து பிரசங்கிக்கும் பிரசங்கிமார்களை கண்டு பிடிக்க வெகுதூரம் நடக்கவேண்டியுள்ளது.

இன்றைய சபைகள் எண்ணிக்கையில் பெருகவும், செயல்பாட்டில் விரிவாகவும் விரும்புகின்றனவேயன்றி, விசுவாசிகளை பக்தியிலும், பரிசுத்தத்திலும் வளர்க்க கரிசனையாயிருக்கவில்லை. பாஸ்டர்கள் தங்கள் சபையில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள். தங்களுக்கு எத்தனை கிளை சபைகள் இருக்கின்றன. தங்களுக்கு எவ்வளவு பெரிய கட்டடங்கள் இருக்கிறது என்று சொல்லி மகிழ விரும்புகின்றார்கள். தங்களுக்கு கொடுக்கப்பட்ட மந்தையை எந்த அளவிற்கு சரியான கிறிஸ்துவுக்கேற்ற குணாதிசயங்களில் வளர்க்க ஆவலாயிருக்கின்றோம் என்பதை கரிசனையாக சிந்திக்கவில்லை.

மனந்திரும்புதல், இரட்சிப்பு, பாவ விடுதலை, விசுவாசம், பரிசுத்தம், தெய்வீக குணாதிசயங்கள் ஆகியவற்றை மிக முக்கிய விஷயங்களாக எடுத்து போதிக்காத எந்த சபையும், எந்த ஊழியமும், எந்த ஸ்தாபனமும், ஜனங்களின் மனநிலைக்கேற்றபடி ஆரோனால் உருவாக்கப்பட்டது போன்ற கன்றுகுட்டி விக்கிரகரக ஊழியங்களே.

இயேசு கிறிஸ்து எதனை மிக முக்கியமாக திரும்ப திரும்ப போதித்தாரோ, அவைகளை பொயரளவிற்கு வைத்துவிட்டு, அற்புதம், அதிசயம், தீர்க்கத்தரிசனம் என மனிதர்கள் தேடும் நன்மைகளையே அதிக முக்கியத்துவம் கொடுத்து அவைகளையே மையமாகக் கொண்டு செய்யப்படும் எந்த ஊழியமும் ஆரோனின் கன்றுகுட்டிக்கு ஒப்பானவையே.

ஆனால் இந்த கன்றுக்குட்டி ரக ஊழியங்கள் மிக கவர்ச்சியானவை. அங்கே பெருங்கூட்டம் மக்கள் உண்டு. இந்த கன்றுகுட்டி ரக சபைகளும், ஊழிய அமைப்புகளும் பெருந்திரளான மக்களுக்கு அதிக பிரியமானவையாகவும், இரட்சிக்கத் தக்கவையாகவும் இருக்கும்.

அன்றும் அதுதானே நடந்தது. ஆரோன் ஜனங்களை பிரியப்படுத்தும் விதமாக உருவாக்கிய கன்றுகுட்டிக்கு முன்பாக ஏக இஸ்ரவேல் ஜனங்களும் ஆடிப்பாடி, கொண்டாடி, கூத்தாடி, குதூகலமானார்களே. அங்கே ஆடல் பாடல் இருந்தது. ஆர்ப்பாட்டம் இருந்தது. கொண்டாட்டம் குதூகலம் இருந்தது. எல்லாருடைய முகத்திலும் தாங்கள் விரும்பிய விதமான ஒரு ஆன்மீகத்தை கண்டு கொண்ட மகிழ்ச்சி இருந்தது.

ஆனால் அங்கே ஒரு மோசே அந்த காட்சியைக் கண்டு கண்ணீர் விட்டான். அவர்களின் சந்தோஷக் காட்சி அவனுக்கே துக்கத்திற்குரியதாக இருந்தது. ஏனென்றால் அவர்களின் சந்தோஷத்திற்கு பின்னால் இருந்தது உண்மையானக் கடவுள் அல்ல. அவர்களின் குதூகலத்திற்கு தேவனுடைய சத்தியங்கள் அடிப்படையாக இருக்கவில்லை. அவர்கள் ஒரு பொய்யான கன்றுக்குட்டி கடவுளுக்கு முன்பாக கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

அன்று அற்புதம் செய்கின்றவராக இயேசு வெளிப்பட்டு ஐந்து அப்பங்களை ஐயாயிரங்களுக்கு பங்கிட்டபோது, அவரைப் பின்பற்றவும், அவரை ராஜாவாக ஏற்றுக்கொள்ளவும். ஒரு பெருங் கூட்டம் ஜனங்கள் முண்டியடித்துக் கொண்டு வந்தனர். ஆனால் அவர் சத்தியத்தைப் போதிக்க ஆரம்பித்த போது, அங்கே ஜனங்கள் கலைந்து போக ஆரம்பித்தனர். சத்தியம் அவர்களை கவர்ச்சிக்கவில்லை. உண்மையை

போதிக்க ஆரம்பித்த இயேசு ஆயிரக்கணக்கானோரை இழந்து, இறுதியாக பன்னிரெண்டு பேரோடு நிற்க நேர்ந்தது. (யோவான் – 6:66)

ஆனால் அதைப்பார்த்து அவர் கவலைப்படவில்லை. சத்தியத்தைக் கேட்க விருப்பமின்றி விலகிப் போன ஆயிரங்களை அற்புதங்களைக் காட்டி திருப்பி அழைக்க அவர் எந்த முயற்சியும் செய்யவில்லை.

இங்கேதானே இன்றைய ஊழியர்களும் சபைத் தலைவர்களும் வெகு ஞானத்தோடு செயல்படுகிறார்கள். அவர்கள் தாங்கள் எதைப் பேச தாங்கள் அழைக்கப்பட்டோம் என்பதைவிட, எதைப் பேசினால் ஜனங்கள் பெருந்திரளாக தங்களிடம் வருவார்கள் என்றும், எதைப் பேசினால் ஜனங்கள் தங்களோடு நிற்பார்கள் என்பதைப் பற்றியுமே அதிகமாக சிந்திக்கிறார்கள். எனவே ஜனங்கள் பிரியப்படும் விதமாகவும், எளிதாக ஈர்க்கப்படும் விதமாகவும் இயேசுவின் ஊழியத்தை கவர்ச்சியாக வளைந்து கொள்கின்றார்கள்.

அன்று சத்தியத்தை சத்தியமாக தேவன் விரும்புகிற விதமாக போதித்த மோசேயோடு, ஒரு காலேப், ஒரு யோசுவா என ஒரு சிலர் மட்டுமே நின்றனர். ஆனால் ஜனங்கள் எதிர்பார்க்கின்ற விதமாக கன்றுகுட்டி செய்து கடவுளாக காண்பித்த ஆரோனுடன் லட்சக்கணக்கானோர் உற்சாகமாக நின்று கொண்டிருந்தனர்.

○ ○ ○

4

ஆன்மீக வேடம் அணிந்த நாத்திகர்கள்

இந்த உலகத்தில் ஒரு பெருங்கூட்ட மக்கள் இறைநம்பிக்கை இல்லாதவர்கள். அவர்கள் கடவுள் உண்டு என்று, நம்புவது கிடையாது. கடவுள் இல்லை என்று சொல்கின்ற இவர்கள் நாத்திகர்கள் என்று அழைக்கப்படுகின்றார்கள். இறைவனே இல்லை என்று சாதிக்க விரும்புகின்ற இவர்களை எண்ணி இறை நம்பிக்கை உடையோர் எரிச்சலடைவதும் உண்டு, சில வேளை அவர்களை பரிதாபப் பிறவிகள் என்று நினைத்து வருந்துவதும் உண்டு.

ஆனால் நாத்திகர்கள் என்று தங்களை அடையாளங்காட்டாதபடி, ஆத்திகர்கள் என்ற போர்வை போர்த்தின நாத்திகர்களும் ஏராளம் உண்டு. ஆத்திகர்கள் அதாவது இறை நம்பிக்கையாளர்கள் என்ற போர்வையில் வாழும் இந்த நாத்திகர்கள் வெளிப்படையாக தங்களை நாத்திகர்களாக அறிவித்துக் கொண்டவர்களை விட அதிக தீங்கானவர்கள்.

இவர்கள் கடவுள் உண்டு என்று கூறுவதும், அந்தக் கடவுளைக் குறித்துப் பேசுவதும், அந்த கடவுளுக்காக ஊழியம் செய்வதும் பிழைப்பிற்காகத் தானேயன்றி, உண்மையான இறை நம்பிக்கையால் அல்ல. இவர்கள் "தேவனை நாங்கள் அறிவோம்" என்று அறிக்கை செய்வார்கள். ஆனால் தங்களின் செயல்களாலோ அதனை பொய் என்று நிரூபிப்பார்கள். (தீத்து – 1:16) தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதன் பெலனை மறுதலிக்கின்றவர்களாக அவர்கள் இருப்பார்கள். (11 தீமோ – 3:5)

இறையியல் போதிக்கும் பல ஆன்மீக கல்விமான்களுக்கு உண்மையில் இறைவன் ஒருவர் உண்டு என்ற நம்பிக்கையோ, இயேசு ஒருவரே இரட்சகர் என்ற நம்பிக்கையோ கிடையாது. கடவுள் ஒருவர் உண்டு என்ற அடிப்படை நம்பிக்கைகூட இல்லாத பலர் புராதன திருச்சபைகளை நடத்தும் போதகர்களாக இருக்கின்றார்கள் என்பது உண்மை. எல்லா மத நம்பிக்கைகளையும் மனதார ஏற்றுக் கொண்டு எல்லா மதங்களிலும் கடவுள் இருக்கின்றார் என்று நம்பிக்கொண்டே, நானே வழி, நானே சத்தியம், நானே ஜீவன் என்று சொன்ன இயேசுவின் ஊழியத்தி லும் தங்களை ஈடுபடுத்திக் கொள்வோரும் பலர் உண்டு.

இறைவன் ஒருவர் உண்டு என்ற நம்பிக்கையை தங்களின் உணர்வுகளில் கொண்டிராத பலர் பெந்தெகோஸ்தே போதகர்களாகவும், பலர் பிரபல சுவிசேஷகர்களாகவும் இருக்கிறார்கள் என்பது மிகைப்படுத்தப் பட்ட கூற்று அல்ல.

இறைநம்பிக்கை இல்லாமலா அவர்கள் சபைகளை நடத்துகிறார் கள்? இறை நம்பிக்கை இல்லாமலா? அவர்கள் பெருங்கூட்டம் மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கின்றார்கள்? என்ற கேள்வி நமக்கு எழலாம். ஆனால் அவர்கள் இயேசுவின் பெயரில் போதிப்பதும், இயேசுவை விசுவாசிக்க ஜனங்களை அழைப்பதும், இயேசுவின் சுவிசேஷத்தை அறிவிக்க தீவிரமாயிருப்பதும் உண்மையான இறை நம்பிக்கையின் அடிப்படையினால் அல்ல. அவ்விதம் செய்வதால் அவர்களுக்கு பல ஆதா யங்கள் இருக்கிறது என்பதினால் மட்டுமே அவ்விதம் செய்கின்றார்கள்.

துணிகரம் எப்படி?

சில ஊழியர்கள் தொடர்ந்து வேத சத்தியங்களுக்கு புறம்பாக செயல் பட்டுக் கொண்டிருப்பார்கள். வேண்டு மென்றே வேத விதிகளை அலட்சியப் படுத்தி பொருளாசைக்கும், புகழாசைக்கும் சாய்ந்து போய் துணிகரமாகச் செயல்படுவார்கள். சத்தியத்தை அவர்களிடம் ஒருபோதும் பார்க்க முடியாது. இவர்களின் உள்வட்டத்தில் நிகழும் பலவித தவறான காரியங்களைக் காணவும், அறியவும் நேரிடுகின்ற அநேகர் வெகுவாக ஆச்சர்யப்படுவதுண்டு. கடவுளை அறிந்த இவர்களால், கடவுளைக் குறித்து பிரமாதமாகப் பேசுகின்ற இவர்களால் வேதாகமத்தை வைத்து சிறப்பாக பேசுகின்ற இவர்களால் எப்படி இவ்வளவு துணிகரமாக செயல்பட்டும் சாதாரணமாக இருக்க முடிகிறது என்றுக் கேட்ப்பார்கள்.

உண்மை என்னவென்றால் அவர்கள் உண்மையில் உணர்வுப்பூர்வ மாக கடவுள் ஒருவர் உண்டு என்று நம்பவில்லை. கடவுள் ஒருவர் தங்களைப்

பார்த்துக் கொண்டிருக்கின்றார் என்ற விழிப்புணர்வும் அவர்களுக்கு இல்லை. அவர்கள் உண்மையில் ஆத்திகர்கள் அல்ல நாத்திகர்களே. எனவேதான் தவறுகளில் தொடர்ந்து கொண்டே அவர்கள் ஊழியப் பொறுப்புகளை வகித்துக்கொண்டு ஊழியங்களையும் செய்ய முடிகிறது.

கடவுளை நம்புகிறவனின் வாழ்க்கையிலும் தவறுகள் நிகழ வாய்ப்புண்டு. ஆனால் தவறுகளை நியாயப்படுத்தி அவர்களால் நெடுநேரம் தொடர முடியாது. கடவுளின் வேதத்தை நம்புகிறவன் அந்த வேத சத்தியத்திற்கு புறம்பான ஒரு பாதையில் சென்று கொண்டே ஊழியத்தைத் தொடர முடியாது. உண்மையான கடவுள் நம்பிக்கை இல்லாத நாத்திகர்க ளாக அவர்கள் உள்ளான நிலையில் இருப்பதால் தான், அவர் களால் அப்படி செயல்பட முடி கிறது.

ஒரு மனிதன் ஆத்திகனா அல்லது நாத்திகனா என்பதை எதனால் அறிவது? அவன் எந்த அளவு கர்த்தரைக் குறித்து பிரமாதமாக பேசுகி றான் என்ற அடிப்படையில் அல்ல. ஒரு பரிசுத்தமான தேவன் தன்னையும் தன் மனதின் ஆழங்களையும் காண்கிறார் என்ற சரியான உணர்வோடு அவன் எப்படி செயல்படுகிறான் என்ற அடிப்படையிலேயே அதனை நிர்ணயிக்க முடியும்.

ஆவிக்குரிய விசேஷ வரங்கள் எதையும் பெறாமலே தாங்கள் அவ்விதம் பெற்றிருப்பதாக பெரிதாக விளம்பரம் செய்து தொடர்ந்து போலித்தனமாக ஊழியம் செய்வோர் எத்தனையோ பேர்! எந்த ஒரு தரிசனத்தையும் பெறாமலே தாங்கள் தினமும் தேவதரிசனம் பெறுவதாக பொய் பேசும் ஊழியர்கள் மிகுதியாக உண்டே. ஜனங்களின் காணிக்கைகளை தந்திரமான வழி முறைகள் மூலம் பெற்றுக் கொள்வ தற்காக தேவன் தங்களுக்கு அந்த திட்டம் தந்தார், இந்த திட்டம் தந்தார் என்று துணிகரமாக பொய் பேசும் ஊழியர்கள் பல உண்டே. ஏற்கெனவே தாங்கள் உரைத்த தீர்க்கதரிசனங்கள் பல நிறைவேறாத போதிலும் "விசேஷ தீர்க்கத்தரிசனம் பெற்றவர்" என்ற பொய் முத்திரையோடு தொடர்ந்து தீர்க்கத்தரிசனம் உரைப்பதில் சளைக்காத பல சுவிசேஷகர்கள் உண்டே.

கர்த்தருடைய வழியில் நடக்கவும் தெரியாமல், கர்த்தருடைய வழியில் ஜனங்களை நடத்தவும் தெரியாமல் காணிக்கை தசமபாகத்தை குறிவைத்து காலம் முழுதும் நேர்மையற்ற முறையில் சபைகளை நடத்தும் பல போதகர்கள் உண்டே. உண்மை, நேர்மை, தாழ்மை அன்பு ஆகிய தெய்வீக உயர்பண்புகள் எதுவும் இல்லாத நிலையில், ஆன்மீக உயர் பதவிகளை வாஞ்சித்து பெற்றுக் கொண்டு, அரசியல்வாதிகளைவிட மோசமாகச்

செயல்படும் பிரதான ஆயர்களும், பேராயர்களும் பல உண்டே. பதவி மோகத்தாலும், புகழாசையாலும், ஊழிய சம்பந்தமான பொறுப்புகளை விரும்பித் தேடி பெற்றுக் கொண்டு, முற்றிலும் இறைபக்திக்கு புறம்பான ஒரு பாதையில் பயணித்து தேவ சமுகத்தை சண்டைக்களங்களாக மாற்றுகிறவர்கள் பல உண்டே.

கடவுள் ஒருவர் உண்டு என்றும், அவருக்கு முன்பாக பயபக்தியோடு வாழவேண்டியது அவசியம் என்றும் நம்புகின்றவர்களால் இப்படி தவறான முறையில் எப்படி தொடர்ந்து செயல் பட முடியும்? பணத்திற்காக பொருளுக் காக, உலக ஆசைகளுக்காக கடவுளின் வேத வசன நியாயங்களை தொடர்ந்து எப்படி துணிகரமாக மீறி நடக்க முடியும்?

உண்மையில் அவர்கள் ஆத்திகர்கள் அல்ல. நாத்திகர்கள். அவர்கள் ஆன்மீக நம்பிக்கை என்பதை தங்கள் மறைவான நோக்கங்களை நிறை வேற்றத் தேவையான ஒரு போர்வையாக மட்டுமே உபயோகிக்கின்றனர். ஆனால் அவர்களுக்கு தேவன் ஒருவர் உண்டு என்ற நம்பிக்கை உண்மையில் இல்லை. அந்த நம்பிக்கையுடைய எவரும், தவறான வழிமுறைகளில் தைரியமாகத் தொடர முடியாது. கடவுள் ஒருவர் உண்டு என்று கூறியும், அந்த கடவுளுக்கு முன்பாக தான் எப்படி வேண்டுமானாலும் மனம் விரும்பியபடி வாழலாம் என நினைப்பவன் உண்மையான கடவுள் நம்பிக்கையாளன் அல்ல. அவன் வாயினால் ஆன்மீகத்தைப் பேசினாலும், மனதாலோ உண்மையான இறை நம்பிக்கையற்ற நாத்திகனே.

ஆத்திக வேடம் அபாயமானது

இன்றைய கிறிஸ்தவ ஊழிய உலகம் மிகுதியாக கறைபட்டுப் போய் உள்ளது. கடவுளின் பெயரில் எதை வேண்டுமானாலும் சொல்லலாம், எப்படி வேண்டுமானாலும் பொய் பித்தலாட்ட மாக செயல்படலாம் என்ற துணிகர மனநிலை பெரும்பாலான ஊழியர்களை ஆட்க்கொண்டுள்ளது. தேவனைப் பார்த்தேன், பேசினேன், அவர் இதைச் செய்ய சொன்னார், அதைச் செய்யச் சொன்னார் என்று சற்றும் பயமில்லாமல் துணிகரத்தில் தடுமாற்றம் இல்லாமல் செயல்படுகின்ற தேவ ஊழியர் எங்கும் ஏராளம், ஏராளம்.

தங்களுடைய சுயநலத்திற்காக பணம் சம்பாதிக்கும் திட்டங்களை யோசிக்கின்றார்கள். ஒரு நாள் அந்த திட்டத்தை இயேசுவே தந்தார் என்று கூறுகின்றார்கள். உலகப்பிரகார ஆசைகளின் விளைவாக தாங்கள் கட்டவும், எழுப்பவும், விரும்பினவைகளை தேவனே கட்டச்சொன்னார் என்றும், எழுப்ப சொன்னார் என்றும் துணிகரமாக கூறுகின்றார்கள். தேவன் ஒருவர் உண்டு என்றும், அவர் தாம் சொல்லாததை சொன்னதாகவும், அறிவியாததை அறிவித்ததாகவும், காண்பிக்காததை

சிலுவை வழியாகவே சிங்காசனம்

5

மனிதகுலம் ஆசீர்வதிக்கப்படுவதற்காகவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையை ஏற்றுக்கொண்டு தம்மைத்தாமே பலியாக ஈந்தார். சிலுவையின் மூலமாக சம்பாதிக்கப்பட்ட தேவ ஆசீர்வாதங்களை நாம் பெற்றிட நாமும் சிலுவை சுமக்க வேண்டியது அவசியமாகிறது. நாம் சிலுவை சுமக்க முன் வந்துதான் இயேசு சிலுவை சுமந்து உருவாக்கிய கடவுளின் நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் சுதந்தரிக்க முடியும்.

சிலுவையின் வழியாக சிங்காசனம் அடைதலே கிறிஸ்தவம். சிலுவை மறைக்கப்படும் போது சிங்காசனம் நமக்கு மறுக்கப்படுகிறது. இயேசு தமக்கு முன்பாக வைத்திருந்த சந்தோஷத்தை சிலுவையை ஏற்று சகித்துதான் பெற்றுக் கொள்ள முடிந்தது. (எபி – 12:2) அந்த தெய்வீக விதிப்படி சிலுவையை சகிக்க ஆயத்தமானவர்களே, ஆசீர்வாதமாகிய சிங்காசனத்தை சுகிக்க முடியும். அவருக்காக மரிக்க மனதுடையவர்கள் பிழைப்பதற்கு தகுதியாகிறார்கள். அவரோடு பாடுகளை சகிக்க ஆயத்தம் செய்தவர்கள் அவரோடு ஆளுகை செய்ய அதிகாரம் பெறுகின்றார்கள். (11தீமோ – 2:11, 12)

வேதாகமம் இரண்டு விதமான சிலுவைகளைக் குறித்து பேசுகிறது. ஒன்று, இயேசு நமக்காக சுமந்த சிலுவை. இன்னொன்று இயேசுவுக்காக நாம் சுமக்க வேண்டிய சிலுவை. முந்தின சிலுவை விசுவாசிக்கப்பட வேண்டியது. பிந்தின சிலுவை ஏற்றுக்கொள்ளப்படவேண்டியது. முந்தின

சிலுவை ஆசீர்வாதத்தின் இருப்பிடம். பிந்தின சிலுவை ஆசீர்வாதத்தை அடையும் வழி. எனவேதான் சிலுவையை எடுத்துக் கொண்டு பின்பற்றாதவன் எனக்கு பாத்திரன் அல்ல" என்றார். இயேசு. (மத் – 10:38) அதாவது சிலுவையை ஏற்றுக் கொள்ள மனதில்லாதவர்கள், ஆசீர் வாதங்களுக்கு பங்குடையவர்களாக முடியாது.

ஆனால் ஆசீர்வாதங்களுக்கு அடிப்படையான சிலுவை உபதேசம் அவ்வளவு கவர்ச்சியானதாகவோ, எளிதில் எல்லோரும் ஏற்றுக் கொள்ளுவதற்கு ஏற்ற விருப்பத்திற்குரியதாகவோ இருக்க வில்லை.

கவர்ச்சியற்ற சிலுவை உபதேசம்

சிலுவை சுமத்தல் என்ற உடனேயே இது ஏதோ சிரமப்படவும், அவதிப்படவும், துன்பப்படவும் அழைக்கப்படுதல் என்ற எண்ணமே எல்லோருக்கும் ஏற்பட முடியும். ஆசீர்வாதம் அனைவரும் விரும்பத் தக்க விஷயம். ஆனால் அதற்கு வழியாக நியமிக்கப்பட்ட சிலுவைதான் அநேகரை தயக்கத்திற்குள்ளாக்குகிறது.

ஆனால் ஆதி அப்போஸ்தலர்களும், அவர்களைத் தொடர்ந்து வந்த இயேசுவின் ஊழியர்களும் சிலுவை உபதேசத்தை தங்களுடைய மன உணர்வுகளுக்கேற்றபடி மாற்றாமல், இயேசு உரைத்தபடியே ஜனங்களுக்கு பிரசங்கித்தார்கள். ஆனால் இப்போது நாம் காணும் கிறிஸ்தவமும், நாம் கேட்க நேரிடும் கிறிஸ்தவ உபதேசங்களும் வித்தியாசமாக உள்ளது. சிலுவை இல்லாத, அல்லது சிலுவை சுமத்தலின் முக்கியத்துவத்தை பேரளவில் குறைத்துப் போட்ட ஒரு கிறிஸ்தவத்தையே எங்கும் காண முடிகிறது. துவக்கத்தில் விருந்தின் பிரதான உணவு அயிட்டமாக சிலுவை உபதேசம் இருந்தது. இப்போது அது ஊறுகாய் அளவிற்கு கடைசி பகுதிக்கு வந்துவிட்டது. வேண்டுமானால் தொட்டுக் கொள்ளலாம், இல்லை யென்றால் விட்டுவிடலாம் என்ற நிலைக்கு வந்து விட்டது.

இன்றைய கிறிஸ்தவத்திற்கு சிலுவை என்பது ஒரு அடையாளப் பொருள்தானேயன்றி, அனுபவப் பொருள் அல்ல. அது கிறிஸ்தவ ஆலயங்களிலும், கிறிஸ்தவ வீடுகளிலும் பிறர் விலாசம் அறிவதற்கான ஒரு அடையாளமாக பயன்படுகிறதேயன்றி, சத்தியரீதியாக அடையாளம் காட்டுகிறவைகளாக உபயோகிக்கப்படவில்லை. ஏனென்றால் சிலுவை, சிலுவை உபதேசம், சிலுவை மார்க்கம் எனப்படுவது பொதுவாக இனிமையான தொனியையோ, தோற்றத்தையோ தரவில்லை.

அப்போஸ்தலர் கால கிறிஸ்தவ உபதேசம் சிலுவையிலடிக்கப் பட்டவராக இயேசுவை ஜனங்களுக்கு காட்டுகிறவையாகவும், சிலுவை சுமந்து இயேசுவை பின்பற்ற ஜனங்களை அழைப்பவையாகவும் இருந்தன.

நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட
கிறிஸ்துவைப் பிரசங்கிக்கின்றோம்.

1 கொரி - 1:23

இயேசு கிறிஸ்துவை சிலுவையில்
அறையப்பட்ட அவரையேயன்றி
வேறொன்றையும் உங்களுக்குள்ளே
அறியாதிருக்க தீர்மானித்திருந்தேன்.

1 கொரி - 2:2

இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்
பட்டவராக உங்கள் கண்களுக்கு முன்
பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே
வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே.

கலா - 3:1

திருத்தப்பட்ட கிறிஸ்தவ உபதேசங்கள்

ஆனால் பெரும்பாலும் இன்றைய கிறிஸ்தவ சுவிசேஷ களத்தில் சிலுவையை போதுமான அளவு தொடர்பு படுத்தி உபதேசிக்கும் முறை மறைந்து விட்டது. ஜனங்களுக்கு பிரியமாயிருக்கும் விதமாகவும், விரும்பி ஏற்க தூண்டுகின்ற விதமாகவும், இனிமையான ஒரு சவுகரிய உணர்வை கொடுக்கின்ற விதமாகவும் கிறிஸ்தவ உபதேசங்கள் பேரளவில் திருத்தப்பட்டு விட்டன. சட்டங்கள் கால, நேர, மக்களின் மனநிலை சார்ந்து போகப் போக திருத்தப்படுவது போன்று, கிறிஸ்தவ உபதேச சட்டங்களும் மக்களின் மனநிலைக்கு பிரியப்படும் விதமாகவும், பொருந்தும் விதமாகவும் திருத்தப்பட்டு விட்டன.

எனவேதான் சிலுவையில் அறையப் பட்டவராகவும், சிலுவை சுமக்க அழைக்கின்றவராகவும் இயேசு காட்டப்படுவதை ஊறுகாய் அளவிற்கு கண்ணுக்கு புலப்படாமல் சிறியதாக்கி, அற்புதம் செய்கிற, அதிசயம் செய்கிற நன்மைகளை அளிக்கிற இயேசுவை மலையளவாக பெரிதாக காண்பிக்கின்றனர். சிலுவையைக் குறித்து பேசினால் கூட நாம் விரும்பியபடி நன்மைகளை பெறுவதற்காகவே சிலுவை வந்தது என்கிற ரீதியில் பேசுகிறார்கள்.

சுருக்கமாக சொல்வதாக இருந்தால் இன்றைய கிறிஸ்தவ சுவிசேஷ அறிவிப்பு முறையும், உபதேச விளக்க முறையும் மக்களை கவருவதற்கு ஏற்ற விதமாகவும், சுவிசேஷம் அறிவிக்கின்றவர்களுக்கு சவுகரியத்தை கொடுக்கின்ற விதமாகவும் திருத்தி அமைக்கப் பட்டுள்ளது.

ஏற்கெனவே பலவித வாழ்க்கை பிரச்சனை சிலுவைகளால் நொந்து கொண்டிருக்கின்ற மக்களிடம் போய் "சிலுவை சுமக்க வாருங்கள்" என்று அழைப்பது அவ்வளவு நன்றாக இல்லை என சுவிசேஷகர்கள் நினைக்கின்றனர். பலவித துயரச் சிலுவைகளை சுமந்து தவிக்கும் மக்களுடைய காதுகளுக்கு, சுவிசேஷத்தை சற்று இனிமையாக்கி பேசினால்தான் அவர்கள் அதை விரும்ப வாய்ப்பு உள்ளது என அவர்கள் எண்ணுகின்றனர்.

சிறந்த ஓவியன் ஒருவன் சிறப்பான ஓவியம் ஒன்றை வரைந்து வைத்திருந்தான். சற்று நேரத்திற்கு பிறகு அதனைப் பார்த்த அவனது உதவியாளன், அந்த ஓவியத்திற்கு இன்னும் சற்று நல்ல தோற்றத்தை கொடுக்க விரும்பினான். எனவே அந்த ஓவியத்தினை சற்று அழகாக மாற்றினான். இப்போது அந்த ஓவியம் எவரையும் எளிதாக கவருகின்ற அளவிற்கு நல்ல அழகு பெற்று விட்டது.

ஆனால் அதைப்பார்த்து, அதை முதலாவது வரைந்த ஓவியன் அதிர்ச்சியடைந்தான். நீ ஓவியத்தை மிகவும் அழகுபடுத்திவிட்டாய் என்பது உண்மை தான். ஆனால் நீ கொடுக்க விரும்பிய அழகானத் தோற்றம் நான் கொடுக்க விரும்பின அடிப்படைக் கருத்தை (THEME) மறைத்துவிட்டதே" என்று திட்டினான்.

ஆம். ஒரு நல்ல ஓவியத்திற்கு அழகு என்பதை விட அதனுடைய அடிப்படை கருத்து என்ன என்பது மிக முக்கியம். இன்றைய கிறிஸ்தவ நிலையும் இப்படியாகவே உள்ளன. இன்றைய கிறிஸ்தவ போதனையாளர்களும், சுவிசேஷகர்களும் கிறிஸ்தவம் என்றால் எல்லோரும் விரும்பி ஏற்கத்தக்க ஒரு இனிமையான அழகானத் தோற்றத்தைக் கொடுத்துவிட்டார்கள். ஆனால் அடிப்படை கிறிஸ்தவ சித்தாந்தங்களும், சிலுவை உபதேசங்களும் மறைந்து போயின.

எனவே ஜனங்கள் சிலுவையைக் குறித்த போதிய உணர்வுகள் இன்றி, கிறிஸ்துவின் நன்மைகளைக் குறித்த எதிர்பார்ப்புகளோடு மட்டுமே இயேசுவை விசுவாசிக்கும் ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. அதாவது அவர்களுக்கு சிங்காசனம் காண்பிக்கப்படுகிறது. ஆனால் அதற்கான வழியான சிலுவை மறைக்கப்படுகிறது. ஆசீர்வாதங்கள் அவர்களுக்கு வாக்களிக்கப்படுகிறது. ஆனால் வழியோ காட்டப்படவில்லை. ஏனென்றால் சிலுவை சுமக்க ஆயத்தப் படுதல்தான் ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கான வழி. சிலுவை காண்பிக்கப் படாத கிறிஸ்தவத்தில் ஆசீர்வாதங்களுக்கான பாதை இருட்டடிப்பு செய்யப் படுகிறது.

சிலுவையில்லாத ஒரு கிறிஸ்தவத்தை போதிப்பதாலும், ஆசீர்வாதங்களை மட்டும் காண்பிக்கும் ஒரு கிறிஸ்தவத்தை பிரசங்கிப்பதாலும், சம்பந்தப்

பட்ட ஊழியர்கள் பெருங்கூட்டத்தை தங்களின் ஊழிய அமைப்புகளை நோக்கியும், சபைகளை நோக்கியும், ஊழியங்களை நோக்கியும் அதிக சிரமமின்றி இழுக்க முடிகிறது. ஆனாலும் அங்கே சிலுவை போதிய முக்கியத்துவம் பெறாததால் அவர்கள் கிறிஸ்தவத்தை நோக்கி இழுக்கப்படவில்லை.

சிலுவை சுமத்தல் இல்லையேல்

சிலுவை சுமத்தலை மையமாகக் கொள்ளாத ஒரு சுவிசேஷ அறிவிப்பிற்கும், போதனைக்கும் செவி சாய்க்கின்ற மக்கள் கூட்டத்தால் ஊழியர்களுக்கும், ஊழியங்களுக்கும் பலவித ஆதாயங்கள் உண்டேயன்றி, அங்கே ஆண்டவர் விரும்புகின்ற உண்மையான ஆத்தும ஆதாயங்கள் இல்லை.

இன்றைய கிறிஸ்தவ சுவிசேஷ அறிவிப்புகளும், சபைப் போதனை முறைகளும் கர்த்தரிடமுள்ள நிறைவான ஆசீர்வாதங்களை பெற, விசுவாசத்தை மட்டுமே வழியாகக் காண்பிக்கின்றன. "சிலுவை சுமந்து இயேசுவை பின் பற்றும்" அனுபவத்தை முக்கியத்துவப்படுத்தாததால், ஜனங்கள் ஆசீர்வாதங்களின் பாதையை சரியாக அறியாமல், ஒருபோதும் ஆசீர்வாதங்களுக்கு வந்து சேர முடியாமல் தவறாக வழி நடத்தப் படுகிறார்கள். சிலுவை சுமத்தலின் தேவையை வெளிப்படுத்தாமல் விசுவாசத்தின் வாயிலாக மட்டுமே ஆசீர்வாதங்களைப் பெற போதிப்பது, ஒரு மோசடித் தனமான போதனையாகும். "விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்" என்பது மட்டுமே வேதாகமமும் கிறிஸ்தவ சட்ட திட்டங்களும் அல்ல. கிறிஸ்தவ ஊழியங்கள் என்பது கிறிஸ்துவிடம் என்னென்ன ஆசீர்வாதங்கள் உண்டு என்பதை அறிவிப்பது மட்டும் அல்ல. அவைகளை எப்படி அடைவது என்பதையும் சரியாக சொல்ல வேண்டும். சிலுவை உபதேசமாகிய சரியான கிறிஸ்தவ வாழ்க்கை முறையை போதிக்க போதிய சிரமம் எடுக்காத ஊழியத்தால் ஜனங்கள் உண்மையாக பயன் அடைய முடியாது. ஏனென்றால் ஆசீர்வாதங்களுக்காக கர்த்தர் காண்பித்த ஆலோசனையின் பாதை சொல்லப்படவில்லை.

சிலுவை சுமத்தல் என்றால் என்ன?

சிலுவை சுமத்தல் என்றாலே நம்மை அதிகமாக சிரமப்படுத்திக் கொள்ளத்தான் கர்த்தர் அழைக்கின்றார் என்றே அநேகர் நினைத்து விடுவதுண்டு. ஆனால் ஆண்டவருடைய அழைப்பிற்கு பின்னால் உள்ள உண்மையான எதிர்ப் பார்ப்புகளை சற்று உற்றுக் கவனிக்கும் போது, நமக்குள் பெரிய ஒரு விடுதலை உணர்வைப் பெற முடியும். ஆண்டவ ராகிய இயேசு கிறிஸ்து தம்மை பின் பற்றி வர விரும்புகிறவர்களுக்கு இரண்டு

முக்கிய நிபந்தனைகளைக் கொடுத்தார். ஒன்று. அவர்கள் தங்கள் சுயத்தை வெறுக்க வேண்டும். இரண்டு சிலுவையை சுமந்து வரவேண்டும்.

முதலாவதாக அவர்கள் தங்கள் சுய உணர்வுகளின்படியோ, சுயவாஞ்சைகளின்படியோ, சுயயோசனைகளின்படியோ, சுய சித்தத்தின்படியோ, செயல் படாமல் முற்றிலுமாக தங்களை கர்த்தருடைய சித்தத்தின் ஆளுகைக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும். சுருக்கமாக சொல்வதாகயிருந்தால் அப்போஸ்தலனாகிய பவுல் கூறிய வண்ணம், "இனி நான் அல்ல. கிறிஸ்துவே" என்ற நிலைக்குள் வரவேண்டும். அதாவது ஒரு மனிதன் தன்னைப் பிரியப்படுத்தி வாழ்கின்ற அனுபவத்தை விட்டு கிறிஸ்துவைப் பிரியப்படுத்தி வாழ்கின்ற ஒரு வாழ்க்கை அனுபவத்திற்கு வர வேண்டும்.

இரண்டாவதாக சிலுவையை சுமந்து கொண்டு பின்பற்ற வேண்டும். சிலுவை என்றவுடன், பாடுகள், துன்பங்கள், சிரமங்கள், துயரங்கள் ஆகியவற்றை சுமந்து கொண்டு வரவேண்டும் என்று அர்த்தமல்ல. இயேசு கிறிஸ்துவை பின்பற்றும் பாதையில், எதிர்மாறான, சூழ்நிலைகள் வந்தாலும் அவைகளை சந்திக்கும் அல்லது ஏற்றுக்கொள்ளும் ஒரு ஆயத்த நிலையோடு வரவேண்டும் என்பதையே சிலுவை சுமத்தல் குறிக்கிறது. அதாவது துன்பமோ, துயரமோ, குறைவோ, ஏளனமோ, நிந்தையோ எதுவானாலும், கர்த்தர் அனுமதித்த சூழ்நிலையில் பொறுமையாக அவைகளை ஏற்கும் மனநிலையோடு வரவேண்டும்.

இந்த இரண்டு நிபந்தனைகளையும் சேர்த்து கவனிக்கும்போது, ஆண்டவர் இங்கே கூறுவது என்ன என்பது புரியும். என்னை நீ பின்பற்ற விரும்பினால் உன்னை முழுமையாக என்னுடைய ஆளுகைக்கும், கட்டுப்பாட்டிற்கும் ஆலோசனைக்கும், நடத்துதலுக்கும் உட்படுத்த வேண்டும். இனி உன்னை நீ அல்ல. நான் விரும்புகிறபடி ஆள வேண்டும்" என்பதே. மொத்தத்தில் நம் வாழ்க்கையை முழுமையாக விசுவாசத்தோடு கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும் அல்லது அர்ப்பணிக்க வேண்டும் என்பதே சிலுவை சுமத்தல் ஆகும்.

ஒரு இரும்புதுண்டு கொல்லனுடைய முழு ஆளுகைக்கு வரும்போது அதை அவன் விருப்பப்படி உபயோகித்து அதனை சிறந்த கருவியாக்குகிறான். ஒரு குயவனின் கையில் களிமண் முழுமையாக அர்ப்பணிக்கப்படும் போது, அவன் அதை தன் பிரியப்படி உபயோகித்து, ஒரு நல்ல பாண்டத்தை உருவாக்குகிறான். இது போல நம்மையும் ஆண்டவர் தம் கையில் முழுமையாகப் பெற்று நம்மை அவர் விருப்பப்படி ஒரு உயர்ந்த நிலைக்கு கொண்டு வர விரும்புகிறார். அதற்காக நம்மை

அழைப்பதுதான் சிலுவை சுமத்தலின் உபதேசம். நம்மை சிரமப்படுத்த அல்ல. சீராக்கி, செம்மையாக்கி மேன்மையான ஒரு நிலைக்கு கொண்டு வரதலே சிலுவை சுமக்க அழைத்தலின் பின்னால் உள்ள தேவ நோக்கம்.

அர்ப்பணிப்பு, ஒப்புக்கொடுத்தல், சிலுவை சுமந்தல் ஆகியவை கேட்பதற்கு மிக கடுமையானவை போல இருந்தாலும், அவை உங்கள் வாழ்க்கையை முழுமையாக விசுவாசத்தோடு என் கையில் தாருங்கள். உங்களை நடத்தும் பொறுப்பை என்னிடம் முழுமையாக ஒப்படையுங்கள்" என்ற கர்த்தரின் கரிசனையான அழைப்புகள்தானே அன்றி வேறொன்றுமில்லை.

யார் தேவன் மேல் விசுவாசம் வைத்து தங்கள் வாழ்க்கைகளை அவரிடம் முழுமையாக ஒப்புவித்தார்களோ, அவர்களைத்தான் தேவன் தம்முடைய திட்டத்தின்படியும், சித்தத்தின்படியும் வனைந்து ஆசீர்வாதமான உயர்நிலைகளுக்கு கொண்டு வர முடிந்தது. ஜெபங்களினாலும், பக்தியான பலவகை கிரியைகளினாலும் மட்டுமே தேவன் நம்மை நாம் எதிர் பார்க்கும் ஆசீர்வாத நிலைகளுக்கு கொண்டு வர முடியாது. ஜெபங்களாயினும், பக்தி செயல்களாயினும், உபவாசங்களாயினும், ஆராதனைகளாயினும், ஊழியங்களாயினும் முதலாவது தேவனுக்கு நம்முடைய வாழ்க்கையை ஒப்புவித்தலாகிய சிலுவை சுமத்தல் என்ற அஸ்திபாரத்தின் மேல் எழுந்தால் மட்டுமே பயன் தரும்.

அநேகர் தங்களை முழுமையாக கர்த்தருடைய ஆளுகைக்கு உட்படுத்தலாகிய சிலுவை சுமத்தல் என்ற அஸ்திபாரத்தைக் குறித்து கவலைப்படாமலே, பலவித ஆவிக்குரிய கிரியைகளில் மட்டுமே கவனம் செலுத்துவதால்தான் அவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கை என்னும் கட்டடம் வலிமையற்று எந்த நேரத்திலும் விழுந்தக்க நிலையில் உள்ளது. அஸ்திபாரத்தைக் குறித்த சரியானக் கரிசனையின்மையே பலருடைய ஜெபங்கள், உபவாசங்கள், காணிக்கைகள், ஊழியங்கள், பக்தி ஒழுங்குகள் ஆகியவற்றிற்கு எந்த பிரயோஜனமும் இல்லாமல் செய்கிறது.

சிலுவை சுமத்தலாகிய அர்ப்பணிப்பின் அனுபவம் புதிய ஏற்பாட்டிற்கு மட்டுமே உரியதல்ல. பழைய ஏற்பாட்டிலும் அது இருந்தது. ஆபிரகாமும் தன்னை வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு தேவனை பின்பற்றுதலாகிய அர்ப்பணிப்பின் அனுபவப் பாதையில் நடந்துதான் ஆசீர்வாதங்களுக்கு தகுதியடைய முடிந்தது. தேவன் ஆபிரகாமின் வாழ்க்கையை எப்படி வேண்டுமானாலும் தம்முடைய விருப்பத்திற்கும், திட்டத்திற்கும் ஏற்ப வளைக்கவும், திருப்பவும் முடியும் என்ற நிலையை அடைந்த பிறகுதான் ஆபிரகாமின் வாழ்க்கையில் தேவன் தம்முடைய

ஆசீர்வாதத் திட்டத்தை நிறைவேற்ற முடிந்தது. அதாவது ஆபிரகாமின் சிந்தை, எண்ணம், செயல், மனநிலை, கொள்கை, குறிக்கோள், விருப்பு, வெறுப்பு யாவற்றையும் தமக்கேற்றபடி மாற்றவும், திருப்பவும் தக்கதான ஒரு பக்குவ நிலையை உருவாக்கிய பின்பு தான் தேவன் அவனை ஆசீர்வதித்து உயர்த்தினார்.

ஆபிரகாமின் பக்தி வாழ்க்கையின் பாதையை கவனிக்கும் போது, ஒன்று மட்டும் நன்றாகப் புரிகிறது. "தேவனே இதோ என் வாழ்க்கையை உம்மிடம் தந்து விடுகிறேன். இந்த வாழ்க்கையை இனி நீர் எப்படி விரும்புகிறீரோ அப்படி உபயோகித்துக் கொள்ளும். இனி இந்த வாழ்க்கையின் மேல் எனக்கு எந்த அதிகாரமும் இல்லை. உம்முடைய அதிகாரமே பூரணமாக விளங்குவதாக" என்ற ரீதியாகக் கூறி கர்த்தரிடம் தன் வாழ்க்கையை ஒப்புவித்திருக்கின்றான்.

சிலுவை சுமத்தலாகிய அர்ப்பணிப்பின் அனுபவம் அவனிடம் இருந்த காரணத்தினால்தான் ஊர் என்னும் தேசத்தை விட்டு வெளியேறியது துவங்கி, தன்னுடைய ஒரே மகனை பலியாகக் கொடுக்க முன்வந்தது வரை, ஆபிரகாமை தேவன் எல்லாவிதத்திலும் தாம் விரும்பியபடி மாற்றவும், திருப்பவும், வளைக்கவும் முடிந்தது என்பது புலனாகிறது. ஆபிரகாம் குயவன் கை களிமண் போல எல்லா விதத்திலும் தேவ சித்தப்படி இயங்கும் முதிர்ச்சி நிலையை எட்டிய பிறகுதான் தேவனுடைய ஆசீர்வாதத் திட்டம் அவனிடம் வெற்றியாக நிறைவேறியது.

ஆம். ஆண்டவருடைய முழுப் பொறுப்பிற்கும், அதிகாரத்திற்கும் நம்மை முற்றிலும் ஒப்புக் கொடுத்தலின் இன்னொரு பெயர்தான் சிலுவை சுமத்தல். நம்மால் சரியாக வாழத் தெரியாத வாழ்க்கையை ஆண்டவர் மிக சரியாக வாழ வைப்பதற்கு தேவையானதே சிலுவை சுமத்தல்.

மனுக்குலம் இழந்துபோன எல்லா தெய்வீக ஆசீர்வாதங்களையும், இயேசு தம்மைத் தாமே அர்ப்பணித்து சிலுவையை ஏற்றதின் மூலம் திரும்பவும் நமக்காக ஆயத்தமாக்க உள்ளார். அவைகளை பெறுவதற்காகவே சிலுவை சுமத்தலாகிய அர்ப்பண வாழ்க்கைக்கு ஆண்டவர் நம்மை அழைக்கின்றார். இது ஒரு ஆசீர்வாதத்திற்கான அழைப்பு என்பதை உணர்ந்து மனப்பூர்வமாக விசுவாசத்தோடு நம்மை ஆண்டவரின் ஆளுகைக்கு ஒப்புக் கொடுத்துவிட முன்வருவோமா? அங்கே கர்த்தரின் ஆசீர்வாதங்கள் நிரம்பி வழியும் என்பது நிச்சயம்.

O O O

சபை கூடும் இடங்களில்.....

சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு திருச்சபையின் காலை ஆராதனையில் கலந்து கொண்டு கர்த்தருடைய செய்தியை வழங்கினேன். அந்த ஆராதனை ஒரு சிறப்பு ஆராதனையாக அறிவிக்கப்பட்டு, அதற்காக நான் பாண்டிச்சேரியிலிருந்து பல சிரமங்களுக்கு மத்தியில் சென்றிருந்தேன். பிரசங்க வேளையில் சொல்லப்பட்ட கர்த்தருடைய வார்த்தைளை சபையர் மிகவும் வாஞ்சையோடு கேட்டார்கள். எல்லாம் சந்தோஷமாக ஆராதனை வேளை முடிந்தது.

ஆனால் ஆராதனை முடிந்த பிறகு இரண்டு பிரிவினருக்கிடையே கடுமையான வாக்குவாதங்கள் வந்து, முடிவில் சபைக்கூடுகை சண்டைக் கூடுகையாக மாறி, அடிதடி வரைக்கும் சென்றது. அங்கு நடந்த சபை கூடுகையை வெளியிலுள்ளவர்கள் பார்க்கவில்லை. ஆனால் தொடர்ந்து நடைபெற்ற சண்டையை போவோரும் வருவோரும் நின்று வேடிக்கைப் பார்த்து, பரிகாசம் செய்தனர். அந்த சூழ்நிலையில் அங்கு நிற்க எனக்கு வெட்கமாயிருந்தது. இப்படி ஒரு அசிங்கமான சூழ்நிலையைக் காணவா பல முக்கிய வேலைகளை விட்டு, புதுவையிலிருந்து வந்தேன் என எண்ணி வேதனைப்பட்டேன்.

ஆனால் இன்று புராதான திருச்சபைகளுக்கு நடுவில் எங்கு போனாலும் இது போன்ற காட்சிகளைத்தான் அதிகமாகக் காண

முடிகின்றது. சபை கூடுவதற்காக கட்டப்பட்ட தேவாலயங்கள் இன்று சண்டை போடுகின்ற களங்களாக மாறிவருவதைப் பார்த்து வேதனைப் படுவதா, வெட்கப்படுவதா என்று புரியவில்லை. சீர்திருத்த சபைப் பிரிவினருக்கு புராட்டஸ்டண்ட் என்ற பெயர் உண்டு. புராட்டஸ்ட் (PROTEST) என்றால் எதிர்ப்பது என்று பொருள். புராட்டஸ்டண்டுகள் என்றால் எதிர்ப்பவர்கள் என்று அர்த்தம். அன்று ரோமத் திருச்சபையின் வேத விரோத செயல்பாடுகளை எதிர்த்ததைத் தொடர்ந்து இந்த பிரிவு ஏற்பட்டதால் அதற்கு புராட்டஸ்டண்ட் என்ற பெயர் வந்தது. இதனை தவறாகப் புரிந்து கொண்டார்களோ, என்னவோ, புராட்டஸ்டண்ட் சபைகளைச் சேர்ந்த பலர் எப்போதும் எதிர்ப்பாளர்களாகவே இருக்கின்றனர்.

சராசரியான பிரதான திருச்சபைகளில் யாராவது ஒரு பிரசங்கியார் சற்று ஆரவாரமாக பிரசங்கம் செய்து விட்டாலோ, ஜெபம் செய்து விட்டாலோ, அங்குள்ள பலருக்கு அதனை சகிக்கவே முடியாது. ஏன் இவர் இப்படி பெந்தேகோஸ்தேக்காரர்கள் மாதிரி தேவையில்லாமல் சத்தம் எழுப்புகிறார். ஏன் ஆரவாரம் செய்கின்றார் என்று கண்டனக் குரல் எழுப்புவார்கள். ஆனால் இந்த அமைதிப் பிரியர்களின் சபை கமிட்டிக் கூட்டங்களிலும், ஆலயத்திற்கு வெளியே நடக்கும் வாக்குவாதங்களிலும் எழும்புகின்ற ஆரவாரத்தையும், ஆர்ப்பாட்டத்தையும் தெருவில் வருவோர் போவோரும் கேட்டு காதுகளை அடைக்க நேரிடும்.

மனிதர்கள் கூடி வருகின்ற இடங்களில் கருத்து வேறுபாடுகள் வருவது புதுமையானதல்ல. ஆதித் திருச்சபையிலும் அது இருந்தது. வாக்கு வாதங்களும், பிரிவினைகளும் அங்கும் ஏற்படவே செய்தன. ஆனால் கிறிஸ்துவின் சரீரமாக இயங்க வேண்டிய சபைகளில் கருத்து வேறுபாடுகள் கசப்புகளாக மாறி, அடிதடி, போலீஸ், கோர்ட், கேஸ் என்ற நிலை வரை செல்லுமாயின் அவைகள் எப்படி சபைகளாக இருக்க முடியும்?

கிறிஸ்துவை வெளியே தள்ளிய சபைகள்

இன்றைய பெரும்பாலான சபைகள் கிறிஸ்துவுக்குள்ளான சபைகள் அல்ல. அவைகள் கிறிஸ்துவை வெளியே தள்ளிவிட்ட சபைகளாகவும், கிறிஸ்துவை விட்டு வெளியே சென்று விட்ட சபைகளாகவும் உள்ளன. அங்கே பங்கேற்கும் பலர் கிறிஸ்துவுக்குள்ளானவர்களாகவிராமல், கிறிஸ்துவுக்கு வெகுதூரமாகிப் போனவர்களாகவே உள்ளனர்.

எனவேதான் இத்தனை கசப்பும், கோபமும், பிரிவினையும், சண்டைகளும், சச்சரவுகளும் சபை என்று அறியப்பட்ட இடங்களில்

பெருகிப் போயுள்ளன. சாத்தானோடு சண்டையிட அழைக்கப்பட்ட சபைகள் சாத்தானோடு சேர்ந்து நின்று சத்திய விதிகளுக்கு எதிராக சண்டை போடுகின்றன. இன்று ரோட்டரி சங்கம், அரிமா சங்கம், ஜேசிஸ் சங்கம் போன்ற பலதரப்பட்ட மக்கள் பங்கேற்கும் சங்கங்களில் நிலவுகின்ற ஒரு ஐக்கியத்தையும், ஒற்றுமையையும், நல்லெண்ணத்தையும், பல சபைகளில் பார்க்க முடியாத பரிதாப நிலை உள்ளது. கடவுளை அறியாதவர் களெல்லாரும் சகோதரத்துவ உணர்வோடு செயல்பட தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள முடிகின்றது. ஆனால் சகோதரத்துவத்தை முதல் நோக்கமாகக் கொண்ட திருச்சபைகள் சண்டையிடவே உருவானவைகள் போல செயல்படுவது எத்தனை வேதனையானது.

சபை என்பது அன்பு வெளிப்பட வேண்டிய இடம். ஐக்கியம் வளர வேண்டிய இடம். ஒருவருக்கொருவர் உதவியாயிருந்து உலகத்திற்கு மாதிரியாக இருக்க வேண்டிய இடம். அங்கே தாழ்மை இருக்க வேண்டும். பொறுமை இருக்க வேண்டும். கிறிஸ்துவுக்கேற்ற பண்பு நிலைகள் அங்கே வெளிப்பட வேண்டும். (அப் – 2:41–47)

ஆனால் சராசரியாக இன்றைய சபைகளில் எதைப் பார்க்க முடிகிறது? அன்பு ஆள வேண்டிய இடத்தில் விரோதம் விளையாடுகிறது. ஐக்கியம் வளர வேண்டிய இடத்தில் பிரிவினை தழைத்தோங்குகிறது. தாழ்மை தெரிய வேண்டிய இடத்தில் பெருமை துள்ளிக்குதிக்கிறது. பொறுமை பெருக வேண்டிய இடத்தில் கோபமும், கூச்சலும், கடுஞ்சொற்களும் ஆலமரமாக வளர்ந்து நிற்கின்றன. தேவன் கனப்பட வேண்டிய இடத்தில் எல்லா விதத்திலும் கனவீனப்படுத்தப்படுகிறார். தேவ பயத்தைக் குறித்து அதிகமாகப் பேசப்பட வேண்டிய இடம் தேவ பயமற்ற முரட்டாட்ட மனிதர்களின் பேரிரைச்சலால் நிறைந்து காணப்படுகிறது.

சபையில் ஒரு ஏவலர் வேலைக்கு ஆள் நியமிப்பது தொடங்கி சபைகளுக்கு ஒரு பிஷப்பை நியமிப்பது வரை எங்கும், எதிலும் வாக்கு வாதங்களும், சண்டைகளும், கோபதாபங்களும் கோஷ்டி மனப்பான்மைகளும், கோர்ட் கேஸ்களும் என்ற நிலை தொடருமாயின் இவைகள் சபைகள் என்று தங்களை அழைத்துக் கொள்வதில் என்ன நியாயமிருக்கிறது? தேவனை கனப்படுத்தத்தான் இயலவில்லை. கனவீனப்படுத்தாமலாவது இருக்க முடிகிறதா?

இன்று ஏராளமான சபைகளில் குறைந்த பட்சம் இரண்டு பிரிவுகள் உள்ளன. ஒரு பிரிவினருக்கு இன்னொரு பிரிவினர் செய்யும் அனைத்தும் தீமையாகத் தெரிகின்றது. இரு பிரிவினரும் பரஸ்பரம் ஒருவரையொருவர் எதிர்ப்பதும், குறை பேசுவதும், குற்றம் சாட்டுவதுமே தங்களின் பிரதான

ஆவிக்குரிய கடமை என நினைக்கின்றனர். பெரும்பாலும் இந்த கருத்து மோதல்களும், பிரிவினை சச்சரவுகளும் எது சரி, எது தவறு என்ற அடிப்படையில் ஏற்படுவது அல்ல. நான் பெரியவனா, நீ பெரியவனா என்ற சுய கவுரவப் பிரச்சனையின் அடிப்படையிலேயே ஏற்படுகிறது. ஒருவரை யொருவர் நேசிக்க முடியாத கசப்பான மனநிலைகளின் விளைவாகவே இவை உருவாகின்றன. பல கிறிஸ்தவ உறுப்பினர்களுக்கு சபை சம்பந்தமாக ஏதாவது பிரச்சனை கிளப்பவும், பிரச்சனைகள் பேசவும் வாய்ப்பில்லாத சூழ்நிலை நிலவினால் ஆலயத்திற்கு வருவதற்கே விருப்பம் இருப்பதில்லை. ஆம். கிறிஸ்துவின் சரீரமாக இயங்க வேண்டிய சபைகள் அந்த நோக்கத்தை அலட்சியம் செய்துவிட்டு, சாத்தானின் கைப்பாவைகளாக மாறிப் போய்க் கொண்டிருக்கின்றன.

கர்த்தரின் நியாயத்தீர்ப்பு

சபை என்பது எதற்காக? கிறிஸ்துவின் சரீரமாக அதாவது கிறிஸ்துவின் கருவியாக இயங்குவதற்காக. நாம் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லத்தான் சபைக்கு வரவேண்டுமேயன்றி, ஒருவருக்கொருவர் புறங்கூறவும், கசப்புகளை உமிழவும் அல்ல. நாம் ஒருவருக்கொருவர் நற்கிரியை செய்ய அழைக்கப்பட்டோமேயன்றி ஒருவருக்கொருவர் விரோதமாக பேசி கர்த்தருடைய நாமம் மகிமைப்பட வேண்டிய இடத்தை சண்டை ஸ்தலமாக மாற்றுவதற்காக அல்ல. (எபி – 10:24, 25)

பிரிவினைகளும், வாக்குவாதங்களும், கோபதாபங்களும், மோதல்களும் சபை நடுவில் உருவாகும் போது மகிமையான கர்த்தருடைய நாமம் அங்கே கனவீனப்படுகிறது. புறஜாதிகள் நடுவில் பரிசுத்தமான தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட அது காரணமாகிறது.

இதற்கு காரணமாக நாம் நடந்து கொள்வது ஒருபோதும் ஆசீர்வாதமாயிராது. அப்படிப்பட்டவர்கள் தங்களுக்குத் தாங்களே நாசத்தை வரவழைத்துக் கொள்கின்றார்கள். கர்த்தருடைய நாமத்தின் மகிமையைக் குறித்து கவலைப்படாமல் தங்களுடைய சுயத்தை பெரிதாக நினைத்து துணிகரமாக செயல்படுகின்றவர்களை கர்த்தர் நியாயந்தீர்க்காமல் விடமாட்டார். கர்த்தருடைய நாமம் சம்பந்தப்பட்ட எந்த ஒரு விஷயத்திலும் உண்மையின்றி, தேவ பயமின்றி, பொறுமையின்றி, தாழ்மையின்றி, தங்களை விட்டுக் கொடுக்க மனமின்றி, தங்களின் சுய கவுரவத்தை தேவனை விட முக்கியமாக நினைத்து செயல்படுகின்றவர்கள் தங்களுக்குத் தாங்களே சாபங்களை வரவழைத்துக் கொள்கின்றார்கள். கர்த்தருக்கேற்ற வழியில் நடந்து கர்த்தருக்கேற்ற சத்திய நிலைப்பாட்டின் மேல் நின்று கர்த்தருக்கு உரிய காரியங்களை செய்யவும் சாதிக்கவும்

விரும்பாமல், உலகத்திற்கேற்ற தவறான வழிகளில் சென்று தேவனுடைய காரியங்களை செய்ய விரும்புகின்றவர்கள் தேவ கோபத்தைத்தான் வரவழைப்பார்கள்.

சபைகளும் பதவிகளும்

பல சபைகளில் வாரத்திற்கு ஒரு நாள் சுமார் இரண்டு மணி நேரம் ஆராதனை நிகழ்ச்சி நடத்துவது தவிர ஆவிக்குரிய விதமான செயல்பாடுகள் வேறெதுவும் இல்லை. ஆனால் இந்த இரண்டு மணி நேர வழிபாட்டு நிகழ்ச்சியை மையமாகக் கொண்ட நிர்வாகம் தொடர்பாக வாரம் முழுவதும் சண்டை சச்சரவுகள் நடைபெறுகின்றன.

பெரும்பாலான சபை சம்பந்தப்பட்ட சச்சரவுகள் யாவும் நிர்வாகம் தொடர்பான விஷயங்களில் தங்களுக்கு எதிர்பார்த்த முக்கியத்துவம் கிடைக்காத ஒரு மனக்குறைவிலிருந்தே ஆரம்பமாகிறது. பலருக்கு கமிட்டிகளில் பதவி கிடைக்காவிட்டால் ஆலயத்திற்கு வருவதற்கு கூட பிடிக்காது. ஏதாவது ஒரு கனத்தைத் தேடியே அவர்கள் ஆலயத்திற்கு வருகிறார்கள். எனவே சபை கமிட்டி தேர்தல்கள் மற்றும் சபைத் தொடர்பான அமைப்பு தேர்தல்கள் சமுதாய அரசியல் களத்தை விட அதிக சூடு பிடித்ததாக உள்ளன.

கர்த்தருக்கு சேவை செய்ய எந்த கமிட்டி உறுப்பினர் பதவியோ, அமைப்புகளின் சேர்மன் பதவிகளோ, வேறெந்த முக்கிய தலைமைப் பதவிகளோ தேவையில்லை. ஆனால் சுயத்திற்கு சேவை செய்வதால்தான் எப்படியாவது இது போன்ற ஒரு பதவி நிலையை அடைந்து விட வேண்டும் என்று வெறி அநேகரை ஆட்டிப் படைக்கிறது. பதவியைத் தேடி அலைகிறவர்களும், அதற்காக அரசியல்வாதிகளைப் போல செயல் படுகிறவர்களும் ஒருபோதும் உண்மைக் கிறிஸ்தவர்களாக இருக்க முடியாது.

இன்று சபைத் தொடர்பான அல்லது சபை அமைப்புகள் தொடர்பான ஏதாவது ஒரு பதவியை எதிர்பார்க்கின்றோமென்றால், அதன் மூலம் நாம் என்ன சொல்வதாக பொருள்? நான் கர்த்தருக்கு ஊழியம் செய்ய விரும்புகிறேன். நான் கர்த்தருடையப் பணியில் பங்கு பெற விரும்புகிறேன். நான் கர்த்தருடைய நாமம் மகிமைப்பட எதையாவது செய்ய ஆசைப் படுகிறேன். இவ்விதம் சொல்வதாகத்தான் அர்த்தம்.

ஆனால் இவ்விதம் சொல்கின்றவர்களிடம் காணப்பட வேண்டிய தகுதிகள் என்ன? கர்த்தருக்கு பணி செய்ய வாஞ்சிக்கின்றவர்கள் முதலாவது கர்த்தருடைய இரட்சிப்பைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

அவர் சபையில் அந்தஸ்தான ஒரு நிலையிலிருந்தால் போதாது. அவர் நாலு பேருக்கு முன் மாதிரியாகவும், நற்சாட்சி பெற்றவராகவும் இருக்க வேண்டும். அவருடைய நோக்கம் உண்மையிலேயே கர்த்தருக்கு சேவை செய்தலாக இருக்க வேண்டும்.

சபை சம்பந்தமான எந்த ஒரு பதவியையும் தேடி செல்லுகின்றவர்கள் முதலாவது சில கேள்விகளை தங்களுக்குள் கேட்க வேண்டும். "நான் இரட்சிக்கப்பட்டிருக்கின்றேனா? நான் பரிசுத்தமாக வாழ்கிறேனா? நான் கர்த்தருடைய வார்த்தைகளின்படி வாழ என்னை அர்ப்பணித்து செயல்படுகிறேனா? என்னுடைய வாழ்க்கை மற்றவர்களுக்கு முன் மாதிரியாக இருப்பதற்கான தகுதியை உடையதா? உண்மையிலேயே நான் கர்த்தருக்கு சேவை செய்யத்தான் ஒரு பதவியை எதிர்பார்க்கிறேனா?

இவ்வித கேள்விகளைக் கேட்டு சரியான பதில்களை பெறும் முன்பு பதவிகளையும், பொறுப்புகளையும் தேடிச்செல்வது, கர்த்தருடைய காரியங்களை நாம் மிக சாதாரணமான விஷயங்களாக எடுத்துக் கொண்டதற்கு அடையாளங்களாகும். அது நல்லதல்ல.

ஒரு முறை தேவ ஊழியர் ஒருவர் ஒரு குறிப்பிட்ட சபையின் கமிட்டி உறுப்பினர் ஒருவரிடம் "நீங்கள் கர்த்தரை இரட்சகராக ஏற்று மனந்திரும்பிய வாழ்க்கை வாழ்கின்றீர்களா?" என்று கேட்டார். அதற்கு அவர் இந்த சமாச்சாரங்கள். எல்லாம் எனக்கு தெரியாது. நான் பல ஆண்டுகளாக இந்த சபையின் உறுப்பினர். எனவே நான் கமிட்டி உறுப்பினர் ஆனேன் என்றார். அதற்கு அந்த தேவ ஊழியர் ஒரு அடிப்படை மனந்திரும்புதலின் அனுபவம் கூட இல்லாமல் கர்த்தருடைய ஊழியம் சம்பந்தப்பட்ட ஒரு கமிட்டியில் நீங்கள் உறுப்பினராக இருப்பது தகுதியானதுதானா எனக் கேட்டார். அதற்கு அந்த உறுப்பினர், "இதிலே என்ன பெரிய தகுதி தேவைப்படுகிறது. மனந்திரும்பாமலே எங்கள் கமிட்டி சேர்மன் பல வருடங்களாக சேர்மனாக, பொறுப்பு வகிக்கவில்லையா? எங்கள் குருவானவர் இரட்சிப்பு என்றால் என்ன என்று தெரியாமலே இந்த சபையை நடத்தவில்லையா ! ஏன், எங்கள் பிஷப் மனந்திரும்பாமலே உயர் பதவி வகிக்கவில்லையா? மனந்திரும்பாமலே இவர்கள் எல்லாம் பதவி வகிக்க தகுதியிருக்கிறதென்றால், ஒரு சாதாரண கமிட்டி மெம்பராக இருக்க மனந்திரும்பாத எனக்கு தகுதியில்லையா" என்று சினிமா பாணியில் வசனம் பேசி பதிலளித்தார்.

ஆதித்திருச்சபையில் சாதாரணமான ஒரு பந்தி விசாரிப்பு வேலை செய்ய விரும்புகின்ற ஒருவர் கூட பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்தவராகவும், நற்சாட்சி பெற்றவராகவும் இருக்க வேண்டும் என்று

நிர்வகிக்கப்பட்டிருந்தது. (அப் – 6:3) ஆனால் இன்று சபையாருடைய வாக்குகளை பெற முடிந்த ஒரு செல்வாக்கு நிலையே அனைத்து ஊழியப் பொறுப்புகளுக்கும் போதுமான தகுதியாக விளங்குகிறது.

இது போன்ற காரியங்களை பேசிக்கொண்டும், எழுதிக்கொண்டுமிருந்தால் அதற்கு முடிவேயிராது. ஏனென்றால் எங்கே கர்த்தருடைய ஆவி உண்டோ அங்கே விடுதலை இருக்கும். எங்கே மனுஷ ஆவி ஆளுகை செய்கிறதோ அங்கே கசப்புகளும், வெறுப்புகளும், சண்டை சச்சரவுகளும், கொடூர போக்குகளும், விரோதங்களுமே வெளிப்படும். கர்த்தருடைய மகிமையை தேடாமல், சுய மகிமையை தேடி ஓடுகிறவர்களின் நடுவில் கர்த்தருடைய ஆவி செயல்படவும் முடியாது. கர்த்தருக்கேற்ற பரிசுத்தமான காரியங்களை அங்கே காணவும் முடியாது.

ஜீவ பரிசுத்தமாக விளங்க வேண்டிய சபைகளில் ஏன் இத்தனை பரிசுத்தக் குறைவான காரியங்கள் என்று அங்கலாய்த்து பயனில்லை. ஏனென்றால் அங்கே பரிசுத்தராகிய தேவன் இல்லை.

அக்கிரமங்களை கண்டிக்க வேண்டாமா?

இந்த வேளையில் பலர் அவ்வப்பொழுது எழுப்புகின்ற ஒரு கேள்வி என்னவென்றால் சபைகளின் நடுவில் ஒரு சாரார் அநீதியாகவும், அக்கிரமமாகவும் நடந்து கொள்வதை அமைதியாக பார்த்துக் கொண்டிருக்க முடியுமா என்பதுதான்.

இங்கே ஒன்றை நாம் அறிந்து கொள்ள வேண்டும். தாவீது தேவனுடைய உடன்படிக்கை பெட்டியை எருசலேமுக்கு கொண்டு வரும் பாதையில், திடீரென பெட்டி வண்டியிலிருந்து சாயும் சூழ்நிலை ஏற்பட்டது. உடனே ஊசா என்பவன் அதிக பக்தி வைராக்கியத்துடன் பெட்டியை தன் கைகளினால் தாங்கிப்பிடிக்கப் போனான். ஆனால் அந்த பக்தி வைராக்கியத்தை தேவன் பாராட்டவில்லை. அதற்குப் பதிலாக தேவன் அவனுடைய துணிவினிமித்தம் அவனை அடித்தார் என்று வேதம் சொல்கின்றது. (1 சாமு – 6:7) ஏனென்றால் அங்கே பரிசுத்தமான தேவனுடைய வார்த்தைகள் சரியான விழிப்புணர்வுடன் பின்பற்றப்படவில்லை.

சிலவேளை நாம் நம்மை வைராக்கியமான பினெகாசுகள் என்றும், தைரியமாக தட்டிக்கேட்கும் எலியாக்கள் என்றும், எதற்கும் அஞ்சாத யோவான் ஸ்நானகனென்றும் எண்ணிக்கொள்ளலாம். நல்லது. அதே வேளையில் முதலாவது நாம் உண்மையிலேயே தேவனுடைய வார்த்தைகளுக்கும், உண்மைகளுக்கும் மதிப்பளிக்கும் பினெகாசுகள்

தானா? உண்மையிலேயே நமக்குள்ளே யோவான் ஸ்நானனைப் போன்ற சத்திய தாகம் உள்ளதா என்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும். கர்த்தருக்கு முன்பாக நாம் சரியாக இல்லாத நிலையில், கர்த்தருக்கு எதிராக செயல்படுபவர்களுக்கு எதிராக பினகாசைப் போல ஈட்டியோடு பாய நமக்கு தகுதியில்லை. கர்த்தருக்கு முன்பாக நாம் பரிசுத்தமாக வாழாத நிலையில், "யோவான் ஸ்நானனைப் போல" நீ செய்தது தவறு" என்று யாரையும் கண்டிக்க நமக்கு அதிகாரம் இல்லை. அன்று அக்கிரம ஆகாபை கர்த்தருக்காக வாழ்ந்த எலியா தைரியமாக எதிர்த்தான். கர்த்தருக்கு முன்பாக பரிசுத்தமாக வாழ்ந்த யோவான் ஸ்நானன் அன்று, துன்மார்க்க ஏரோதை துணிந்து கண்டித்தான். ஆனால் இன்று விந்தை என்னவென்றால், ஆகாபுகளை எதிர்ப்பவர்களும் ஆகாபுகளாகவே இருக்கின்றனர். ஏரோதைக் கண்டிக்கிறவர்களும், கர்த்தரை மதியாத ஏரோதுகளாகவே உள்ளனர். அன்று இயேசுவும், யோவானும் மாய்மாலக் காரர்களாகிய பரிசேயர்களை பயமின்றி எதிர்த்தனர். அதுபோல இன்றும் பரிசேயர்கள் எதிர்க்கப்படுகிறார்கள். ஆனால் எதிர்த்து நிற்பவர்களும் மாய்மால பரிசேயர்களாகவே உள்ளனர்.

கர்த்தர் பட்சிக்கிற அக்கினி

கர்த்தரோடு சம்பந்தப்பட்ட விஷயங்களில் நமக்கு மிகுந்த ஒரு எச்சரிக்கை தேவை. கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்படுகிற, அவகீர்த்தி யடைகிற ஒரு நிலைக்கு காரணமாயிருக்கும் யாரையும் தேவனுடைய நீதி சும்மா விடாது. அவர் பட்சிக்கின்ற அக்கினி. அவருடைய நாமம் விருதாவாய் வழங்கப்படுவதை அவர் சாதாரணமாக எடுத்துக் கொள்ளமாட்டார்.

என்னுடைய ஊழியப் பாதையிலே சிலருடைய வாழ்க்கை திடீரென இருளடைந்து போனதை கண்டிருக்கின்றேன். அப்படிபட்ட வேதனைக்குரிய நிகழ்வுகள் ஏற்பட்ட போது, முதலில் நினைவில் ஓடி வந்தவை கர்த்தருடைய ஆலயப்பிரகாரங்கள் என்று அறியப்பட்ட இடங்களிலே அவர்கள் துணிகரமாக தேவ பயமின்றி நடந்து கொண்ட சம்பவங்களே. சிலருடைய அகால மரணங்கள், திடீர் வியாதிகள் குடும்ப சீரழிவுகள், பிள்ளைகளின் ஒழுங்கீனங்கள் போன்றவை அவர்கள் கர்த்தருடைய பரிசுத்தமான விஷயங்களில் ஜாக்கிரதையின்றி, உசியா ராஜாவைப் போல உதாசீனமாக நடந்து கொண்டதால் ஏற்பட்டிருக்க முடியும். யாருடைய கஷ்டங்களையும், வியாதிகளையும், மரணங்களையும், நாம் இதனால்தான் வந்தது, அதனால் தான் வந்தது என்று ஒரு போதும் நியாயந் தீர்க்கவோ, எல்லாம் தெரிந்தவர்களைப் போல பேசவோக் கூடாது.

நல்லவர்களுக்கும் இவை யாவும் வர முடியும். பொல்லாதவர்களுக்கு நிகழ்ந்த அந்த சம்பவங்கள் கூட அவர்களின் தீய செயல்களின் விளைவாக அல்லாதவையாகவும் இருக்க முடியும்.

அதே வேளையில் கர்த்தருடைய சந்நிதியில், கர்த்தருடைய ஊழிய விஷயங்களில், கர்த்தருடைய காரியங்களில் சுயத்தை முன்னிறுத்தி உலகத்து மனிதர்களைப் போல நடந்துகொள்வது கடுமையான ஆபத்துகளை வரவழைக்க முடியும் என்ற முன்னெச்சரிக்கையும் நமக்கு வேண்டும். எல்லாம் சாதாரணமாக எல்லோருக்கும் நிகழ்வது போலத்தான் நிகழ்கிறது என எண்ணி சில பாடங்களை கற்காமல் போய்விடக்கூடாது.

கர்த்தருக்கு மகிமை செலுத்துவதற்காக கூடி வந்த இடங்களிலே, அந்த மகிமை செலுத்தும் நோக்கத்தை மறந்து, தங்களின் சுய விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் கோபங்களையும், எரிச்சல்களையும், கசப்புகளையும், காழ்ப்புணர்ச்சிகளையும், கடும் வார்த்தைகளையும் கொட்டித் தீர்ப்பதை நாம் ஒரு சாதாரணமான விஷயமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இவ்விதமான ஆவிக்குகந்ததல்லாத நடத்தைகளையும், தேவனுக்கேற்காத நடவடிக்கைகளையும் தேவன் கண்டு கொள்ளாமல் மவுனமாயிருப்பார் என்று எண்ணிவிட்டால் அது மதியீனமாகவேயிருக்கும்.

தேவனை மகிமைப்படுத்தும் நோக்குடன் கூடி வரும் இடங்களில் அன்பையும், ஐக்கியத்தையும், பொறுமையையும், தாழ்மையையும் வெளிப்படுத்த பிரயாசப்பட வேண்டும். அப்போது அவை ஆசீர்வாதமான இடங்களாக விளங்கும். அதற்குப் பதிலாக வெறுப்பையும், விரோத உணர்வையும், வெளிப்படுத்தி சமாதானத்திற்கான இடங்களை, கோபதாபங்கள் பொங்கும் இடங்களாகவும், வாக்கு வாதங்களையும், பிரிவினைகளையும் வளர்க்கும் இடங்களாகவும், நீ பெரியவனா, நான் பெரியவனா பார்ப்போம் என்று சவால் விடும் இடங்களாகவும் மாற்றினால், அங்கே தேவ கிருபையை அல்ல. தேவ கோபத்தைத்தான் வாங்கிக்கட்டிக் கொள்ள முடியும். ஆராதனை செய்ய வந்த இடத்தில் அருவருப்பான ஆரவாரங்களிலும், ஆர்ப்பாட்டங்களிலும் பிரியமாக ஈடுபட்ட பலர் தங்களுக்கு சாபங்களை தேடிக்கொண்டதோடு, தங்களுடைய பிள்ளைகளுக்கும் சாபங்களைத் தேடிக் கொண்ட சம்பவங்கள் ஏராளம் உண்டு.

இன்று காவல் நிலையங்களிலும், நீதி மன்றங்களிலும் போய் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் குற்றச்சாட்டுக்களை கூறி சண்டையிட்டுக் கொள்வதை தேவனை அறியாத அதிகாரிகளும், அலுவலர்களும், கிறிஸ்தவரல்லாத பொது ஜனங்களும் பார்த்து கேலியும்,

கிண்டலும் செய்கின்றார்கள். அன்பையும், அன்னியோன்னியத்தையும், பொறுமையையும், தாழ்மையையும் அதிகமாய் போதித்த இயேசுவின் பக்தர்கள் ஏன் இப்படி கோபாவேசமாய் போராடுகிறார்கள் என அவர்கள் வினா எழுப்புகிறார்கள். சிலுவையில் தொங்கும் வேளையிலும் "பிதாவே இவர்களுக்கு மன்னியும்" என்று ஜெபித்த, இயேசு நாதரின் விசுவாசிகள் ஏன் இப்படி மன்னிக்கும் மனோபாவங்களை இழந்து, ஒருவரையொருவர் கடித்துக் குதறுகிறார்கள் என அவர்கள் ஆச்சர்யப்படுகின்றார்கள்.

அன்று கொரிந்து சபையைச் சேர்ந்த சில விசுவாசிகள் தங்கள் நடுவில் உள்ள பிரச்சனைகளுக்கு அவிசுவாசிகளிடம் போய் நியாயம் கேட்டார்கள். அவர்களின் அவ்வித செயல்பாட்டை பவுல் கடுமையாகக் கண்டித்தான். நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது. என்று, என்று கூறிய அவன், அப்படி செய்கிறதைவிட, நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக் கொள்ளுகிறதில்லை. ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக் கொள்ளுகிறதில்லை, என்று காட்டமாக கேட்டான். (1 கொரி – 6:7)

நாம் நல்லவர்களா?

இன்று சபைகளிலும், சபை சம்பந்தமான நிர்வாகங்களிலும், ஆலய சம்பந்தமான நிர்வாகங்களிலும், ஆலய சம்பந்தமான அமைப்புகளிலும், உண்மை, நேர்மை, நியாயம், தேவபயம் இல்லாதோர் பெருகியுள்ளனர். இப்படிப்பட்டவர்களின் வேதத்தை மதியாத, சுய நல செயல்பாடுகளின் விளைவாக பல அநீதிகள் இழைக்கப்படுகிறது என்பது உண்மை. இப்படிப்பட்ட தேவனை அறியாத மனிதர்களின் சத்திய விரோதமான செயல்பாடுகள் அநேகரை ஆத்திரமடையச் செய்கிறது என்பது உண்மைதான்.

இதுபோன்ற காரியங்களைக் கண்டும் காணாதது போல இருக்க வேண்டும் என்றோ எது நடந்தாலும் ஏன் என்று கேளாமல் மவுனமாக இருக்க வேண்டும் என்றோ, தவறு செய்கிறவர்களைத் தட்டிக் கேட்காமல் அவர்களை அப்படியே வளரவிட வேண்டும் என்றோ கூறுவது சரியாகவோ நியாயமாகவோ இராது.

அன்றைய பரிசேயர்களையும், சதுசேயர்களையும் இயேசு கடுமையாகக் கண்டித்தார். அவர்களின் வேத விரோத நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டி எச்சரிக்க அவர் தவறவில்லை. அவர்களின் மாய்மாலங்களை அவர் பொறுமையாய் வேடிக்கை பாராமல், கடுமையான வார்த்தைகளால் விமர்சிக்கவே செய்தார். ஒரு முறை ஆலயத்தை வியாபார ஸ்தலம் போல

மாற்றியவர்களை சாட்டையால் அடித்து துரத்தவும் செய்தார்.

எனவே தவறுகளையும், குற்றங்களையும், அநீதிகளையும், ஆகாத செய்கைகளையும் சுட்டிக் காட்டுவதும், தட்டிக் கேட்பதும் தவறு அல்ல. அதே வேளையில் தவறுகளை கண்டிக்க செல்லும் முன்பு கர்த்தருக்கு முன்பாக நாம் தவறற்றவர்களா என்பதையும் பார்க்க வேண்டும். குறைகளைச் சுட்டிக்காட்டும் நாம் தேவனுடையப் பார்வையில் குற்றமற்றவர்கள்தானா என்பதையும் யோசிக்க வேண்டும். நம்மிடம் நாம் பல தவறுகளையும், குற்றங்களையும் வைத்துக் கொண்டு பிறருடைய குறை குற்றங்களைத் தட்டிக் கேட்க நமக்கு தகுதியில்லை.

இரண்டாவதாக நம்முடைய நோக்கம் மிக முக்கியமானது. உண்மையிலேயே நாம் தேவனுக்காக வைராக்கியம் கொள்கின்றோமா, அல்லது சுய மன வைராக்கியத்தின் விளைவாக அப்படிச் செய்கிறோமா என்பதை சிந்திக்க வேண்டும். சத்தியத்தின் மேலும், உண்மையின் மேலும் கொண்ட பற்றின் காரணமாக நாம் சில விஷயங்களை எதிர்க்கின்றோமா அல்லது நம்முடைய மாம்சீக மன உணர்வுகள் பாதிக்கப்பட்டதால், தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளின் விளைவாக எதிர்க்கின்றோமா என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

மூன்றாவதாக நம்முடைய சுட்டிக்காட்டுதல்களும், எதிர்ப்புகளும், விமர்சனங்களும், தட்டிக் கேட்டல்களும் ஆவிக்கேற்ற விதமாக இருக்க வேண்டும். கர்த்தருக்கு உகந்த வழிகளில் நின்று சில காரியங்களை சுட்டிக் காட்டவும், எதிர்க்கவும், தடுக்கவும் இயலாமல் போகும் போது, கர்த்தர் பார்த்துக் கொள்ளட்டும் என்று விட்டுவிட வேண்டும். நம்முடைய நியாயங்களை நிலை நாட்ட உலக மனிதர்களைப் போல சத்திய நிலைப்பாடுகளையும், நல்ல குண நிலைகளையும், பண்புகளையும் விட்டு விலகிப் போய் செயல்பட வேண்டிய கட்டாயம் நேரிடுமென்றால், அங்கே நம்முடைய நியாயங்களை விட்டுக் கொடுப்பதே தேவனுக்கு உகந்தது. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவனை இயேசு பாக்கியவான் என்றார். (மத்–5:10)

நம்முடைய நியாயங்களை நிலைநாட்டுவதற்காக கடும் வாக்குவாதம் செய்ய வேண்டிய கட்டாயம் நேரிட்டாலோ, பொறுமையை இழந்து சண்டை போட வேண்டிய நிர்பந்தம் நேரிட்டாலோ, கடவுளை அறியாதவர்கள் கடைப்பிடிக்கும் குறுக்கு வழிகளுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டாலோ அவைகளை தவிர்ப்பதே தேவனுக்கு பிரியமான அணுகு முறையாகும். சுருங்கக் கூறின் கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்படுகிற, தேவனுடைய காரியங்களை குறித்து பிறர் பரிகாசமாக பேசுகிற,

வேதத்திற்கு விரோதமான குணநிலைகளுக்குத் தாவுகிற சூழ்நிலைகளுக்கு நாம் எந்த விதத்திலும் காரணமாயிருக்கக் கூடாது. நம்முடைய நியாயங்களை விட தேவனுடைய பரிசுத்தமும், அவருடைய கனமும், அவருடைய நாம மகிமையும் மிக மிக முக்கியமாக எண்ணப்பட வேண்டியவையாகும். நம்முடைய வாதம் சரியானதா, சரியற்றதா என்பதல்ல. நம்முடைய நோக்கம் நேர்மையானதா, நேர்மையற்றதா என்பதல்ல. நம்முடைய நிலைப்பாடு நியாயமானதா, நியாயமற்றதா என்பதல்ல. நாம் எடுக்கின்ற நடவடிக்கைகளின் விளைவாக உருவாகின்ற சூழ்நிலை கர்த்தருடைய நாமத்திற்கும், மகிமைக்கும் அவருடைய பரிசுத்த வார்த்தைகளுக்கும் அவகீர்த்தியை ஏற்படுத்தும் விதமாக உள்ளதா என்பதே முக்கியம். தேவனுடைய நாமம் புற ஜாதிகளின் நடுவில் கனவீனத்தை சந்திக்கின்ற ஒரு நிலையை ஏற்படுத்தும் எந்த ஒரு செயலும் தவிர்க்கப்பட வேண்டியதே. வேத நியாயங்களுக்கு விலகிப் போகத் தூண்டும் எந்த ஒரு சூழ்நிலைக்கும் நாம் காரணமாகாமல் இருப்பதே தேவன் விரும்புவது.

○ ○ ○

பெந்தெகோஸ்தே சபைகளின் இன்றைய நிலைமை

7

இன்று ஒரு கூட்டம் கிறிஸ்தவ சபைகள் மெயின் லைன் சபைகள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த சபைகளுக்கு புராதான சபைகள், பாரம்பர்ய சபைகள், பெயர்க் கிறிஸ்தவ சபைகள், செத்த சபைகள் என்று பல பெயர்களை பெந்தெகோஸ்தே சபைகள் என அழைக்கப்படும் சபைகள் சூட்டியுள்ளன.

பெந்தெகோஸ்தே சபைகள் சூட்டிய இந்த பெயர்கள் தங்களுக்கு பொருத்தமானவைகள் அல்ல என்று நிரூபிக்கும் விதமாக மேற்கண்ட மெயின் லைன் சபைகள் இதுவரை எதையும் செய்யவில்லை என்பது உண்மை. மேற்கண்ட மெயின் லைன் சபைகளில் இன்றைய நிலையை கவனிக்கும் போது, பெந்தேகோஸ்தே சபைகள் தங்களுக்கு சூட்டிய பெயர்கள் மிக மிகச் சரியானதே என்று ஒப்புக்கொள்வது போலவே உள்ளது.

இந்த மெயின் லைன் சபைகளை வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, லவோதிக்க சபையோடு ஒப்பிடுவது தவறு. ஏனென்றால் லவோதிக்கேய சபையில் குளிரும் இருந்தது. அனலும் இருந்தது. ஆனால் இன்றைய மெயின் லைன் சபைகளில் அனல் என்பதே கிடையாது. அது மிக மிகப் பரிதவிக்கத் தக்க நிலையில் கடுங்குளிரால் நடுங்கிக் கொண்டிருக்கிறது. இந்த திருச்சபைகளில் தற்போதைய ஆவிக்குரிய நிலைமை மருத்துவர்களால் கைவிடப்பட்ட நோயாளியின் மிக சீரியஸான நிலைமைக்கு ஒப்பாக இருக்கிறது.

மெயின் லைன் சபைகளின் நிலைமை பரிதவிக்கத்தக்க நிலையில் இருக்கும் சூழ்நிலையில் பெந்தெகோஸ்தே சபைகளைப் பார்த்தாவது ஆறுதலடைந்து, ஒரு அடைக்கலம் தேடலாமென்றால், அவைகளின் நிலைமை வெளியே சொன்னால் வேதனை என்ற விதமாக உள்ளது.

மெயின் லைன் சபைகளை பெயர்க்கிறிஸ்தவ சபைகள் என்றும், செத்த சபைகள் என்றும் பெயர் சூட்டி மகிழ்ந்த பெந்தெகோஸ்தே சபைகள் தங்களை உயிரோடிருக்கிறவர்களாக விளங்கச் செய்ய தவறிப் போய்விட்டது. பிற சபைகளை அனலற்ற சபைகள் என்று அடையாளங் காட்டிட அதிக ஆர்வங் காட்டிய இந்த சபைகள் தங்கள் விஷயத்திலோ குளிருமின்றி, அனலுமின்றி லவோதிக்கேயத்தனமாக உள்ளது. உயிரோடிக்கிறவர்கள் என்ற பெயரைப் பெற்றும் செத்த நிலையிலேயே காணப்பட்ட சர்தை சபைக்கு ஒத்த நிலையிலேயே பெரும்பாலான இன்றைய பெந்தெகோஸ்தே சபைகள் உள்ளன.

ஆவிக்கேற்ற கண்ணோட்டத்தில் பார்க்கும் போது, இன்றைய மெயின் லைன் சபைகள் என அழைக்கப்படும் பாரம்பர்ய சபைகளுக்கும், ஆவிக்குரிய சபைகள் என அழைக்கப்படும் பெந்தெகோஸ்தே சபைகளுக்கும் இடையில் ஆவிக்கேற்ற விதமாக பெரிய வித்தியாசங்கள் எதுவும் இல்லை. ஆராதிக்கும் விதங்களில் வேறுபாடுகள் தெரிகின்றதே அன்றி, ஆவிக்குரிய வாழ்க்கை நிலைகளிலே ஏறக்குறைய ஒரே விதமாகவே உள்ளன. மெயின் லைன் சபைகளை பெயர்க் கிறிஸ்தவ சபைகள் என்று அழைத்துக் கொள்ளும் இந்த சபைகள் தாங்கள் பெயர் பெந்தெகோஸ்தே சபைகளாக இருப்பதை உணர வேண்டிய தேவை உள்ளது.

புராதான திருச்சபைகளின் கடும் வறட்சியினால் பாதிக்கப்பட்டு, பெந்தேகோஸ்தே சபைகளில் அடைக்கலம் தேடியவர்களில் பலருடைய நிலைமை நெருப்புக்கு தப்புவதற்காக ஆற்று வெள்ளத்தில் குதித்தவன் கதையாகவே உள்ளது. மொத்தத்தில் இன்றைய திருச்சபைகள் விசுவாசிகளுக்கு தாகந்தீர்க்க இயலாத கானல் நீர்களாக மாறிப் போனது மிக மிக வேதனைப்பட வேண்டிய விஷயம். இன்றைய விசுவாசிகளின் நிலைமை மேய்ப்பனற்ற ஆடுகளுக்கொத்த பரிதவிக்கத்தக்க நிலையாகவே உள்ளது. இது மிகவும் துக்ககரமானது.

சாதனையாளர்களா? போதனையாளர்களா?

பெரும்பாலான இன்றைய பெந்தெகோஸ்தே போதகர்கள் சாதனையாளர்களாக விளங்க விரும்புகின்றார்களேயன்றி நல்ல போதனையாளர்களாக விளங்க விரும்பவில்லை. சபை வளர வேண்டும், விசுவாசிகள் எண்ணிக்கை பெருக வேண்டும். வளர்ந்து முன்னனியில்

உள்ள சபைகளுக்கு ஒப்பாக வரவேண்டும், பல கிளை சபைகள் உருவாக வேண்டும் என்பது போன்ற ஆசைகள்தான் அவர்களை முந்தி முன்னே கொண்டு செல்கின்றன. இது போன்ற ஆசைகள் தவறு எனக் கூறுவது சரியல்ல. ஆனால் இவ்வித ஆசைகள் மேலோங்கி நிற்கும் அதே வேளையில் விசுவாசிகளின் ஆவிக்குரிய தரம் பெருக வேண்டும். அவர்களை வல்லமையான சாட்சிகளாக நிறுத்த வேண்டும், கிறிஸ்துவின் சாயல் பிரதிபலிக்கின்ற விதமாக விசுவாசிகளை போதித்து வழி நடத்த வேண்டும் என்ற ஆசைகளோ இல்லாமல் போய்விட்டது. எனவே சபை வளர்ச்சி, விசுவாசிகள் எண்ணிக்கை பெருகுதல் என்ற ஆசைகள் யாவும் தான் வளர வேண்டும், தனக்கொரு பெரிய அமைப்பு உருவாக வேண்டும் என்ற சுயலாப ஆசைகளின் விளைவானதாகவே உள்ளன.

இன்றைய பெந்தெகோஸ்தே சபைகளில் சத்தங்களுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம், சத்தியத்திற்கு கொடுக்கப்படுவதில்லை. ஆரவாரங்களுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் ஆவிக்கேற்ற அலங்காரங்களுக்கு கொடுக்கப்படுவதில்லை. ஆரோக்கியமான உபதேசத்துக்குரியவைகளைப் பேசி ஜனங்களை சரியான கிறிஸ்தவ சத்தியத்தின் பாதையில் நடத்த கரிசனை கொண்ட போதகர்கள் பெந்தெகோஸ்தே வட்டாரங்களில் மிகவும் குறைந்து போய்விட்டார்கள்.

சபை நடத்துகின்ற மேய்ப்பன் போதக சமர்த்தனாக இருக்க வேண்டும் என்று வேதம் கூறுகின்றது. (11 தீமோ – 2:24) அவன் ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்ல வல்லவனாயும் இருக்கவேண்டும். (தீத்து – 1:9) ஆனால் இன்றைய பல போதகர்களிடம் பிரசங்க கவர்ச்சி இருக்கிறதேயன்றி, ஆவிக்குரிய வளர்ச்சியை ஏற்படுத்தும் சத்திய சாரங்கள் எதுவும் அவைகளில் இல்லை. பல பாஸ்டர்கள் நல்ல பாடகர்களாக இருக்கிறார்களேயன்றி, நல்ல போதகர்களாக இல்லை. எனவே அவர்கள் விசுவாசிகளை பாட வைக்க முடிகிறதேயன்றி, அவர்களை பரிசுத்த வாழ்க்கையில் வெற்றி நடைபோடும் படி ஏவி நடத்த இயலவில்லை. பல போதகர்கள் உற்சாகமான பாடல்களால் கூடிவரும் மக்களை பரவசப்படுத்துவதில் திறமையானவர்களாக இருக்கின்றார்களேயன்றி, ஆழமான, ஆரோக்கியமான வேத போதனைகளால் அவர்களை பரிசுத்தப் படுத்துவதில் மிகவும் பின் தங்கியிருக்கின்றார்கள். ஜனங்களை எப்படி குஷியாக்க முடியும் என யோசிக்கின்றார்களேயன்றி அவர்களை ஆவிக்குரிய உயர்நிலை வாழ்க்கையில் எப்படி வலுவாகக் கட்டி எழுப்புவது என்று யோசிக்கவில்லை.

ஆனால் ஜனங்களை எவ்வளவு சிறப்பாக பாட வைத்தாலும், துதிக்க வைத்தாலும், ஜெபிக்க வைத்தாலும், அவர்களை ஆரோக்கியமான வேத

போதனைகளினால் வளர்வதற்கு போதிய கவனம் செலுத்தாவிடில் எந்த பிரயோஜனமும் இல்லை. ஏராளமான சபைகள் நல்ல ஆராதனைக்காக அறியப்பட்ட போதிலும், நல்ல போதனைக்காக அறியப்படவில்லை.

ஊழியத்தகுதிகள்

இந்நாட்களில் ஒரு சாதாரண பியூன் வேலைக்குக்கூட பல தகுதிகள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆனால் இன்றைய பெந்தெகோஸ்தே சபைகளில் பாஸ்டர் பணிக்கு எந்த தகுதியும் தேவையில்லை என்பது போன்று ஆகிவிட்டது. ஜனங்களை சரியான சத்தியத்தின் பாதையில் வழி நடத்துகின்ற மேய்ப்பனின் பணி சாதாரணமல்ல. அந்த பணிக்கு வருகின்றவர்கள் அதைக்குறித்த விசேஷ ஜாக்கிரதையுடையவர்களாக இருக்க வேண்டும்.

பாஸ்டராக மாறும் முன்பு தனக்கு அப்படிப்பட்ட ஒரு திட்டவட்டமான அழைப்பு இருக்கிறதா? அதைக்குறித்த ஒரு தரிசனம் தனக்கு உண்டா? அதனை செய்வதற்குத் தேவையான போதகத்திறன் தனக்கு ஆவியினால் தரப்பட்டுள்ளதா? என்றெல்லாம் பலர் யோசிப்பதே இல்லை.

சிலரை கர்த்தருக்கு நேராக வழி நடத்த முடிவதால் பாஸ்டராகும் தகுதி வந்து விட்டது என்று அர்த்தமல்ல. ஜெபக்கூட்டத்தை நடத்தும் பழக்கம் இருப்பதால் தன்னால் ஒரு சபையையும் நடத்த முடியும் என எண்ணிவிடக் கூடாது. நன்றாகப் பாடி உற்சாகமான ஒரு ஆராதனை வேளையை நடத்த முடிவதால், தன்னால் ஒரு கூட்டம் மக்களை மேய்க்கவும் முடியும் என எண்ணிவிடக் கூடாது. இன்று உண்மையான ஊழிய அழைப்பு இல்லாத பாஸ்டர்களும் போதகத்திறன் இல்லாத பாஸ்டர்களும் பெந்தெகோஸ்தே சபைகளில் பெருகிப் போய்விட்டார்கள்.

முன்மாதிரி வாழ்க்கை

சபை நடத்தும் பாஸ்டர் எப்படி ஆராதனை நடத்துகிறார், எப்படி ஊழியம் செய்கிறார், எப்படி பிரசங்கம் செய்கிறார் என்பதை விட அவர் எப்படி கிறிஸ்துவிக்கேற்றபடி வாழ்கின்றார் என்பது மிக முக்கியம். மேய்ப்பன் மந்தைக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். (1 பேதுரு – 5:3) மேய்ப்பனின் வாழ்க்கை முறை விசுவாசிகள் பின்பற்றத்தக்க விதமானதாக இருக்க வேண்டும். இந்த முன்மாதிரி நிலைதான் இன்றைய பெந்தெகோஸ்தே சபைகளில் பேரளவில் காணாமல் போய்விட்டது. பெரும்பாலான போதகர்கள் பரிசுத்தம், உண்மை, நீதி, கிறிஸ்தவ குணாதிசயங்கள், ஒழுங்கு, உத்தமம் ஆகியவற்றைக் குறித்து சரியாக போதிப்பதும் இல்லை. அவைகளின்படி வாழ்வதும் இல்லை. சிலர் அவைகளை போதித்தாலும்,

போதித்தபடி நடந்து காட்டவேண்டும் என்ற தாகமற்றவர்களாக யிருக்கின்றனர்.

"நான் கிறிஸ்துவை பின்பற்றுகிறது போல நீங்கள் என்னை பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" என்றான் அப்போஸ்தலனாகிய பவுல். (1 கொரி – 11:1) இன்று இந்த நிலைமை இல்லை. அநேகர் பால்யாங்கிச் சோவையும், பென்னிஹின்னையும் பின்பற்ற காட்டும் ஆர்வத்தில் ஒரு சிறு பகுதியைக் கூட கிறிஸ்துவை பின்பற்றும் விஷயத்தில் காட்டுவதில்லை. எப்படி வளரலாம், உயரலாம் என சிந்திக்கின்றார்களேயன்றி எப்படி வாழ்ந்து காட்டலாம் என சிந்திக்கவில்லை. முன்மாதிரி வாழ்க்கைக்கு முக்கியத்துவம் தராத பாஸ்டர்கள் பெரிய சபைகளை கட்டி எழுப்ப முடியும். ஆனால் தனிப்பட்டவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கையை கட்டி எழுப்ப முடியாது. எனவே நடையழகன் என்ற பெயரை உடையவன் நடக்க இயலாத முடவனாக இருந்தால் அது எப்படியிருக்குமோ, அதுபோலவே பெந்தெகோஸ்தே என்ற உன்னத பெயரைச் சூட்டிய இன்றைய சபைகளும் உள்ளன.

உபதேசத் தெளிவின்மை

இன்றைய பெந்தெகோஸ்தே சபைகளில் உபதேசத் தெளிவின்மை ஒரு பெரும் குறைபாடாக உள்ளது. ஆளுக்கொரு உபதேசம், நேரத்திற்கொரு போதனை என்பது பெந்தெகோஸ்தே சபைகளில் பரவலாகக் காணப்படும் உண்மை. வேதத்தை சரியாக கற்றறிந்து, புரிந்து கொண்டு சரியான தெளிவினைப் பெறும் முன்னரே போதகர்களாகி விடுவது இதனுடைய முக்கியமான ஒரு காரணம். "நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு" என்று பவுல் தீமோத்தேயுவுக்கு ஆலோசனை கூறினான். (11 தீமோ – 3:14) சரியாக கற்க வேண்டும். சரியாகக் கற்றுத் தெளிவடைந்து அதைக் குறித்து நிச்சயத்தைப் பெற வேண்டும். நிச்சயித்தவைகளில் நிலைத்திருக்க வேண்டும். இந்த அனுபவம் இல்லாதவர்கள் யாரையும் சரியான சத்தியத்தில் நடத்த முடியாது. அது குருடர்களுக்கு வழிகாட்டும் குருடனின் செயலாகவே இருக்கும். அதனால்தான் இன்று பல போதகர்களும் கர்த்தருடைய வழியில் நடக்கவில்லை. அவர்களின் போதனைகளைக் கேட்பவர்களும் நடக்கவில்லை.

பணஆசையும், பொருளாசையும்

இன்றைய பெந்தெகோஸ்தே சபைகள் சாரமிழந்த உப்பாக மாறிப் போனதின் முக்கியமான ஒரு காரணம் பண ஆசையும், பொருளாசையும், லவுதீகப்பற்றுமே காரணம் ஆகும். அநேகருக்கு சபை நடத்துதல் என்பது

புனிதமான ஒரு தியாகப் பணியாக இல்லை. நல்ல பொருளாதாயத்தைத் தரும் ஒரு வியாபாரமாக அவர்களால் அது பார்க்கப்படுகிறது. அநேகருக்கு பொருள் ஈட்ட வேண்டும், கட்டிடங்களை எழுப்ப வேண்டும், புகழ் அடைய வேண்டும், முக்கிய நபராக மாறவேண்டும் என்பதே பிரதான நோக்கங்களாக உள்ளன. பல பாஸ்டர்கள் காணிக்கையைக் குறித்தும், தசம பாகத்தைக் குறித்தும் பிரசங்கிக்கும் அளவில் நூறில் ஒரு பகுதி பரிசுத்தத்தைக் குறித்தும், மாதிரி வாழ்க்கையைக் குறித்தும் பேசுவதில்லை. அநேகருக்கு காணிக்கையும் தசம பாகமுமே முக்கியக் குறி, பொருளாசையும், பண ஆசையும் என்றுமில்லாத அளவிற்கு இன்று பெந்தெகோஸ்தே பாஸ்டர்களை மிகுதியாகபிடித்தாட்டுகிறது. பல பாஸ்டர்கள் விசுவாசிகளை காணிக்கை கொடுக்கும் இயந்திரங்களாக மாற்ற விரும்புகின்றார்களேயன்றி, அவர்களை கர்த்தருக்கு உகந்த வழியில் நடத்தி பரிசுத்தவான்களாக்கும் முயற்சியில் மனதை கொஞ்சமும் சாய்க்கவேயில்லை. தவறான தகவல்களைக் கொடுத்து ஒரே நேரத்தில் பல ஸ்தாபனங்களிலிருந்து நிதி உதவி பெறும் பாஸ்டர்கள் பலர். உண்மைக்கு புறம்பான காரியங்களை சொல்லி வெளிநாட்டு உதவி பெறுவதிலேயே இரவும் பகலும் கருத்தாயிருக்கின்ற பாஸ்டர்கள் பலர் உள்ளூரிலே மேய்ப்பதற்கு ஒரு நல்ல மந்தை இருந்தும் அதனை யாரிடமாவது ஒப்புவித்துவிட்டு, அடிக்கடி வெளிநாட்டு ஊழியம் என்ற பெயரில் உலகம் சுற்றுவதிலேயே குறியாயிருக்கின்ற பாஸ்டர்கள் பலர். அது ஆத்தும பாரம் அல்ல. பொருளாதாய தாகம். உள்ளூர் ஆத்துமாக்களை ஆவியில் புஷ்டியாக்க வேண்டியவர்கள், வெளிநாட்டு பணத்தால் தங்களை புஷ்டியாக்குவதிலேயே குறியாயிருப்பது வேதனையானது. வாய் நிறைய விசுவாசத்தைக் குறித்து பேசிவிட்டு, குறுக்கு வழிகளில் யாரிடமிருக்கும் பணத்தை எப்படி பெறலாம் என்பதிலேயே யோசனையாயிருக்கின்ற பாஸ்டர்கள் பலர். எனவே இன்றைய சபைகளில் எலியாக்களும், எலிசாக்களும் தென்படாமல், கேயாசிகளே திரும்பும் இடமெல்லாம் தோன்றுகிறார்கள்.

வாரிசு முறை ஊழியம்

அரசியலில் குடும்ப வாரிசு முறை வெகுவாக விமர்சிக்கப்படுகின்றது. ஆனால் இன்றைய பெந்தெகோஸ்தே சபைகளில் வாரிசு முறைதான் மேலோங்கியுள்ளது. அப்பாவிற்கு பின் பிள்ளை என்பது எழுதப்படாத விதியாக உள்ளது. ஒரு பாஸ்டருடையக் காலத்திற்கு பின்பு அவர் வழி நடத்திச் சென்ற சபையை அவருடைய மகன் நடத்திச் செல்வது தவறல்ல. ஆனால் அந்த மகன் அத்தகைய தரிசனமும், அழைப்பும், ஆவிக்குரிய ஊழியக்கிருபைகளும் பெற்றவராக இருக்க வேண்டும்.

ஆனால் எல்லா பாஸ்டர்களின் பிள்ளைகளும் பாஸ்டர் ஊழியத்திற்கான அழைப்பை பெற்றவர்கள் அல்ல. பாஸ்டர்களுக்கு பிள்ளைகளாக பிறந்து விட்டதால் தந்தையின் அழைப்பு தனயனுக்கும் அப்படியே என்று கூற முடியாது. ஆனால் இன்றைய பெந்தெகோஸ்தே சபைகளில் பெரும்பாலான பாஸ்டர்கள் தங்களுக்குப்பின் தங்கள் பிள்ளைகள்தான் தங்கள் ஸ்தானத்திற்கு வரவேண்டும் என்று விடாப்பிடியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அழைப்பின் நிச்சயம், பரிசுத்த வாழ்க்கை, சபை நடத்தும் தரிசனம் ஆகியவை இல்லாமலிருந்தாலும் கூட அவர்களை பாஸ்டர் வாரிசுகளாக நியமித்துக் கொள்கின்றார்கள். ஏதோ ஒரு இறையியல் கல்லூரிக்கு அனுப்பி ஒரு பட்டத்தை வாங்கியவுடன் பிள்ளைகளுக்கு பாஸ்டர் அபிஷேகம் வந்துவிட்டதாக எண்ணுவது தவறு.

ஏனென்றால் சபை என்பது கர்த்தருடைய மந்தை என்ற நிலையில் பார்க்கப்படாமல், ஒரு தனி நபர் சொத்தாகப் பார்க்கப்படுகிறது. "நான் கட்டி எழுப்பிய சபையை யாரோ ஒருவர் அனுபவிப்பதா !" என்ற சிந்தைதான் பல பாஸ்டர்களிடம் உள்ளது. எனவே குறைந்தபட்ச தகுதிகள் கூட இல்லாத பலர் "வாரிசு" என்ற ஒரே ஒரு தகுதியால் சபைத் தலைவர்களாகி வருகின்றனர். அப்படிப்பட்டவர்கள் சபை என்ற சொத்தை நன்றாக அனுபவிக்க முடிகிறதேயன்றி, சபையை சத்தியத்தின் பாதையில் வழி நடத்திச் செல்லத் தெரியவில்லை.

○ ○ ○

தேவனுடைய அன்பின் அடுத்த பக்கம்

8

மின்சாரம் இல்லாத வீட்டில் எத்தனைதான் விளக்குகள் இருந்தாலும், அவை மின்சாரத்தினால் எரியும் விளக்குகளுக்கு இணையாகாது. மின்சார இணைப்பு ஒரு வீட்டிற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. அதனால் இருளை வெளியேற்றி மிகுந்த வெளிச்சத்தைத் தர முடியும். அதனால் உடலுக்கு இதமாக நல்ல காற்றைத் தர முடியும். அதன் மூலமாக பல வீட்டு சாதனங்களை இயக்கி பல பிரயோஜனங்களை அடைய முடியும். ஆக, மின்சாரம் மிகவும் விரும்பப்படத்தக்கதும், தேவையானதுமான ஒன்றாகும்.

அதே வேளையில் மின்சாரத்தின் மறுபக்கத்தையும் கவனிக்க வேண்டும். ஒரு முறை வீட்டிற்கு மின்சார இணைப்பு வந்துவிட்டால், அது சம்பந்தமாக மிக மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இல்லையேல் பலவிதங்களில் நமக்கு மகிழ்ச்சிகரமான உதவியாயிருக்கிற அதே மின்சாரம் நமக்கு மிகுந்த துக்கத்திற்கேதுவான ஆபத்துகளையும் கொண்டு வந்துவிடும். மின்சார விஷயத்தில் நாம் மனம் போன போக்கில் நடந்து கொண்டுவிட்டால் அது மிகவும் அபாயமானது.

அதுபோலவே தேவப் பிரசன்னமும், தேவன் நம்மோடு இருப்பதுதான் தேவப்பிரசன்னம். அது மிக மிக விரும்பித்தேடி, அவசியம் அடையவேண்டிய ஒரு ஒப்புயர்வற்ற ஆசீர்வாதம். தேவப்பிரசன்னம் நம்மை

பிரகாசிப்பிக்கும். அது நம்மை பாதுகாக்கும். அது நம்மை பலப்படுத்தும். அது நம்மை எல்லா சூழ்நிலைகளிலும் தாங்கி நடத்தும்.

தேவன் நம்மோடிருப்பதை நாம் விசுவாசிக்கின்றோம். தேவப்பிரசன்னம் நம்மோடிருப்பதை உணர்ந்து உற்சாகமடைகிறோம். நல்லது. ஆனால் தேவப்பிரசன்னம் அல்லது தேவ சமுகம் நமக்கு ஆசீர்வாதமான ஒரு நிலமையை மட்டுமே தரமுடியும் என எண்ணிவிடக்கூடாது. தேவப் பிரசன்னம் எங்கே உண்டோ, அங்கே மிகுந்த ஜாக்கிரதை உணர்வும், எச்சரிக்கையும் மிக, மிக அவசியம். தேவன் நம்மோடிருப்பது நமக்கு ஆசீர்வாதங்களை அருளி, நம்மை சந்தோஷத்தினால் நிரப்பத்தான். அதே வேளையில் அவர் நம்மோடு இருக்கிறார் என்று விசுவாசிப்போமானால் அவர் விஷயத்தில் மிக மிக ஜாக்கிரதையாக நாம் நடந்து கொள்ள வேண்டும்.

எகிப்தில் அடிமையாயிருந்து அவதியுற்ற மக்களை தேனும், பாலும் ஓடும் கானான் தேசத்தில் கொண்டு சென்று ஆசீர்வதிப்பதற்காகவே தேவன் அவர்களை அழைத்தார். ஆனால் அந்த அழைப்பை ஏற்று ஜனங்கள் எகிப்தைவிட்டு வந்து கொண்டிருந்த வேளையில் மோசே மூலமாக தேவன் அவர்களிடம் கூறியது என்ன? "நான் எரிச்சலுள்ள தேவன்" என்று அங்கே அவர் கூறினார். (யாத் – 20:5)

இதனுடைய பொருள் என்ன? நான் உங்களை ஆசீர்வதிக்கும் தேவன்தான். நான் உங்களை ஆசீர்வதிக்கவே அழைத்து வந்தேன். ஆனால் நான் எரிச்சலுள்ள தேவன் என்பதை நீங்கள் மறவாமல் அதற்கேற்ப நடந்து கொள்ள கவனமாயிருங்கள். இதுவே அவர்களுக்கு கொடுத்த செய்தி. மோசே இஸ்ரவேல் ஜனங்களிடம் தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிற உண்மையை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டேயிருந்தான்.

எனவேதான் எபிரேய நிருபத்தின் ஆக்கியோன் நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறார் என்ற உண்மையை ஞாபகப்படுத்திக் கொண்டு, நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்கு ஆராதனை செய்ய வேண்டும் என்று எழுதினான். (எபி – 13:28,29)

தேவனை இரக்கமுள்ளவராகவும், அன்பு மிகுந்தவராகவும், நீடிய பொறுமையுடையவராகவும், மன்னிக்கும் மாண்பு நிறைந்தவராகவும் காண்பிக்கின்ற அதே வேதம், அவருடைய எரிச்சலின் குணாதிசயத்தையும் போதுமான அளவிற்கு சுட்டிக்காட்டி நமக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த தவறவில்லை.

மின்சாரத்தின் வெளிச்சமூட்டும் தன்மையையும், நல்ல காற்று வசதி ஏற்படுத்தித் தருகின்ற தன்மையையும் நினைத்து மகிழ்கின்ற அதே வேளையில், அதனுடைய ஆபத்து விளைவிக்கும் இயல்பினைக் குறித்த விழிப்புணர்வும் அதிகமாயிருக்க வேண்டும். இல்லையேல் தீங்கானது விளைந்துவிடும்.

எகிப்தைவிட்டு வெளியேறி கானானை நோக்கிச் சென்று கொண்டிருந்த இஸ்ரவேல் மக்களின் நடுவில் தேவன் இருந்தார். தேவப் பிரசன்னம் அவர்களோடிருந்ததை அக்கினி ஸ்தம்பமும், மேகஸ்தம்பமும் அனுதினமும் உறுதிபடுத்தியது. அது மிகவும் ஆசீர்வாதமான அனுபவம். தேவப் பிரசன்னம் அவர்களோடிருந்ததால், அவர்கள் பார்வோனுக்கு தப்பித்துக்கொள்ளவும், செங்கடலை கடக்கவும், தினமும் வானத்திலிருந்து மன்னாவைப் பெறவும் முடிந்தது. தேவப்பிரசன்னத்தால் அவர்கள் தினமும் தேவையான உணவையும், விரோதிகளிடமிருந்து பாதுகாப்பையும், அற்புதங்களையும், ஆச்சர்யமான அடையாளங்களையும் பெற முடிந்தது.

ஆனால் அதே பாதையில் அவர்கள் பல வாதைகளையும், வேதனைகளையும், அழிவுகளையும் காண நேர்ந்தது. அவைகளுக்கு காரணமும் தேவப்பிரசன்னம் அவர்களின் நடுவில் இருந்ததுதான். அவர்களுக்கு ஆசீர்வாதங்களை கொண்டு வந்த அதே தேவப் பிரசன்னம் அழிவையும் கொண்டு வரவேச் செய்தது. காரணம் என்ன? தேவன் தவறுகள் முரட்டாட்டங்கள், கீழ்ப்படியாமைகள், மாறுபாடுகள் ஆகியவை விஷயத்தில் பட்சிக்கின்ற அக்கினி போல செயல்படுகிறவர் என்பதை அவர்கள் அறிந்து, அதற்கேற்றபடி ஜாக்கிரதையாயிருக்கவில்லை. அவர்கள் தேவப்பிரசன்னத்தை உணர்ந்து கொண்டே, மனம் போன போக்கில் பேசவும், செயல்படவும் செய்தார்கள். எனவே ஆசீர்வாதத்தை அளித்த அதே தேவப்பிரசன்னம் அவர்களுக்கு ஆபத்திற்கும் காரணமாகியது.

தேவப்பிரசன்னமும் ஜாக்கிரதையும் !

ஆதிகாலங்களில் இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய யுத்த வேளைகளிலும், இக்கட்டான சூழ்நிலைகளிலும் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை சுமந்து கொண்டு வந்து, விசேஷ நன்மைகளைப் பெறுவார்கள். உடன்படிக்கைப் பெட்டி அவர்களுக்கு பாதுகாப்பு தருகிறப் பெட்டியாகவும், ஆபத்து வேளையில் அற்புதமான விடுதலை அளிக்கின்ற பெட்டியாகவும் விளங்கியது. ஆனால் அதே உடன்படிக்கைப் பெட்டியால் அநேகர் ஆபத்தையும் கண்டனர். அந்த பெட்டியின் விஷயத்தில் மிக ஜாக்கிரதையாக இருக்க தவறின அநேகர் அதனால் அழிவைக் கண்டனர்.

(1 சாமு – 6:19) கர்த்தருடைய பெட்டியின் விஷயத்தில் பக்தியை வெளிப்படுத்திய அதே வேளையில், அதற்குரிய நியமங்களை மறந்து செயல்பட்டதால், கர்த்தர் ஊசா என்பவனை அடித்தார். (11 சாமு – 6:6)

மின்சார சம்பந்தப்பட்ட கருவிகள் இருக்கின்ற சில இடங்களில் ஒரு மனித எலும்பு கூட்டின் படத்தைப் போட்டு அபாயம் என்று போட்டிருப்பார்கள். அதனுடைய அர்த்தம் மின்சார சம்பந்தப்பட்டவைகளை நெருங்கவோ, உபயோகப்படுத்தவோ செய்யாதீர்கள் என்பதல்ல. அதன் விஷயத்தில் மிகவும் எச்சரிக்கை உணர்வோடு நடந்து கொள்ளுங்கள் என்பதுதான். தேவப்பிரசன்னம் என்ற விஷயத்திலும் இதுவே உண்மை.

நம்முடைய வாழ்க்கையில் தேவன் நம்மோடிருக்க நாம் வாஞ்சிக்கின்றோம். தேவப் பிரசன்னம் நம்முடைய இல்லங்களையும் வாழ்க்கை சூழ்நிலைகளையும் நிரப்ப வேண்டும் என்று நாம் ஜெபிக்கின்றோம். நாம் போகுமிடமெல்லாம் தேவ சமுகம் நமக்கு முன்னே போகவேண்டும் என்று ஆசைப்படுகிறோம். அதற்காக அதிகமாக மன்றாடுகிறோம். நல்லது. கர்த்தர் இதனை மிகவும் விரும்புகின்றார்.

ஆனால் தேவப்பிரசன்னம் இருக்கும் இடத்தில் நாம் மிக மிக ஜாக்கிரதையாக வாழ வேண்டும் என்ற உணர்வை நாம் பெற்றிருக்கின்றோமா? தேவ சமுகம் எனக்கு முன்னே செல்லட்டும் என்று மோசேயைப் போல ஜெபிப்பது மிக மிகத் தேவையானது. ஆனால் பரிசுத்தமான ஒரு தேவனை நாம் முன்னே செல்ல அழைக்கின்றோம் என்பதை உணர்ந்திருக்கின்றோமா? அவர் முன்னே சென்றால், அவருக்கு பின்னால் செல்லும் நம்முடைய பேச்சையும், நடவடிக்கைகளையும், குணாதிசய செயல்பாடுகளையும் அவர் கவனிக்கின்றார் என்பதை ஆழமாக சிந்திக்கின்றோமா? அவர் நம்முடைய தவறுகளை சாதாரணமாக எடுத்துக் கொள்ளமாட்டார் என்பதற்கு விசேஷ கவனம் செலுத்துகின்றோமா? பல நேரங்களில் தேவ சமுகம் தேடும் நாம் தேவ சமுகத்தால் நமக்கு காரியங்கள் வாய்க்கப்பெறுவதையும், பாதுகாப்புகள் கிடைப்பதையும், மனமகிழ்ச்சிக்கு ஏதுவான ஆசீர்வாத சூழ்நிலைகளை உருவாவதையுமே சிந்திக்கின்றோம். அதே வேளையில் தேவப்பிரசன்னம் செயல்படும் இடத்தில் அதிகமான பரிசுத்தமும், பயபக்தியும், ஒழுங்கும், கபடற்ற மனநிலையும், யோக்கியமான செயல்பாடுகளும் அவசியம் காணப்படவேண்டும் என்பதைப் போதிய விழிப்புணர்வுடன் சிந்தியாமல் போகிறோம்.

இஸ்ரவேல் ஜனங்களின் கானக யாத்திரையின் போது நிகழ்ந்த சம்பவங்களையும், தொடர்ந்து நியாயாதிபதிகள் துவங்கி, மல்கியா

தீர்க்கத்தரிசியின் புத்தகம் வரையிலும் சொல்லப்படும் செய்திகளையும் கவனித்துப் பாருங்கள். அங்கே தேவ அன்பு, இரக்கம், தயவு, ஆசீர்வாதம் ஆகியவைகள் வெளிப்பட்ட செய்திகளை விட அதிகமாக தேவ கோபம் வெளிப்பட்டதைக் குறித்த செய்திகளைத்தான் அதிகமாகக் காண முடிகிறது.

ஏனென்றால் இஸ்ரவேல் ஜனங்கள் நடந்து கொண்ட முறைகளும், வாழ்ந்த விதங்களும் தேவனுடைய இரக்கமும், தயவும் வெளிப்படக் கொடுத்த வாய்ப்புகளைவிட மிக அதிகமாக தேவ கோபமும், எரிச்சலும் வெளிப்படுவதற்கான வாய்ப்புகளையே கொடுத்தது. உண்மையான தேவனையும், செவ்வையான வேதத்தையும் தங்கள் நடுவில் பெற்றிருந்தவர்களாக அறியப்பட்டிருந்த அவர்கள், அவ்வப்போது தேவ கோபத்தையும் அதன் விளைவான ஆக்கினைகளையுமே காண நேர்ந்தது.

ஆம். தேவன் இல்லாத வாழ்க்கை சாபமானது. தேவனைப் பெற்றிருக்கின்ற வாழ்க்கை ஆசீர்வாதமானது. அதே வேளையில் அந்த ஆசீர்வாதமான அனுபவத்தின் மத்தியில் போதுமான அளவு பயமும், பக்தியும், ஜாக்கிரதை உணர்வும் இல்லாவிடில், அது தேவனற்ற வாழ்க்கையை விட மிகவும் வேதனையானதாக மாறிவிடும். உலக சரித்திரத்தைப் பார்க்கும் போது, தேவனற்ற சந்ததிகளை விட, தேவனை அறியவும், அடையவும் வாய்ப்பு பெற்றிருந்த இஸ்ரவேல் சந்ததிதான் உபத்திரவங்களை மிக அதிகமாக கண்ட சந்ததி என்பதைக் கண்டு கொள்ள முடியும்.

தேவ அன்பும் தேவ கோபமும்

ஆசீர்வாதக் கானானுக்கு நேராக ஜனங்களை நடத்திய மோசே, கானானின் ஆசீர்வாதங்களைக் குறித்து விலாவாரியாக பட்டியலிட்டு விளக்கினான். அதே வேளையில் அவைகளைக் குறித்து பேசுகின்ற போதே மீண்டும் மீண்டுமாக தேவனுடைய கோபத்தைக் குறித்தும், அவருடைய பயங்கரத் தன்மையைக் குறித்தும், நியாயத் தீர்ப்புகளைக் குறித்தும் எச்சரித்துக் கொண்டேயிருந்தார்.

பரிதாபகரமாக இந்நாட்களில் தேவனின் அன்பு, இரக்கம், தயவு ஆகியவைகளைக் குறித்து செய்யப்படும் பிரசங்கங்களில் நூறில் ஒரு பகுதி கூட தேவனுடைய கோபத்தைக் குறித்தும், நியாயத்தீர்ப்புகளைக் குறித்தும் செய்யப்படுவதில்லை. எனவே ஜனங்கள் இரக்கம் மிகுந்த ஒருவராக தேவனைப் பார்ப்பதற்கு மேலே வேறு எதையும் அதிகமாக அறியாத நிலை ஏற்படுகிறது. பேரளவில் இன்றைய போதகர்கள் தங்களைக் குறித்து

ஜனங்கள் மிகவும் இனிமையும் கனிவுமான சித்திரத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் எப்போதும், தேவனை இனிமையானவராகவும், கனிவானவராகவும் மட்டுமே காண்பிக்க பிரயாசப்படுகின்றனர். எனவே தேவனை அன்பானவராகவும், இரக்கமானவராகவும் மட்டுமே கற்பனை செய்யும் மக்கள், தங்கள் வாழ்க்கையில் அந்த அளவிற்கு ஆசீர்வாத பிரதிபலிப்புகளை காண முடியாமல் போகும்போது, சோர்ந்து போகவும், தேவ நம்பிக்கை இழந்து போகவும் நேரிடுகிறது.

குறிப்பிட்ட ஒரு சகோதரர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு விட்ட ஒரு அனுபவத்திற்கு வந்து சேர்ந்து மிகவும் பரவசமுடையவராக மாறினார். ஆனால் கொஞ்ச காலத்திற்கு பின்னர் ஒரு மூத்த தேவ ஊழியரிடம் வந்து அவர் தன்னுடைய போராட்டங்களைக் குறித்துப் பேசினார். தான் பரிசுத்த ஆவியானவரின் நிறைவின் அனுபவத்தை உணர ஆரம்பித்த பின்னர்தான், தனக்கு மிகுதியான அமைதிக் குறைவுகளும், மனக்கஷ்டங்களும், போராட்டங்களும், அவ்வப்போது நேரிட்டன என்று மனந்திறந்து கூறினார்.

பரிசுத்த ஆவியின் நிறைவினால் சந்தோஷத்தையும், சமாதானத்தையும், நிறைவையும் கண்டு களிகூர வேண்டிய அவருடைய வாழ்க்கை ஏன் அமைதியின்மையையும், மனக்கஷ்டங்களையும், போராட்டங்களையும் அடிக்கடி காண நேர்ந்தது? பரிசுத்த ஆவி என்ற உடன் அவர் களிப்பையும், சந்தோஷத்தையும், ஆறுதலையுமே எதிர்பார்த்தார். ஆனால் பரிசுத்தத்தின் விஷயத்தில் மிகவும் கறாரான ஒருவருடன் தான் வாழ வந்திருக்கின்ற ஒரு விழிப்புணர்வைப் பெற்று, அதற்கேற்றபடியான ஒழுங்கும் கிரமமுமான ஒரு வாழ்க்கையின் தேவையைக் குறித்து அவர் போதிய கவனம் செலுத்தவில்லை.

பரிசுத்தாவியானவரோடு ஐக்கியமடைவது என்பது மிகப்பெரிய ஆசீர்வாத நிலையின் துவக்கம்தான். ஆனால் அந்த பரிசுத்த ஆவியானவர் பாவத்தை குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் மிகவும் கருத்துடையவராயிருந்து கண்டித்து உணர்த்துகின்றவர் என்பதையும் மறந்துவிடக்கூடாது. (யோவான் – 16:8) எனவேதான் அப்போஸ்தலனாகிய பவுல் "தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்" என்று எபேசு சபை விசுவாசிகளுக்கு எழுதினான். (எபே – 4:30)

தேவனுடைய ஆவி நம் வாழ்க்கையில் செயல்படுகின்றபோது, நம்முடைய சிந்தனைகளோ, குணங்களோ, செயல்களோ, பண்பு நிலைகளோ, வேதத்துக்கு உகந்ததல்லாததாக இருக்குமாயின், அங்கே தேவனுடைய ஆவிக்கு நாம் துக்கத்தைக் கொடுக்கிறோம் என்று அர்த்தமாகும். அந்த துக்கப்படுதலின் விளைவு நம்முடைய வாழ்க்கையில் அவ்வப்போது அமைதிக் குறைவுகளையும், மனக்கஷ்டங்களையும், சோர்வுகளையும், அதிருப்திகளையும் கொண்டுவரும் என்பது உண்மை. இதுதான் அந்த சகோதரரின் வாழ்க்கையின் சோர்வுகளுக்குக் காரணம்.

அநேகர் தங்களின் வாழ்க்கையில் கர்த்தர் இருப்பதாகவும், தேவப்பிரசன்னத்தை தாங்கள் உணருவதாகவும் நம்புகின்றனர். அதே வேளையில் அவர்களின் ஆன்மீக வாழ்க்கை சமாதானமானதாகவோ, சந்தோஷமானதாகவோ, திருப்தியானதாகவோ இல்லை.

காரணம் என்ன? அவர்கள் ஆன்மீக ஈடுபாடுகளை உடையவர்களாக இருப்பது உண்மைதான். சபையோடும், சபை நடவடிக்கைகளோடும், ஊழியங்களோடும் அவர்கள் நல்ல பிணைப்புடையவர்களாக இருப்பது உண்மைதான். ஜெபங்கள், உபவாசங்கள், காணிக்கைகள் ஆகியவற்றோடு அவர்கள் அதிகமாக சம்பந்தப்பட்டிருப்பது உண்மைதான். இவைகள் யாவும் மேன்மைக் குரியவைகளாகயிருந்த போதிலும் தங்களின் வாழ்க்கை எந்தவிதத்தில் தேவனை துக்கப்படுத்துகின்றது என்பதைக் கண்டறியாதவர்களாகவும், கண்டறிய விரும்பாதவர்களாகவும் உள்ளனர். அவர்கள் ஆவிக்குரிய விதமாக சிந்திக்கும் போதெல்லாம் தங்கள் பக்தி நடவடிக்கைகளையும், சபைத் தொடர்புகளையும், விசுவாச நிலைகளையும், ஊழிய ஈடுபாடுகளையும் காணிக்கைத் தாராளங்களையுமே நினைவில் கொண்டு வருகின்றனர். இவைகள் யாவும் தங்களிடம் காணப்பட்டும் தங்களுக்கு ஒரு நல்ல ஆசீர்வாத நிலை இல்லையே என்று வருத்தமடைகின்றனர்.

ஆனால் தங்களின் வாழ்க்கை, குணநிலை, மனநிலை, நடந்து கொள்ளும் விதங்கள் போன்றவை வேதத்திற்கேற்றதாகவும், தேவனுடைய எதிர்பார்ப்புகளுக்கேற்றவிதமாகவும் உள்ளதா என்பதை நேர்மையாகப் பார்க்க முன்வருவார்களாயின், எங்கே தேவன் தங்கள் வாழ்க்கையில் துக்கப்படுகிறார் என்பதை உணரமுடியும். தங்களிடம் காணப்படுகின்ற அல்லது காணப்படாத எந்த காரியம் தேவனைக் கோபப்படுத்தவும் துக்கப்படுத்தவும் செய்கின்றது என்பதை அறிந்து கொள்ளமுடியும். நாம் எவைகளை செய்கிறோம் என்பதை விட்டு விட்டு, எப்படியிருக்கிறோம் என்பதைக் கவனிக்க ஆரம்பித்தால் ஆசீர்வாதமின்மைகளுக்கும், மனக்கஷ்டங்களுக்கும் உரிய காரணங்களை கண்டறிய முடியும்.

இசைந்து போகாவிடில்

ஒரு ஆணோ, ஒரு பெண்யோ தனிமையில் காலந்தள்ளுவது மிகவும் கடினமான விஷயம். அவர்கள் தனிமையில் ஒரு வீட்டில் வாழ்ந்தால் வாழ்க்கை அவர்களுக்கு இனிமையாகவோ, அனுபவிக்கக்தக்கதாகவோ, விசேஷித்து சொல்வதற்கு ஏற்றதாகவோ இருப்பதில்லை. ஒரு வாழ்க்கைத் துணையோடு வாழ்வதுதான் மகிழ்ச்சியானது. ஆனால் பலருடைய நிலைமை என்ன? அவர்கள் தனிமையாயிருந்த காலங்களை விட திருமணமாகி வாழ்கின்ற காலங்கள்தான் மிகவும் கசப்பிற்கும், வெறுப்பிற்கும் வேதனைக்கும் உரியதாக மாறிவிடுகிறது. அநேகருக்கு திருமணமாகி ஒன்றாக இன்னொருவரோடு சேர்ந்து வாழும் வாழ்க்கைதான் வேதனைக்குரிய வாழ்க்கையாகவும், நிம்மதியிழந்த வாழ்க்கையாகவும் இருக்கின்றது. எனவே திருமண வாழ்க்கையை விட தனிமையாக வாழ்ந்த வாழ்க்கை எவ்வளவோ சமாதானமானது என்று எண்ணி வருந்த நேரிடுகிறது.

காரணம் என்ன? இரண்டு பேர் கூடி வாழ்வதால் ஒரு பெரிய மகிழ்ச்சியும், திருப்தியுமான அனுபவமும் உண்டு என்பது உண்மையாயினும், அந்த இருவருக்கிடையில் பண்பு, குணம், தன்மை, கருத்து, சிந்தனை, விருப்பு, வெறுப்பு ஆகிய விஷயங்களில் சரியான இசைந்து போகுதல் இல்லாமல் போனால் அது வேதனைகளையேக் கொண்டுவரும். அதுபோலவே தேவ ஐக்கியமற்ற, சுயம் சார்ந்த வாழ்க்கை சுவையற்ற ஆசீர்வாதமற்ற வாழ்க்கை. தேவனோடு இணைந்த வாழ்க்கைதான் சுவையான அர்த்தமுள்ள வாழ்க்கை. ஆனால் தேவனோடு நாம் இசைந்து போகாத ஒரு நிலை நம்மிடம் தொடர்ந்தால், அல்லது தேவனுக்கேற்றபடி நம்மை மாற்றிக் கொள்கின்ற ஒரு அனுபவம் இல்லாதிருந்தால், ஆவிக்குரிய வாழ்க்கையே நமக்கு ஆனந்தமற்ற வாழ்க்கை ஆகிவிடும். தேவனுக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய வழிகளுக்கு முரண்படாமல் வாழப் பிரயாசப்படுகின்ற ஒரு அனுபவத்தினால் மட்டுமே ஆவிக்குரிய வாழ்க்கையை ஆனந்தத்திற்குரிய வாழ்க்கையாக மாற்ற முடியும்.

எனவேதான் சங்கீதக்காரன் "உம்முடைய வேதத்தை நேசிக்கின்றவர்களுக்கு, மிகுந்த சமாதானமுண்டு. அவர்களுக்கு இடறலில்லை" என்று கூறினான். (சங் – 119 : 165) யோபுவின் புத்தகத்தில் வருகின்ற எலிப்பாஸ் என்பவன் யோபுவைக் குறித்து நிதானமில்லாமல் பேசிய போதிலும் அவன் கூறிய பல ஆன்மீக சிந்தனைகளும், ஆலோசனைகளும் மிகவும் அர்த்தம் வாய்ந்தவை. அவன் கொடுத்த

முக்கியமான ஒரு ஆலோசனை "நீர் அவரோடுப் பழகி சமாதானமாயிரும். அதனால் உமக்கு நன்மை வரும்" என்பதாகும். (யோபு – 22:21)

ஆம். தேவனோடு நன்குப் பழகி, அவருடைய விருப்பு வெறுப்புகளை உணர்ந்து கொள்ள ஞானமாயிருந்தோமானால் அதனால் வருகின்ற நன்மைகள் கொஞ்சமல்ல. அவ்விதம் பழகி வாழ கவனமற்றிருப்போமானால் அதினால் வருகின்ற வேதனைகளும் கொஞ்சமாயிராது. ஜீவனுள்ள தேவனாகியக் கர்த்தரை மிகவும் நெருக்கமாக பெற்றிருந்தவர்களாக அறியப்பட்டிருந்த இஸ்ரவேல் மக்கள் சந்திக்க நேர்ந்த இன்னல்களும், இக்கட்டுகளும் இந்த உண்மைக்கு சாட்சியாயிருக்கின்றன. ஏனென்றால் உறவு உருவாவதைவிட, உறவுக்குள் வந்தவர்கள் ஒருமித்துப் போவதுதான் மிக முக்கியம். எனவேதான் ஆமோஸ் தீர்க்கதரிசி "இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்துப் போவார்களோ?" என்ற கேள்வியை எழுப்பினான். (ஆமோஸ் – 3:3)

தேவன் தம்மிடம் வராதவர்களைவிட தம்மிடம் வந்தும் தம்மோடு சரியாக நடந்து கொள்ளாதவர்கள் விஷயத்தில்தான் அதிக கடினமாக நடந்து கொள்கின்றார். தம்முடைய நீதி நியாயங்களை அறியாதவர்களை விட, அறிந்து கொள்ளவும், அதன்படி நடக்கவும் வாய்ப்பை பெற்றிருந்தும் அதற்கு முரணாக போகின்றவர்களிடம்தான் அதிகக் கோபப் பார்வையுடையவராகயிருக்கின்றார்.

ஏன் இந்த துன்பங்கள்?

இன்னும் ஒரு முக்கியமான கேள்விக்கானப் பதிலை இங்கே நாம் சிந்திப்பது நல்லது. ஆவிக்குரிய வாழ்க்கைக்கே வராத பலர் அனுபவிக்கின்ற ஒரு சமாதானமான சூழ்நிலையைக்கூட ஆவிக்குரிய வாழ்க்கையில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக்கொண்ட சிலர் அனுபவிக்க முடியாமல் போவதன் காரணமென்ன? கர்த்தரை விசுவாசிக்காதவர்களுக்கு அமைகின்ற ஒரு நல்ல நிலமை கர்த்தரை அதிகமாக விசுவாசிக்கின்றவர்களுக்கு வராமல் போவதென்ன? ஆன்மீகப் பிரியர்களுக்குத்தான் அதிக துன்பங்கள் என்பது பலருடைய வாழ்க்கையில் உண்மையாயிருப்பது ஏன்?

நீதியினிமித்தம் நாம் துன்பப்பட வேண்டியது வரும் என்பது உண்மைதான். தேவ பக்தியாக வாழ விரும்புகின்றவர்களுக்கு துன்பங்கள் பல உண்டு என்பது வேதம் கூறுகின்ற செய்திதான். தேவபக்தியாளர்களுக்கு சோதனைகள் பல உண்டு என்பதை வேதம் பல இடங்களில் தெளிவாகக் கூறுகின்றது. (மத் – 5:10; அப் – 14:22 ; 11 தீமோ – 3:12)

அதே வேளையில் ஆவிக்குரிய ஈடுபாடுகள் உடையவர்கள் அல்லது தேவ பக்தியாளர்கள் அனுபவிக்க நேரிடுகின்ற கஷ்டங்கள், நஷ்டங்கள் யாவுமே, அவர்களுடைய தேவ பக்தியால்தான் வந்தது என்று கூறிவிட முடியாது. இறை ஈடுபாடுகள் உடையவர்கள் சந்திக்க நேரிடுகின்ற இன்னல்கள், இக்கட்டுகள் யாவும் தேவனுடைய சித்தத்தின் அடிப்படையிலேயே வருகிறது என்று பொதுவிதியாக சொல்லிவிட முடியாது.

ஏனென்றால் தேவ சித்தம் சார்ந்து அனுமதிக்கப்படுகின்ற சோதனைகளினால் தேவன் மகிமைப்படும் விதமாகவும், சம்பந்தப்பட்ட நபர் ஆவிக்குரிய முறையில் பயன் அடையும் விதமாகவும் ஏதாவது நடைபெறவேண்டும். ஆனால் பலருடைய கஷ்டங்களால் எந்தவித ஆவிக்குரிய பயனும் ஏற்படவில்லை. அவர்களால் அவைகளை ஆவிக்கேற்ற ரீதியாகப் பார்த்து விசுவாச உணர்வோடு இருக்கவும் முடியவில்லை. வேதனையையும், மனவியாகுலத்தையும் தவிர அந்த சோதனைகளால் எந்த பயனும் ஏற்படவில்லை.

அநேகர் தாங்கள் ஆவிக்குரிய விஷயங்களில் தொடர்புடையவர்களாக இருப்பதால், தங்களுக்கு வருகின்ற அனைத்து துன்பமான காரியங்களும் கர்த்தர் ஏதோ நன்மை கருதி அனுமதித்ததால் வந்தது என எடுத்துக் கொள்வது சரியல்ல. விசுவாசத்திலும், உண்மையிலும், பரிசுத்தத்திலும் வலிமையாக இருக்கின்ற பலருக்கு கொடிய நோய்கள், நஷ்டங்கள், விபத்துக்கள் மரணங்கள் வரத்தான் செய்கின்றது. அந்த கொடிய நிகழ்வுகளை விசுவாச உணர்வோடு ஜீரணிக்க முடியாமல், இது ஏதோ கர்த்தருக்கு எதிரான பாவத்தால்தான் வந்தது என்று யாரும் நியாயந்தீர்க்க முடியாது. மெலித்தா தீவில் பவுலின் கரத்தை விஷப்பூச்சி ஒன்று கவ்வியபோது, அங்கே கூடியிருந்தோர் உடனேயே அவனை "கொடும்பாதகன்" என்று முடிவு செய்துவிட்டார்கள். (அப் – 28:4) ஆனால் அது உண்மையாயிருக்கவில்லை. அதுபோல இன்றும் ஆவிக்குரிய வாழ்க்கையில் அல்லது ஊழியத்தில் இருக்கின்ற யாராவது ஒருவருக்கு ஒரு வேதனையான சம்பவம் நிகழ்ந்துவிட்டது என்றால் உடனேயே "அவருடைய பாவத்தினால் கர்த்தர் அவரைத் தண்டித்துவிட்டார்" என்று முடிவு கட்ட பலர் முந்திவிடுவதுண்டு. ஆனால் நாம் நிதானித்தபடிதான் காரியங்கள் நடந்தது என்று கூற முடியாது. ஏனென்றால் கர்த்தருக்கு முன்பாக உத்தமமாக வாழ்கின்ற பலரையும் தீங்குகள் சந்திக்கவே செய்கின்றன. அதே வேளையில் கர்த்தருடைய வார்த்தைக்கு புறம்பாக துணிகரமாக செயல்படுகின்ற பலர் எந்த தீங்கையும் பெரிதாகக் காணாமல் இருப்பதையும் காண்கின்றோம்.

எனவே உத்தமமாக வாழ்கின்றவர்களுக்கு ஒரு தீமையும் வராது என்றோ, துணிகரமாக வாழ்கின்றவர்களை உடனேயே தேவன் தண்டித்து விடுகிறார் என்றோ கூறிவிட முடியாது. எனவே சம்பவிக்கின்ற தீங்குகளின் அடிப்படையில் யாரையும் நாம் நியாயந்தீர்த்துப் பேசுவது சரியல்ல.

அதே வேளையில் ஆபத்துகள், ரோகங்கள், நஷ்டங்கள் ஏற்படும் போது, அவைகள் யாவும் சாதாரணமாக எல்லோருக்கும் நடப்பது போலத்தான் நடைபெற்றிருக்கிறது என்று பரிபூரணமாக எண்ணிவிடுவதும் சரியல்ல. ஏனென்றால் தேவனுக்கு முன்பாக நம்முடைய செயல்பாடுகள் சரியில்லாத ஒரு நிலை கூட நமக்கு எதிர்மாறான காரியங்கள் நடைபெறுவதற்கு காரணமாயிருக்க முடியும். கர்த்தருக்கு பிரியமற்ற போக்குகள் நமக்கு காரணமற்ற கஷ்டங்களை வரவழைத்திருக்க வாய்ப்புகள் உண்டு.

சாத்தானின் கோபம்

கர்த்தர் சில நேரங்களில் சிலருடைய விதிவிலகல்களுக்கான தண்டனையை உடனேயே வழங்குகிறார் என்பது உண்மை. இஸ்ரவேல் மக்களின் கானகப் பயணத்தின் போதும், ராஜாக்களின் ஆட்சிக் காலங்களின் போதும், புதிய ஏற்பாட்டில் ஏரோது ராஜா, மாயவித்தைக்காரனாகிய சீமோன் மற்றும் அனனியா சப்பீராள் ஆகியோர் விஷயத்திலும் நடந்த சம்பவங்கள், தேவனுடைய உடனடி நியாயத்தீர்ப்புகளுக்கு அடையாளங்களாயிருக்கின்றன. ஆனால் எப்போதும் இப்படித்தான் நடந்து கொண்டிருக்கின்றது என்று கூற முடியாது. அப்படி நடந்து கொண்டிருந்தால் எப்போதும் அவலக்குரல்களையும், அழுகையின் ஓலங்களையும் தான் சபைகளின் நடுவிலும், ஊழியங்களின் நடுவிலும் பார்த்துக் கொண்டிருக்க நேரிடும்.

ஆனால் இன்னொரு உண்மையை நாம் இங்கு கவனிப்போம். ஒருவர் தேவனை அறியாதவராக அல்லது கர்த்தரை ஏற்றுக் கொள்ளாதவராக வாழ்கின்றபோது, அவர் பொல்லாங்கனாகிய சாத்தானின் ஆளுகைக்குட்பட்ட ஒரு நிலையிலேயே இருக்கின்றார். அவர் கர்த்தருடைய ஆளுகையை ஏற்றுக் கொள்ளாததால் அங்கே அவர் சாத்தானுக்கு ஒரு பிரச்சனையே அல்ல. எனவே அவருக்கு எதிராக எதையாவது செய்வதில் சாத்தான் தீவிரமாயிருக்க வாய்ப்பு இல்லை.

அதே வேளையில் அவர் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக் கொண்டு, அவருடைய ஆளுகைக்கு வருகிறார் என்றால், அவர் சாத்தானின் ஆளுகைக்கு வெளியே வந்து விட்டார் என்று அர்த்தம். அவர் கர்த்தரோடு சேர்ந்து கொண்டு சாத்தானை எதிர்க்க ஆரம்பித்துவிட்டார் என்று

பொறாமை. எனவே அவர் விஷயத்தில் சாத்தான் மிகவும் கோபமாயிருப்பான். தன்னுடைய ஆளுகையை விட்டு வெளியேறிய அவருக்கு எங்கே எப்படி தீங்கு செய்யலாம் என்பதில் அவன் மிகவும் தீவிரமாயிருப்பான். ஆகையால்தான் பேதுரு "எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் யாரை விழுங்கலாமென்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான்" என்று விசுவாசிகளுக்கு எழுதினான். (1 பேதுரு - 5:8) ஆம். அவிசுவாசிகளையல்ல, விசுவாசிகளைத்தான் அவன் அதிகமாக குறிவைத்து தீங்கு செய்யச் சுற்றித்திரிகிறான்.

யோபுவின் சரித்திரத்தில் அதைத்தான் பார்க்கின்றோம். அவன் தேவ பக்தியும், உத்தமமும் உடைய நீதிமான். ஆனால் அவனுடைய வாழ்க்கையைச் சுற்றித்தான் சாத்தான் உலாவி, எங்கே கொஞ்சம் இடம் கிடைக்கும், உள்ளே புகுந்து குழப்பம் செய்யலாம் என்று காத்திருந்தான். (யோபு - 1:7-12) அதுபோலவே கர்த்தரை ஏற்றுக்கொண்டவர்கள் விஷயத்திலும் சாத்தான் செயல்படுகின்றான்.

எனவே கர்த்தரை ஏற்றுக் கொண்டவர்களும், அவரோடு வாழ்க்கையை இணைத்துக் கொள்ள முன்வந்தவர்களும் மற்றவர்களைவிட அதிக எச்சரிக்கையுணர்வோடும், விழிப்புணர்வோடும் செயல்பட வேண்டிய தேவை உள்ளது. எச்சரிக்கையுடனும் விழிப்புணர்வுடனும் வாழ்வது என்பது கர்த்தருடைய பிரசன்னத்திற்குள் அல்லது அவருடைய ஆளுகைக்குள் நம்மை நிறுத்திக்கொள்ள ஆயத்தமாயிருப்பதாகும். ஆகையால்தான் எபேசு சபையினருக்கு ஆவிக்குரிய ஆலோசனைகள் அளித்த பவுல் அப்போஸ்தலன், "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்" என்று கூறினான். (எபே - 6:11)

பாதுகாப்பு வளையம்

நாம் கர்த்தருடைய அனைத்து ஆலோசனைகளையும் மதித்து கீழ்ப்படிந்து, அவருடைய ஐக்கியத்தை அனுதினம் தேடி, அவருக்கு பிரியமானவர்களாக வாழப்பிரயாசப்படும் போதுதான் தேவப்பிரசன்னத்திற்குள் நாம் காணப்பட முடியும். அதுதான் சாத்தானை எதிர்த்து நின்று அவன் நம்முடைய வாழ்க்கை வட்டத்திற்குள் நுழைந்துவிடாமல் தடுக்கும் அரணாகும்.

நாம் தேவனுடைய வழிகளில் நடக்க மனதார விரும்பி செயல்படும் போது, கர்த்தருடைய பாதுகாப்பு வளையத்திற்குள் நாம் காணப்படுவோம்.

அதாவது கர்த்தருடைய ஆளுகையின் எல்லைக்குள் நாம் காணப்படுவோம். இந்த வளையத்திற்குள் பிசாசானவன் நுழைந்து தேவசித்தத்தை மீறி எதையும் செய்ய முடியாது. ஆனால் நாம் கர்த்தருடைய வழிகளில் நடவாமல் கீழ்ப்படிவின்மையின் அனுபவத்தில் தொடரும் போதும், ஏதாவது ஒரு பாவத்தில் துணிகரமாக நின்றுக் கொண்டிருக்கும் போதும், தேவ ஐக்கியத்தை கவனமாக தேடாமல் அசட்டையாயிருக்கும் போதும், நாம் கர்த்தரின் பாதுகாப்பு வளையத்திற்கு வெளியே வந்துவிடுவோம். அதாவது நம்முடைய தொடர்ந்த கர்த்தருக்கு எதிரான செயல்முறைகள் கர்த்தருடைய நேரடி ஆளுகையின் எல்லையை விட்டும், அவர் நியமித்திருந்த பாதுகாப்பு வளையத்தை விட்டும் நம்மை வெளியேக் கொண்டு போய் விடும். இது ஒரு ஆடு மேய்ப்பனுடைய வழிநடத்துதலின் பாதையைவிட்டு வெளியே போய் விடுவதற்கு சமமாகும். மேய்ப்பனுடைய ஆளுகைக்கு வெளியே போய்விட்ட ஆடு ஓநாய்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகிவிடுவது இயல்புதானே. இங்கே மேய்ப்பன் ஆட்டை தண்டிக்கவில்லை. ஆனால் ஆடு மேய்ப்பனின் நேரடிப் பார்வைக்குள் இல்லாததால், மந்தைக்கு வெளியே உள்ள ஆட்டிற்கு சாதாரணமாக நடந்துவிடும் ஆபத்துகள், அந்த ஆட்டிற்கும் நடந்துவிடுகிறது.

சில விபத்துகள், நஷ்டங்கள், குழப்பங்கள், உறவு பிரச்சனைகள், விரோதங்கள், தோல்விகள் போன்றவை, கர்த்தரால் வந்த தண்டனைகளாக இல்லாமல் இருக்க முடியும். அதாவது கர்த்தருக்கு விரோதமான செயல்களைக்கண்டு அவர் கோபமடைந்து, அவர் அவ்விதம் தண்டித்துவிட்டார் என்று கூறமுடியாது. ஆனால் அவைகள் கர்த்தருடைய பாதுகாப்பு வளையத்திற்கு வெளியே வந்துவிட்ட காரணத்தால், சாத்தானுடைய தாக்குதல்களின் விளைவுகளால் அப்படி நிகழ முடியும். கர்த்தருடைய பாதுகாப்பு வளையம் அங்கே இல்லாததால், தீவினைகள் தடுக்கப்படாமல் எல்லோருக்கும் நடப்பது போல நடந்திருக்க முடியும்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய வேதத்தை மதித்து, அவருடைய வழிகளுக்கு கீழ்ப்படிந்தபோது, அவர்களுக்கு எதிராக பெரிய வலிமை வாய்ந்த நாடுகள் கூட ஒன்றும் செய்ய முடியவில்லை. ஏனென்றால் கர்த்தருடைய பாதுகாப்பு வளையம் அவர்களைச் சுற்றி பலத்த அரணாக இருந்தது. ஆனால் கீழ்ப்படியாமை கர்த்தருடைய பாதுகாப்பின் எல்லைக்கு வெளியே அவர்களைக் கொண்டு சென்றது. எனவே எப்போது தாக்க சந்தர்ப்பம் கிடைக்கும் என்று காத்திருந்த பகைவர்கள் யாவரும் அவர்கள் மேல் பாய்ந்து அவர்களை கடுந்துன்பத்திற்குள் ஆழ்த்தினார்கள்.

ஆம். ஒருவர் ஆவிக்குரிய ஈடுபாடுகளோடு இருந்தாலும், ஊழிய ஈடுபாடுகளோடு இருந்தாலும், அவர் ஏதாவது ஒரு விதத்தில் கர்த்தர் விரும்பாத பாதையில் தொடர்வாரானால், அவர் தேவப்பிரசன்னத்தை அதாவது தேவ பாதுகாப்பை இழந்துவிடுவார். அப்போது அவரை எப்பொழுது விழுங்கலாம் என ஏற்கெனவே சிங்கம் போல சுற்றி வருகின்ற சாத்தானின் வலையில் அவர் எளிதாக விழுந்துவிட முடியும். அவர் கர்த்தருடைய வழியில் இல்லாததால் கர்த்தர் சாத்தானை தடைசெய்யாமல் எல்லோருக்கும் நிகழ்வது போல நிகழ்வதற்கு விட்டுவிடுகிறார். கர்த்தரை அறியாதவர்களை விட, கர்த்தரை அறிந்தவர்களுக்கு அதிக துன்பம் நிகழ்வதற்கு இது ஒரு முக்கியமான காரணமாகும்.

எனவே நாம் ஆவிக்குரிய வாழ்க்கையை ஏற்றுக் கொண்டவர்களாக மட்டுமல்ல. அந்த வாழ்க்கைக்குரிய நியதிகளுக்கு உட்பட்டு வாழவும் வேண்டும். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களாக மட்டும் அல்ல. இயேசுவின் வழிகளில் நடக்க கவனமுடையவர்களாகவும் இருக்க வேண்டும். கர்த்தருடைய ஊழியத்தில் தீவிரமாக இருப்பது மட்டுமல்ல. கர்த்தருடைய சித்தத்தின்படியாக வாழ்வதிலும் மிக விழிப்பாயிருக்க வேண்டும். இவைகளில் குறைவுகள் ஏற்பட்டு தொடரும் போது, கர்த்தரை அறியாதவர்களுக்கும், விசுவாசியாதவர்களுக்கும் ஏற்படுவதை விட அதிக கஷ்டங்களும், வேதனைகளும் நமக்கு நேரிட வாய்ப்புண்டு. ஏனென்றால் கர்த்தரை விசுவாசியாதவர்களையல்ல. கர்த்தரை விசுவாக்கின்றவர் களைத் தாக்குவதற்காகத்தான் சாத்தான் வாய்ப்புத் தேடி கவனமாகக் காத்திருக்கின்றான். கர்த்தரையும், அவருடைய வழிகளை அறிந்தும் அவருடைய வழிகளில் நம் கால்கள் இல்லாமலிருந்தால், கர்த்தருடைய பாதுகாப்பு வளைய அனுபவத்தை இழந்து, கர்த்தரை அறியாதவர்களுக்கு எது நிகழ முடியுமோ, அது நமக்கும் நிகழ்வதற்கு வழி ஏற்பட்டுவிடும். எனவே தேவனுடைய பிரசன்னத்தில் நம்மைக் காண தினமும் விழிப்போடிருப்போமாக.

○ ○ ○

கர்த்தருடைய வார்த்தைக்கு பஞ்சம்

9

என்றுமே இல்லாத அளவிற்கு வேதாகம வினியோகங்களும், ஆவிக்குரிய புத்தக வெளியீடுகளும், வேதாகமக் கருத்தரங்குகளும், மேடை நற்செய்தி அறிவிப்புகளும், கிறிஸ்தவ தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் மிகுதியாக இன்று பெருகியுள்ளன. அனைத்து நவீன ஊடகங்கள் மூலமாகவும் தேவ செய்திகள் பல்வேறு விதங்களில் தொனித்து கொண்டுதானிருக்கிறது.

ஆனால் இன்றைய யதார்த்தமான ஒரு நிலை என்னவென்றால் "கர்த்தருடைய வார்த்தைகளுக்கு இன்று கடும் பஞ்சம் நிலவுகிறது" என்பது தான். இதனை உண்மையான கூற்று என்று நம்புவதற்கு மிகவும் கடினமாகவேயிருக்கும். ஆனால் அதுதான் உண்மை.

கர்த்தருடைய வார்த்தைக்கு பஞ்சம் என்பது ***"கர்த்தர் பேசி அதனை ஜனங்கள் கேட்கின்ற ஒரு அனுபவத்திற்கு இன்று பஞ்சம் என்பதே அர்த்தம்.*** இன்றைய கிறிஸ்தவ உலகத்தில் வேத ஆராய்ச்சியாளர்களும், விரிவுரையாளர்களும், விளக்க நூல் எழுதுகிறவர்களும், பிரசங்கிகளும், நற்செய்தியாளர்களும் மிகுதியாக உள்ளனர். ஆனால் இன்றைய சூழ்நிலையில் கர்த்தர் எதை ஜனங்களுக்குப் பேச விரும்புகிறார் என்பதை கவனித்து கேட்டு, அதனை தங்களுடைய மனதிற்கேற்ப மாற்றாமல் அப்படியே தைரியமாக உரைக்கும் தீர்க்கத் தரிசிகள்தான் மிகவும் குறைந்த எண்ணிக்கையில் உள்ளனர்.

ஆமோஸ் தீர்க்கதரிசி தான் வாழ்ந்த காலத்து சமுதாய சூழ்நிலையின் பின்னணியில் கர்த்தரால் ஏவப்பட்டு "கர்த்தருடைய வசனம் கேட்க முடியாத பஞ்சம் வரும்" என்று முன்னறிவித்தான். (ஆமோஸ் - 8:11) இன்று நாம் வாழும் காலத்தில் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை நிலவுவதைக் காண்கின்றோம். இன்று "கர்த்தர் பேசுகிறார்" என்ற முன்னறிவிப்போடு பிரசங்கிக்கின்றவர்கள் ஏராளமாயிருந்தபோதிலும் அவ்வித பிரசங்கங்கள் பெரும்பாலானவைகளில் கர்த்தர் பேசியதற்கான ஆவிக்குரிய அடையாளங்கள் எதுவும் இல்லை. "இன்று தீர்க்கதரிசன வரமுடையவர்" என்ற விளம்பரப் பெயரில் அநேகர் இருந்தாலும், அவர்களின் தீர்க்கதரிசனங்கள் கர்த்தருடைய வார்த்தைகளாக இராமல், அவர்கள் தெரிந்து கொண்ட சொந்த வார்த்தைகளாகவே உள்ளன.

இன்று சபை பிரசங்கங்களிலாயினும் சரி, நற்செய்தி அறிவிப்புகளிலாயினும் சரி, தீர்க்கதரிசன உரைகளிலாயினும் சரி, தொலைக்காட்சி செய்திகளிலாயினும் சரி, கர்த்தருடைய சத்தம் தொனிப்பது மிக மிக அபூர்வமாகிக் கொண்டேயிருக்கிறது. பெரும்பாலானோர் ஜனங்களுடைய மனதைத் தொடும் விதமாக தேவ செய்தியை உரைக்க வேண்டும் என்று தாங்களே முடிவு செய்து அதற்கேற்றபடி வார்த்தைகளை தேர்ந்தெடுத்து பேச விரும்புவதால், அவர்கள் மூலமாக கர்த்தர் தாம் பேச விரும்புகின்றவைகளை பேச முடியவில்லை. பெரும்பாலான பாஸ்டர்களும், பிரசங்கிமார்களும், நற்செய்தியாளர்களும் எப்படி பேசினால் ஜனங்கள் தங்கள் வசம் எளிதாக ஈர்க்கப்பட்டு தங்கள் சபைகளும், அமைப்புகளும், இயக்கங்களும் வேகமாக வளர முடியும் என நம்புகிறார்களோ அதையேப் பேசுகிறார்கள். எனவே தேவன் அவர்கள் மூலமாக தமக்கு சித்தமான விஷயங்களைப் பேச முடியவில்லை.

ஆகாப் ராஜா காலத்து நானூறு தீர்க்கதரிகளும், எரேமியா காலத்து நானூறு தீர்க்கதரிசிகளும், எரேமியா காலத்து அனனியா தீர்க்கதரிசியும், தாங்கள் விரும்பியபடி கேட்கின்றவர்கள் உற்சாகப்படும் படும் விதமாக பேச முடிவு செய்து, அப்படியே பேசினார்கள். அவைகள் கர்த்தருடைய வார்த்தைகளாக இருக்கவில்லை. அவர்கள் கர்த்தர் அந்த மணி நேரத்தில் எதைப் பேச விரும்புகிறார் என்று கவனியாமல், தாங்கள் எதைப் பேசினால் கேட்பவர்களுக்கு உற்சாகமாயிருக்கும் என்ற அடிப்படையில் பேச முடிவு செய்துவிட்டதால், அவர்களோடு கர்த்தர் பேச இயலவில்லை.

இன்றைய கிறிஸ்தவ உலகில் வழங்கப்படும் பெரும்பான்மையான பிரசங்கங்கள் அனனியா ரகமாகவும், நானூறு தீர்க்கதரிசிகளின்

ரகமாகவுமே இருக்கின்றன. அங்கே கர்த்தருடைய சத்தத்தை தொனிக்க வேண்டும் என்ற சிந்தையில்லாமல் ஜனங்களை உற்சாகப்படுத்தவேண்டும் என்ற ஒரே நோக்கமே மேலோங்கி நிற்கின்றது.

இன்று கர்த்தருடைய வார்த்தை அதிகமாக தொனிக்கவில்லை என்பதை எந்த அடிப்படையில் புரிந்து கொள்வது என்ற கேள்வி எழலாம். வேதாகம காலங்களில் தொனித்த கர்த்தருடைய வார்த்தைகளையும், இன்று ஜனங்களின் நடுவிலே கர்த்தருடைய வார்த்தைகள் என்ற பெயரில் தொனிக்கும் வார்த்தைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே வேறுபாட்டை உணர முடியும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் காலத்தில், வேதத்தை வைத்து போதிக்கும் ஏராளமான வேதபாரகர்கள் இருந்தனர். அவர்களும் பிரசங்கிக்கும் வேலையை செய்து கொண்டிருந்தனர். ஆனால் அவைகள் தேவனுடைய வார்த்தைகளாக இருக்கவில்லை. இயேசு கிறிஸ்துவின் வசனங்களைக் கேட்டவர்கள் அந்த வித்தியாசத்தை அறிந்து கொண்டனர். (மத் – 7:28, 29)

வேதாகம கால தேவனுடைய வார்த்தைகளையும் தீர்க்கத்தரிசிகள் உரைத்தவைகளையும் கவனித்துப் பாருங்கள். அந்த செய்திகளின் பிரதான சாராம்சம் பாவத்தைக் கண்டித்தல், நீதியை வற்புறுத்தல், தேவ கோபத்தை வெளிப்படுத்துதல், மனந்திரும்ப அழைத்தல், வாழ்க்கையை சீர்ப்படுத்துதல், ஆகியவையாகவே இருக்கும். தேவனுக்கேற்றபடி வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதே அன்றைய கர்த்தருடைய வார்த்தைகளின் பிரதானமாக பிரதிபலிக்கும் விஷயமாக இருந்தது.

ஆனால் இன்றைய பெரும்பான்மையான தேவ செய்திகளில் இந்த அம்சங்கள் மிகவும் குறைவுபடுகிறது. மேடைப் பிரசங்கங்களாயினும் சரி, தொலைக்காட்சி செய்திகளாயினும் சரி, கிறிஸ்தவ புத்தகங்கள் மற்றும் இதழ்களாயினும் சரி அவைகளில் "கலங்காதே, திகையாதே" "துக்கம் சந்தோஷமாக மாறும்" என்பது போன்ற அம்சங்களே நிரம்பியிருக்கின்றன.

வேதாகம கால தீர்க்கத்தரிசிகள் தாங்கள் வாழ்ந்த கால சமுதாய சூழ்நிலைகளை தங்களின் தீர்க்கத்தரிசனவார்த்தைகளில் பிரதிபலித்தார் கள். ஏசாயா, எரேமியா, எசேக்கியா, ஒசியா போன்ற தீர்க்கத்தரிசிகளின் பிரசங்கங்களில் பாவத்திற்கும், அக்கிரமத்திற்கும், உண்மையின்மைக்கும், உத்தமமின்மைக்கும் எதிரான தேவனுடைய மன உணர்வுகள் மிகுதியாக வெளிப்பட்டன.

என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள் என்ற தேவ வார்த்தையை ஆறுதலுணர்வோடு பிரசங்கித்த ஏசாயா, அதையே திருப்பி, திருப்பிக் கூறவில்லை. ஜனங்களிடம் போய் "உங்களை கழுவி சுத்திகரியுங்கள்,

நன்மை செய்ய படியுங்கள். என்பது போன்ற விஷயங்களையே அதிகமாக பேசினார்கள். (ஏசாயா – 1:16, 17) எரேமியா "தீர்க்கதரிசி சீர்கெட்ட பிள்ளைகளே திரும்புங்கள்" என்றும் இஸ்ரவேலே நீ திரும்புகிறதற்கு மனதாயிருந்தால் திரும்பு என்றும் கூவி அழைக்கிறவனாயிருந்தான். (எரே – 3:22:4:1)

இன்று சபைகளிலும் ஆறுதலான பிரசங்கங்கள்தான். நற்செய்தி மேடைகளிலும் ஆறுதலான பிரசங்கங்கள்தான். பத்திரிகைகளிலும், ஆறுதலான பிரசங்கங்கள்தான். பாவத்தைக் குறித்தும், தவறான மனநிலைகளைக் குறித்தும், தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களைக் குறித்தும், தேவனுடைய நீதி நியாயங்களைக் குறித்தும் கண்டித்து பேசுகிற வார்த்தைகளை கேட்பதும் படிப்பதும் மிகவும் அபூர்வமாக உள்ளது. ஆறுதலாக பேசுவதென்பது எல்லோருக்கும் பிரியமான ஒன்றாக இருப்பதால் எல்லோரும் அதனையே தெரிந்து கொள்கின்றார்கள்.

ஆனால் மனிதனுடைய பிரச்சனைகள் வியாதியும், பொருளாதாரக் கஷ்டங்களும் மட்டும் அல்ல. மனிதனுடைய உடனடித் தேவைகள் ஆறுதலும், பிரச்சனைகளிலிருந்து விடுதலை அடைதலும் மட்டும் அல்ல. பாவம் ஒரு பெரிய பிரச்சனை. குணநிலை சரியில்லாத வாழ்க்கை ஒரு பெரிய குறைபாடு, ஒழுங்கற்ற வாழ்க்கைகள் பெரிய வியாதி, தேவனைப் பிரியப்படுத்தி வாழ விரும்பாத இதயநிலை ஒரு பெரிய ஆசீர்வாதத்தடை. ஒழுங்கு, உண்மை, நீதி, நியாயம், பரிசுத்தம், நற்சுபாவ நிலைகள், தேவ ஐக்கியம் ஆகியவை மனிதனுடைய மிக முக்கிய உடனடித் தேவைகள்.

இவைகளைக் குறித்து சீரியஸாகப் பேசாமல் எப்படி ஜனங்களுக்கு உணர்வு ஏற்படுத்த முடியும்? இன்றைய பெரும்பான்மையான ஊழியர்கள் கர்த்தர் மனிதனுடைய வாழ்க்கை பிரச்சனைகளைக் குறித்து மட்டுமே கரிசனை கொண்டு அதைக்குறித்து மட்டுமே பேசிக்கொண்டிருக்கிறார் என்ற விதமாகவே செயல்படுகின்றனர். பாவம், அக்கிரமம், ஒழுங்கின்மை, தவறான சுபாவங்கள், தேவ உறவற்ற நிலை, பரிசுத்தமின்மை ஆகியவற்றைக் குறித்தெல்லாம் கர்த்தர் இப்போது அதிகமாக பேசுவதில்லை என்று கூறுவது போலவே நடந்து கொள்கின்றார்கள்.

இல்லை. இல்லை. வேதாகமகாலங்களில் தேவன் பரிசுத்தம், உண்மை, உத்தமம், நீதி, நேர்மை, நல்நடத்தை, நற்சுபாவம், நற்செயல் ஆகியவைத் தொடர்பாகவே மீண்டும், மீண்டும் பேசிக்கொண்டிருந்தார். இன்றும் தேவன் அவ்விதம் பேச விரும்புகிறார். ஆனால் தீர்க்கத்தரிசிகள் அவர் பேச விரும்புவதை பேசுவதற்கு தயாராயில்லை. அவர்கள் தேவ விருப்பங்களையும், தேவனின் உணர்வுகளையும்விட தங்கள் விருப்பங்களையும், உணர்வுகளையும் முன்னிலைப்படுத்த விரும்புவதால் கர்த்தர் அவர்கள் மூலமாக பேசவில்லை.

இன்று பாவம் பெருகிப்போய்விட்டது. அக்கிரமம் அதிகரித்து விட்டது. நீதி, நியாயம் நிலைகுலைந்து போய்விட்டது. உண்மையும், உத்தமமும் உதாசீனப்படுத்தப்பட்டு விட்டது. நற்சுபாவங்கள் நலிந்து போய்விட்டன. விசுவாசிகள் மத்தியில் தேவ பயம் சார்ந்த வாழ்வு மிகவும் குறைந்து போய்விட்டது. சபைகளில் பாவம் ஆளுகை செய்கிறது. தேவபக்தி பிழைப்பிற்கான விஷயமாகிவிட்டது. ஊழியங்கள் பணம் சம்பாதிக்கும் இயந்திரங்கள் ஆகிவிட்டன. என்றுமே இல்லாத அளவிற்கு இன்று தேவனுடைய நியாயங்களும் நீதிகளும் தேவனை அறிந்தவர்களாக எண்ணிக் கொள்கின்றவர்கள் நடுவில் அசட்டையும் அலட்சியமும் செய்யப்படுகிறது.

இப்படிப்பட்ட ஒரு சீர்குலைவின் காலத்தில் கர்த்தருடைய வார்த்தைகள் எப்போதும் "கலங்காதே திகையாதே" என்ற ரீதியாக மட்டும் தொனித்துக் கொண்டிருப்பது போல காட்டப்பட்டால் அங்கே ஏதோ தந்திரம் செயல்படுகிறது என்று அர்த்தம். பாவம் பெருகியுள்ள இந்த நாட்களில் – மாய்மாலமும், மாறுபாடுகளும் ஆலமரமாய் தழைத்துப் போன இந்த நாட்களில் – உண்மையும், உத்தமமும் உருவழிந்து கொண்டிருக்கின்ற இந்த நாட்களில் – பண ஆசையும் பொருளாசையும் ஆளுகை செய்கின்ற இந்த பொல்லாத நாட்களில் – பாவத்தைக் குறித்த கண்டிப்பும், தேவ நீதி நியாயங்களைக் குறித்த எச்சரிக்கைகளும் மிக, மிக குறைவாகக் காணப்படுகிறது என்றால், அங்கே ஏதோ தடை இருக்கிறது என்று அர்த்தம்.

ஆம். ஆமோஸ் உரைத்தது போன்று கர்த்தருடைய வார்த்தைகளுக்கு இன்று பெரிய பஞ்சம் நிலவுகிறது. கர்த்தருடைய வாயாக நின்று அவர் பேச விரும்புகிறவைகளை அப்படியே பேசுகின்றவர்களுக்கு பெரிய பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது.

ஆம். ஆறுதல் ஆறுதல் என்று எப்போதும் அதையே பேசிக் கொண்டிருப்பவர்கள் உண்மையிலேயே கர்த்தர் உரைத்துப் பேசுகிறார்களா அல்லது தாங்களே தெரிந்து கொண்டு தங்கள் விருப்பப்படி பேசுகின்றார்களா என்பதை கவனித்துப் பார்க்க வேண்டிய காலம் இது. ஜனங்களின் பிரச்சனைகளைக் குறித்து மட்டும் கர்த்தர் உரைத்ததாக பேசுகின்றவர்களிடம், ஜனங்களின் பிரதான பிரச்சனையாகிய பாவம், ஒழுங்கின்மை, பரிசுத்தமின்மை, ஆகியவற்றைக் குறித்து கர்த்தர் ஏன் எதுவும் பேசவில்லை என்ற கேள்வியை கேட்க வேண்டிய காலம் இது.

தேவ அன்பையும், ஆசீர்வாதத்தையும் திரும்ப திரும்பக் கூறி ஜனங்களை தேற்றுவதற்கு கரிசனை கொண்ட ஊழியர்களுக்கு, ஜனங்களின் வாழ்க்கையில் காணப்படும் தேவனுக்கு பிரியமற்ற காரியங்களைக் குறித்த கரிசனையை தேவன் ஏற்படுத்தாமல் விட்டுவிட்டாரா என்று வினாவெழுப்பி சிந்திக்க வேண்டிய காலம் இது.

பாவங்களை பகிரங்கமாக சுட்டிக்காட்ட வேண்டிய காலம் இது அக்கிரமங்களையும் அநியாயங்களையும் அச்சமின்றி அடையாளங்காட்ட வேண்டிய வேளை இது. உண்மையின்மையைக் குறித்தும், உத்தமமின்மையைக் குறித்தும் உரக்க சத்தமிட வேண்டிய காலம் இது. மாய்மாலங்களைக் குறித்தும் முரட்டாட்டங்களைக் குறித்தும் ஓங்கி குரலெழுப்ப வேண்டிய நேரம் இது. தேவ நியதி மீறலைக் குறித்தும், தேவ வழி புறக்கணிப்புகளைக் குறித்தும் சத்தமிட்டு எச்சரிக்க வேண்டிய தருணம் இது.

இந்த கால கட்டத்தில் கர்த்தர் பேசினால் இவைகளைக் குறித்து பேசாமல் இருக்கவே முடியாது. இந்த பொல்லாத சமுதாயச் சூழலில் கர்த்தருடைய வார்த்தைகள் வெளிப்பட்டால் இவைகளைக் குறித்த கண்டனங்களையும், கடிந்து கொள்தல்களையும் கொண்டிராமல் இருக்க முடியாது.

இப்படிப்பட்ட கால கட்டத்தில் ஆறுதல் ஆறுதல் என்ற தலைப்புகளைத் தாண்டி வேறெதையும் கூற விரும்பாதவர்களின் ஆவியைக் குறித்து சந்தேகப்பட வேண்டிய கட்டாயம் உள்ளது. ஆகாபை உற்சாகப்படுத்துவதில் குறியாயிருந்து, அவனுடைய ஆதரவை எதிர்பார்த்து சாதகமாக தீர்க்கதரிசனம் உரைத்த நானூறு தீர்க்கதரிசிகளிடம் இருந்தது உண்மையான கர்த்தருடைய வார்த்தை அல்ல. அதைக் கேட்ட ஆகாப் அழிந்தான். ஏனென்றால் அவனுடைய பாவத்தை சுட்டிக்காட்ட வேண்டிய ஒரு நேரத்தில், அவனை ஆறுதல்படுத்தி, ஊக்குவிக்க அவர்கள் விரும்பினர். முடிவு அழிவு. சிதேக்கியாராஜாவின் காலத்தில் அனனியா தீர்க்கன் அவனுக்கு சாதகமாக உற்சாக வார்த்தைகளைப் பேசினான். ஜனங்களும் அவனை நம்பினர். முடிவு அழிவு.

ஆம். பாவத்தைக் கண்டித்துணர்த்தி தேவகிருபை நாட ஏவ வேண்டிய அவன் உற்சாகப்படுத்தும் ஊழியம் செய்தான். அழிவுதான் விளைவானது.

ஆம். கர்த்தருடைய வார்த்தைக்கு கடும் பஞ்சம் இன்று நிலவுகிறது. இதுவே உலகத்தின் முடிவு நெருங்கிவிட்டது என்பதற்கு வலிமையான ஒரு அடையாளமாயிருக்கிறது. விழித்திருப்போம். உணர்வடைவோம். உண்மை எது? போலி எது? என்பதை அடையாளங் கண்டிட எச்சரிக்கையாயிருப்போம்.

O O O

10

தொடர்ந்து குறைகளைக் கூறுவது ஏன்?

சிலர் பிறரிடத்திலும், பிறருடைய செயல்களிலும் ஏதாவது ஒரு சிறுபிழையை அல்லது குறைவைக் கண்டுபிடிக்க மிகவும் ஆவலாயிருப்பார்கள். சிலரால் எவ்வளவு நல்லவர்களையும், எவ்வளவு நல்ல செயல்களையும் நல்ல கண்ணோட்டத்தில் பார்க்கவே முடியாது. ஒருவர் எவ்வளவுதான் நல்லவராக வாழ்ந்தாலும் அந்த நல்ல நிலையை மனதார ஏற்கும் பக்குவம் அவர்களுக்கு கிடையாது. எனவே ஒரு சிறு குறையைக் காண்கின்ற வாய்ப்பு கிடைத்து விட்டால், அவர்கள் மிகவும் குஷியடைந்து அந்த நபரின் நல்ல நிலையை ஒன்றுமில்லையென்பது போல பிறரை பார்க்க செய்வதில் அதிக தீவிரமாயிருப்பார்கள்.

இது நல்லதை மெச்ச விரும்பாத ஒரு தவறான பொறாமை நிறைந்த மனநிலையின் வெளிப்பாடாகும். இது மிகவும் வெறுக்கத்தக்கதான தீய குணமாகும். இயேசு கிறிஸ்து நல்லவராகவும், நல்லதை செய்கிறவராகவும், வாழ்ந்தார். ஆனால் அந்த மெச்சத்தக்க பரிசுத்தமான நல்நிலையை மனதார ஒத்துக் கொள்ள இயலாதபடி, பரிசேயர்களும், சதுசேயர்களும் குறுகிய மனப்பான்மையுடையவர்களாக இருந்தனர். எனவே அவர்கள் எங்கே குறைகூறவும், குற்றஞ்சாட்டவும் ஒரு வாய்ப்பு கிடைக்கிறதா பார்ப்போம் என்று அவருடைய வார்த்தைளையும் செயல்களையும் கூர்ந்து கவனித்து கொண்டிருந்தனர்.

அதே வேளையில் ஒருவர் தொடர்ந்து சில குறைகளையும், குற்றங்களையும் கூற நேரிடும் போது, அவர் தவறான ஒரு மனநிலையின் விளைவாகத்தான் அவ்விதம் செயல்படுகிறார் என்று ஒட்டு மொத்தமாக கூறிவிடவும் முடியாது. இன்று கிறிஸ்தவரிடமோ, ஊழியங்களிலோ, கிறிஸ்தவ செயல்பாடுகளிலோ மலிந்து கிடக்கின்ற சில குறைவான காரியங்களையும், தவறானப் போக்குகளையும் யாராவது சுட்டிக்காட்டி னால், இவர் ஏன் தவறுகளைப்பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார் என்ற குற்றச்சாட்டு பல திசைகளிலிருந்து வருகின்றன. அதிலும் திரும்ப திரும்ப சில குறைவுகளை கோடிட்டுக் காட்ட நேரிடும்போது, இவருக்கு குறை சொல்வதே வேலையாக போய்விட்டது என்று சிலர் சலித்து போவதுண்டு. இன்னும் சிலர் தவறானப் பகுதிகளை சுட்டிக்காட்டி குற்றம் சாட்டுவதற்குப் பதில் நல்லப் பகுதிகளை சுட்டிக்காட்டி, மெச்சலாமே என்ற நியாயத்தை முன்வைப்பதுண்டு. இன்னும் சிலர் நல்லதை மெச்சுவது மட்டுமே நமது கடமை, யாருடைய குறைகளையும் கூற நமக்கு அதிகாரமில்லை என சாதிப்பதுண்டு. எனவே தவறுகளைச் சுட்டிக்காட்டி விமர்சிப்பதை சிலர் தேவனுக்கு விரோதமான ஒரு செயல் போலவும், செய்யக்கூடாத ஒரு பெரிய பாவம் போலவும் எண்ணவும், பேசவும் செய்கின்றனர். யாருடையத் தவறுகளையும், தப்பிதமான செயல்பாடுகளையும், வேத விரோதமான நடவடிக்கைகளையும் கண்டுகொள்ளாமல் அவைகளை சாதாரணமாக எடுத்துக் கொள்வதையே தேவனுக்கு பிரியமான விஷயம் என நினைக்கின்றனர்.

ஆனால் வேதத்தை சரியாக புரிந்து கொள்ள இயன்றவர்கள் இது ஒரு தவறான சிந்தனை என்பதை உணர்ந்து கொள்ள முடியும். ஏனென்றால் கர்த்தருடைய வார்த்தைகளுக்கும், வழிகளுக்கும், நியாயங்களுக்கும் முரணாகச் செய்யப்படும் விஷயங்களை சுட்டிக்காட்டுவதும், கண்டிப்பதும், எச்சரிப்பதும் கர்த்தருடைய ஊழியத்தின் முக்கியமான ஒரு பகுதியாகும். அதுவும் தேவனால் நியமிக்கப்பட்ட ஒரு ஊழியமே.

எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும், கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு. 11 தீமோ – 4:2

இதுவும் தேவையான ஊழியமே

யோவான்ஸ்நானனின் அழைப்பு அவ்விதமான ஒரு அழைப்பாகவே இருந்தது. அவன் அன்றைய பரிசேயர்களின் மாய்மாலமான வாழ்க்கையைக் கண்டித்துப் பேசினான். அவர்களைப் பார்த்து "விரியன் பாம்பு குட்டிகளே" என்று கூறினான். அவன் மத பக்தியாளர்களிடமும் குற்றங்களையே கண்டு, அதைக் குறித்து எச்சரித்தான். பொது ஜனங்களிடமும் அவன் மனந்திரும்ப

வேண்டிய தேவையைக் குறித்தே கடிந்து பேசினான். நாட்டை ஆளுகின்ற ராஜாவிடமும் குற்றத்தையேக் கண்டு அதனை விமர்சித்துப் பேசினான்.

அவன் திரும்ப திரும்ப தவறுகளையே சுட்டிக்காட்டிப் பேசியதால் அவனிடம் குறை கூறும் ஆவி கிரியை செய்தது என்றோ, குற்றஞ்சாட்டும் ஆவி அவனை இயக்கியது என்றோ யாராவது கூறினால் அது தேவ தூஷணமாகவே இருக்கும். ஏனென்றால் அவ்விதமாக தவறுகளை சுட்டிக்காட்டி எச்சரிப்பது அவனுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட ஊழியமாக இருந்தது. அதற்காகவே அவன் அழைக்கப்பட்டிருந்தான். தவறான விஷயங்களை வெளிப்படுத்தி, காரசாரமாகப் பேசியது குறை கூறி குஷியடைய வேண்டும் என்ற நோக்கத்தால் அல்ல. அது தேவ ஆவியால் அவனுக்குள் ஏற்பட்ட தூண்டுதல். கர்த்தருக்கும், அவருடைய பரிசுத்தமான வேத நியாயங்களுக்கும் புறம்பாக செய்யப்பட்ட தப்பிதமான காரியங்களை தீவிர உணர்வோடுப் பார்த்து அதனை சுட்டிக்காட்ட அவன் தேவனால், ஏவப்பட்டான்.

யோவானுக்கு நல்லதை மட்டும் ஏன் பார்த்து பாராட்ட தெரியவில்லை? என்றோ, ஏன் இப்படி பிறருடைய குறைகளையே, வெளிப்படுத்தி காரசாரமாக பேசவேண்டும்? என்றோ கேட்டால் அது தேவனுக்கு எதிரான ஒரு கருத்தே ஆகும்.

மருத்துவர் சரீரத்தை பரிசோதித்து அங்கே என்ன குறைபாடுகள் இருக்கிறது என்பதை சொல்லத்தான் செய்வார். வியாதியைக் கண்டறிந்து அதனை வெளிப்படுத்துவது மருத்துவரின் முக்கியமான ஒரு கடமை. என்ன இந்த மனிதர் எப்போதும் இந்த வியாதி, அந்த வியாதி என்று கூறிக்கொண்டிருக்கிறார் என்று நாம் சலித்துக் கொண்டால் அது சரியானதல்ல. வியாதியை வெளிப்படுத்துவது மருத்துவரின் வேலை. அதை அவர் செய்யாவிட்டால் ஆரோக்கியத்தைப் பெறும் வழியைக் காண முடியாது.

அதுபோல தவறான செயல்பாடுகளும், தவறான நடைமுறைகளும், சரியாகப் பார்க்கப்பட்டு சுட்டிக்காட்ட பட வேண்டியது தேவனுடைய முக்கியமான ஒரு ஊழிய அழைப்பாகும். ஒரு எரேமியாவை அழைத்த தேவன் அக்கால மக்களிடமும், ஆன்மீகத் தலைவர்களிடமும், பிரபுக்களிடமும், ராஜாவிடமும் உள்ள குறைபாடுகளையும், குற்றங்களையும் வெளிப்படுத்தி, கண்டித்துப் பேச அவனை ஏவினார். எனவே எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகத்தின் பெரும்பகுதி குற்றச்சாட்டுகளையும், குறை கூறல்களையுமே உள்ளடக்கி உள்ளது. எரேமியா என்றாலே குறை கூறுகிறவனும், குற்றஞ்சாட்டுகிறவனுமாகிய ஒரு மனிதன் என்று சொல்லத்

தகுந்த விதமாகவே அவன் செயல்பட்டான். அது குறைகூறும் ஆவியோ, குற்றஞ்சாட்டும் ஆவியோ அல்ல. அது தேவனுடைய அழைப்பு. அது அவன் மூலம் நடந்த தேவ கிரியை. அதற்காகவே அவன் அழைக்கப் பட்டிருந்தான். அவனுக்குள் இருந்து செயல்பட்ட தேவ ஆவியின் தூண்டுதல்களால்தான் அவன் அவ்விதம் குறை கூறியும், குற்றஞ்சாட்டியும் பேசினான். அவன் திரும்ப திரும்ப ஜனங்களின் தவறுகளையும், மதத் தலைவர்களின் தவறுகளையும் கோடிட்டுக் காட்டிக் கொண்டிருந்தான். அவன் ஜனங்கள் உற்சாகமடையும் விதமான செய்திகளைக் கூறாமல், அவர்களின் மனம் புண்படும் விதமான காரியங்களையே மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருந்தான். ஏனென்றால் அது அவனுடைய அழைப்பின் தன்மை. அவ்விதம் செய்ய வேண்டியது அந்த காலகட்டத்தில் மிகவும் அவசியமாக தேவனுடையப் பார்வையில் காணப்பட்டது.

ஏன் குறைகளை மட்டும்?

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய ஊழிய நாட்களில் திரும்ப திரும்ப பரிசேயர் சதுசேயர், வேதபாரகர் போன்றோரின் ஆன்மீகக் குறைபாடுகளைக் குறித்து பேசிக்கொண்டேயிருந்தார். அவர்களின் தவறான உபதேசங்களையும், தப்பிதமான செயல்பாடுகளையும் மீண்டும், மீண்டும் சுட்டிக்காட்டி கண்டனம் செய்து கொண்டிருந்தார்.

ஏனென்றால் அது அவருடைய ஊழியத்தின் ஒரு பகுதியாக இருந்தது. அந்த பணிவேளையில் அவ்விதம் தவறுகளை சுட்டிக்காட்டிப் பேச வேண்டிய கட்டாயத் தேவை இருந்தது. அவர் பரிசேயர், சதுசேயர், வேதபாரகர் போன்றோரிடம் உள்ள நல்லது எதையும் பாராட்டிப் பேசவில்லை. அவர்களிடம் நல்ல விஷயங்களே இருந்ததில்லை என்று அர்த்தம் அல்ல. ஆனால் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டு சரி செய்யப்பட வேண்டும் என்பதே அவரின் நோக்கமாயிருந்தது. எனவே அவர்களிடம் மெச்சத் தக்க சில ஆன்மீக பக்தி விஷயங்கள் இருந்தும், அநேகரை பாதிக்கவும், பாழ்படுத்தவும் செய்யும் தன்மையுள்ள, அவர்களின் குறைகளையே அவர் கடுமையாக விமர்சித்துக் கொண்டிருந்தார்.

அன்று தீர்க்கதரிசிகள் செய்தது போல, இயேசு கிறிஸ்து செய்தது போல இன்றும் தேவன் சிலரை அழைத்து ஆன்மீக முறைகேடுகளையும், தவறான உபதேசங்களையும், வேதவிரோதமான நடைமுறைகளையும் கண்டித்துப் பேசுமாறு அழைத்திருக்க முடியும். அவர்களது பிரதான வேலை கர்த்தருக்கு உகந்ததல்லாத தவறான காரியங்களைக் குறித்து எச்சரித்துப் பேசுவதுதான். அவர்களின் அழைப்பும், அவர்களுக்குள் நிகழும் ஏவுதல்களும், ஆவியின் கிரியைகளும் அப்படியிருக்கிறபடியால் அவர்கள்

திரும்ப திரும்ப தப்பிதமான காரியங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வருகின்ற வேலையை செய்துக் கொண்டிருப்பார்கள். அநேகருக்கு அது விரும்பக்கூடாத ஒன்றாகவும், சலிப்பிற்குரிய ஒன்றாகவும் இருக்க முடியும். அவர்களின் பார்வையில் அவ்விதம் செய்கிறவர்கள் ஏதோ தவறு செய்கிறவர்களைப் போலவும் தென்பட முடியும். யாரைப் பார்த்தாலும், எதைப் பார்த்தாலும் இவர்களுக்கு தப்பான விஷயங்கள்தான் கண்ணுக்கு தெரிகின்றதா என்று எண்ணவும் அவர்களைத் தூண்ட முடியும்.

ஆனால் அது அவர்களுக்கு தேவன் அளித்த ஊழியம். அந்த ஊழியம் பெரும்பான்மையானவர்களின் கண்களுக்கு குறைவான ஒன்று போல தோன்றினாலும், அது தேவனுடையப் பார்வையில் மேன்மையானது. அது மனிதர்களின் பார்வையில் தேவையில்லாத ஒரு வேலை போலத் தோன்றினாலும், தேவனுடையப் பார்வையில் அது மிகவும் அவசியமான ஒன்று.

ஒரு காவல்துறை அதிகாரியின் பிரதான வேலை சமுதாயத்தில் நல்லதை செய்கின்றவர்களை பாராட்டிக்கொண்டும், புகழ் மாலை சூட்டிக் கொண்டும் இருப்பதல்ல. அவர் அதை செய்ய வேண்டும். அவர் செய்யவும் செய்வார். ஆனாலும் அவருடைய பிரதானக் கவனம் சமுதாயத்தில் சட்டம் ஒழுங்கை மீறுகிறவர்கள் மேலும், குற்றம்புரிகிறவர்கள் மேலுமே இருக்கும் எங்கே குற்றங்களும் தவறுகளும் நிகழுகிறதோ அங்கேதான் அவர் விரைந்து வருவார். அங்கேதான் அவருடைய நடவடிக்கைகள் அதிகமாக இருக்கும்.

ஏன் இந்த போலீஸ் அதிகாரி நல்லது செய்கின்றவர்களைப் போய் மெச்சி பாராட்டுவதை விட்டு விட்டு குறை, குற்றம் என்றவுடன் ஓடிவருகிறார் என்று யாராவது நியாயம் சொன்னால் அது முட்டாள்தனமாகவே இருக்கும். ஏனென்றால் போலீஸ் அதிகாரியின் முக்கியப்பணி குற்றங்களைச் சுற்றியே இருக்கும். சட்டம் ஒழுங்கையும் தனிமனித உரிமைகளையும் மீறுகின்றவர்களிடமிருந்து ஜனங்களை பாதுகாப்பதுதான் அவரது பிரதானப்பணி.

ஒருவேளை ஒரு மனிதன் ஜனங்களுக்கு பல நன்மைகளை செய்தி ருக்கலாம். ஆனாலும் ஜனங்களுக்கு பாதகமாக ஒன்றை செய்யும் வேளையில் போலீஸ் துறை அதில் குறுக்கிட்டு அந்த மனிதரை குற்றஞ்சாட்டும். நான் எத்தனையோ நன்மைகளை ஜனங்களுக்கு செய்திருக்கின்றேன். அப்பொழுதெல்லாம் என்னை பாராட்டவில்லை. ஆனால் இப்போது ஒரு குற்றம் செய்ததும் ஓடிவருகிறீர்களே என்று போலீசாரைப் பார்த்து அவன் கேட்டால் அந்த நியாயம் சரியானதாக

இராது. ஏனென்றால் போலீசாரின் முக்கிய கடமை குற்றங்கள் விஷயத்தில் நடவடிக்கை எடுப்பதே.

பரிசுத்த ஆவியானவரின் வேலை

இன்று பலரைப் பாதிக்கும் தவறான ஊழியங்களைக் குறித்தும், பலரை வஞ்சிக்கும் தவறான ஊழியர்களைக் குறித்தும் எதையும் பேசாமல், இயேசு நல்லவர், இயேசு அன்புள்ளவர், இயேசு மனதுருகுகிறவர் என்று மட்டும் பேச தங்களை ஆயத்தும் பண்ணிக்கொண்டவர்களைப் பொதுவாக எல்லாரும் விரும்புவார்கள். யாரைக் குறித்தும், எதனைக் குறித்தும் ஒரு கடுஞ்சொல் கூறத் தெரியாத கள்ளமறியாத வெள்ளை மனமுடையவர் என்று எல்லாரும் அவரை மெச்சிக் கொள்வார்கள். அதே வேளையில் ஒரு எரேமியாவைப் போல, எசேக்கியலைப் போல, ஓசியாவைப் போல, யோவானைப் போல, இயேசுவைப் போல விசுவாசத்துரோகமான காரியங்களையும், வேத பிரமாணத்திற்கு விரோதமான விஷயங்களையும் யாராவது சற்று சுட்டிக்காட்டிவிட்டால் அவரை ஏதோ கடவுளுக்கு விரோதமாக செயல்படுகிறவரைப் போல எண்ணவும், பார்க்கவும், காண்பிக்கவும் செய்வார்கள். ஏனென்றால் அதுவும் ஒரு முக்கியமான இறைப்பணிதான் என்றும் அவ்விதம் செயல்பட அவர்கள் தேவனால் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்றும் அவர்கள் அறியவில்லை. ஏனென்றால் அவர்கள் வேதத்தைவிட, தேவனைவிட தங்களின் உலகத்திற்கேற்ற சுய நியாயங்களுக்கே அதிக முக்கியத்துவம் தருகின்றார்கள்.

பரிசுத்த ஆவியானவரின் முக்கியமான ஒரு செயல்பாடு பாவங்களை கண்டித்து உணர்த்துவதாகும். (யோவான் – 16:8) ஆனால் பரிசுத்த ஆவியானவர் தேற்றுகின்றவர் என்ற உண்மைதான் அநேகருக்கு தெரிகின்றதேயன்றி, அவர் கண்டித்துணர்த்துகின்ற வேலையையும் செய்கின்றவர் என்பது தெரிவதில்லை. ஏனென்றால் பெரும்பான்மையான ஊழியர்கள் பரிசுத்த ஆவியானவருக்கு கீழ்ப்பட்டு செயல்பட விரும்பாமல், தங்களின் மனம் விரும்பியபடி பரிசுத்த ஆவியானவரை செயல்படுத்த வாஞ்சிக்கின்றார்கள். தேற்றுகின்ற ஊழியத்திற்கு உள்ள கவர்ச்சி, கண்டிக்கின்ற ஊழியத்திற்கு இல்லாததால், அவர்கள் தங்களை எப்போதும் தேற்றுகின்றவர்களாகவே நிறுத்த விரும்புகின்றனர். தேனை எல்லாரும் விரும்புவார்கள். ஆனால் வேப்பெண்ணெய்யை வெகுசிலரே வேண்டா வெறுப்பாக ஏற்பார்கள்.

ஆனால் ஒன்றை மட்டும் நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். கர்த்தர் தமக்கு கீழ்ப்படிவதற்கு தங்களை ஆயத்தம் செய்துகொண்ட சிலரை தம்முடைய வேதத்திற்கு விரோதமாக செய்யப்படும் காரியங்களைக்

கண்டிப்பதற்கென்றும் கடிந்து கொள்வதற்கென்றும் நியமிக்கின்றார். அவர்கள் தேவ நியாயங்களுக்கு எதிரான தவறுகளையும், அந்த தவறுகளை செய்கின்றவர்களையும் சாதாரணமாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் எலியாவைப் போல, பினகாசைப் போல, மிகாயாவைப் போல, பவுலைப் போல கர்த்தருடைய வேதத்திற்கு எதிரான காரியங்களை கடுமையாகப் பார்ப்பதோடு, பின்விளைவு பாராமல் கண்டிக்கவும் தயங்கமாட்டார்கள். அது அவர்களின் சுய வைராக்கியத்தின் பிரதிபலிப்பு அல்ல. சத்திய ஆவியானவர் அவ்விதம் அவர்களுக்குள் செயல்பட்டு, அவர்களை செயல்படுத்துகிறார். அது அவர்களுக்குள் கண்டித்துணர்த்தும் ஆவியானவர் நிகழ்த்துகின்ற கிரியை ஆகும்.

அவ்விதமாக ஆவியினால் தூண்டப்பட்டு சில முறைகேடான காரியங்களையும், மாய்மாலமான செயல்களையும் அவர்கள் விமர்சிக்கும் போதும், தவறு என சுட்டிக்காட்டும் போதும் அதனை அலட்சியப் படுத்துவதும், தடுக்க நினைப்பதும், அவர்களை தவறானவர்களாக காண்பிக்க முயற்சிப்பதும் தேவ விரோதமான செயல்களாகும். அது அவர்களை அவ்விதம் செயல்படுவதற்கு நியமித்த தேவனுக்கு எதிராக இயங்கும் செயலாகும். தேவன் "செய்" என்று சொன்ன காரியத்தை ஒருவர் செய்யும் போது, அதனை "செய்யாதே" எனக் கூறுவது தேவனை கோபமூட்டும் நடவடிக்கையாகும்.

பிறர் விரும்பாவிடினும்

ஆமோஸ் தீர்க்கத்தரிசி அக்கால இஸ்ரவேல் மக்களையும், மாய்மால மதத்தலைவர்களையும், அரசனையும் கண்டித்து பேசும்படி தேவனால் நியமிக்கப்பட்ட தேவ ஊழியனாகயிருந்தான். அவன் ஒரு தீர்க்கத்தரிசன பரம்பரையில் தோன்றியவன் அல்ல. அவன் ஆடு மேய்க்கிறவனும், அத்திப் பழங்களை பொறுக்குகிறவனுமான ஒரு சாதாரண மனிதனாக இருந்தான். ஆயினும் தேவன் தவறானப் பாதையில் ஜனங்களை நடத்துகிறவர்களை, எச்சரிக்கும்படியான ஒரு ஊழியத்திற்காக அவனைத் தெரிந்து கொண்டார்.

அவனுக்கு கொடுத்த வேலையின் அடிப்படையில் தேவ ஆவியானவர் அவனுக்குள் கிரியை செய்தபோது அவன் தவறாக செல்லுகின்றவர்களையும், தவறாக செல்ல வைக்கின்றவர்களையும் கடுமையாக விமர்சிக்கும் மனிதனாக மாறினான். எவைகளையெல்லாம், யாரையெல்லாம் கண்டித்து பேசும் படி ஆவியானவர் அவனை ஏவினாரோ, அவைகளையும், அவர்களையும் அவன் பின் விளைவு பாராமல் கண்டிக்கவும், எச்சரிக்கவும் செய்தான்.

ஆனால் அது யாருக்கும் விரும்பத்தக்கதாகவோ, ஏற்கத்தக்கதாகவோ இருக்கவில்லை. அவனுடைய தீர்க்கதரிசன வார்த்தைகள் தேவனுடைய வார்த்தைகளை மதியாமல் வாழ்கின்றவர்களை ஊக்குவிக்காமல் உலுக்க ஆரம்பித்தது. அவன் அன்பான ஒரு கடவுளைக் காண்பிக்காமல், அந்த சூழ்நிலைக்கு தேவையானபடி எச்சரிக்கும் கடவுளைக் காண்பித்ததால் அவன் விரும்பி ஏற்கப்படாமல், வெறுத்து ஒதுக்கப்பட்டான்.

எனவே அவன் அந்த ஜனங்களைப் பற்றி பேசும்போது, "ஒலிமுகவாசலிலே கடிந்து கொள்ளுகிறவனை அவர்கள் பகைத்து, யதார்த்தமாய் பேசுகிறவனை வெறுக்கிறார்கள்" என்று குறிப்பிட்டான். (ஆமோஸ் – 5:10)

அவனுடைய கடுமையான விமர்சனங்களையும், எச்சரிப்புகளையும் பொறுத்துக் கொள்ள இயலாத அமத்சியா என்பவன் ஆமோசைப் பார்த்து, "நீ இங்கே தீர்க்கதரிசனம் சொல்லாதே, இங்கிருந்து ஓடிவிடு" என்று கூறினான். (ஆமோஸ் – 7:12, 13)

ஆனால் அவனோ அந்த ஜனங்களுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் உரைக்க தேவனால் நியமிக்கப்பட்டவனாயிருந்தான். அந்த நியமனத்தை உணராமல் தீர்க்கதரிசிக்கு தடை போட முயற்சித்த அமத்சியாவும், அவனுடைய குடும்பமும் தேவனுடைய கடுமையான தண்டனையை வரவழைத்துக் கொண்டது. (ஆமோஸ் – 7:16,17) ஏனென்றால் கர்த்தர் பேசச் சொன்னதை கேட்டு, தன்னை சரி செய்ய விரும்பாமல், பேசுகிறவனை தடை செய்ய விரும்பியது தேவனுடைய நியமனத்தை அலட்சியம் செய்யும் ஒரு கடுமையான பாவமாக இருந்தது.

என்னுடைய ஊழியங்களையும் என்னையும் நேசிக்கின்ற சிலர் சில வேளைகளில் அன்பின் நிமித்தம் எனக்கு சில ஆலோசனைகள் தருவதுண்டு. "சகோதரனே, கர்த்தர் உங்களுக்கு சத்தியத்தை மிகத்தெளிவாக வெளிப்படுத்தி பேசவும், எழுதவும் அருமையான தாலந்தை தந்திருக்கின்றார். ஆனால் பிற ஊழியர்களின் தவறுகளையும், பிற ஊழியங்களிலுள்ள குறைபாடுகளையும் சுட்டிக்காட்ட அதிகம் முக்கியத்துவம் தராமல், உங்களுக்கு கர்த்தர் வெளிப்படுத்தும் சத்தியங்களை மட்டும் பேசவும் எழுதவும் செய்தால் நன்றாகயிருக்குமே. நீங்கள் தவறுகளையும், குறைகளையும் சுட்டிக் காட்ட அதிகம் கவனம் செலுத்தினால், அதனால் அநேகர் உங்கள் ஊழியங்களை விரும்ப முடியாத நிலை ஏற்படுமே. அது உங்கள் ஊழிய வளர்ச்சியை பாதிக்குமே. தவறு செய்கின்றவர்களை கர்த்தர் பார்த்துக் கொள்வார் என்று விட்டு விட்டு உங்கள் ஊழியத்தை வளர்க்க

பிரயாசப்படலாமே? இவ்விதமாக சிலர் தங்கள் கருத்துக்களைக் கூறுவதுண்டு.

இங்கே நான் அவர்களின் நல்லெண்ணங்களையும், நல்லுணர்வுகளையும் மதிக்கின்றேன். ஆனால் நான் இன்று எழுதுவதும், பேசுவதும் என்னுடைய சொந்த தீர்மானங்களின் அடிப்படையிலோ, சுய விருப்பங்களின் அடிப்படையிலோ அல்ல. உண்மையாக கூறுவதென்றால் இவ்விதம் எழுதுவதும் பேசுவதும் எனக்கு பிரியமானவைகள் அல்ல. நான் ஊழியத்திற்கு வந்த துவக்க காலத்தில் என்னுடைய விருப்பமும், வாஞ்சையும் எல்லோரும் பிரியப்படும் விதமாக கர்த்தருடைய அன்பையும் அற்புத வல்லமைகளையும் மட்டுமே பேச வேண்டும் என்பதாகவே இருந்தது. ஆனால் என் மனம் விரும்பிய பாதையில் போக தேவன் என்னை அனுமதிக்கவில்லை. சத்தியத்தை அவர் எனக்கு தெளிவுபடுத்த தெளிவுபடுத்த சத்தியத்திற்கு புறம்பான காரியங்களையும் சத்தியத்தை மதியாத மாய்மால விஷயங்களையும் வெளிப்படுத்த வேண்டியது நான் மறுக்கக் கூடாத கடமை என்று உணர்த்தப் பட்டேன். அதை நான் உணர்ந்து உறுதிபடுத்த பல ஆண்டுகள் ஆனது.

உண்மைக்கு புறம்பான விஷயங்களை கர்த்தர் விதித்த எல்லைக்குள் நின்று சுட்டிக்காட்டவும், தவறுகளைக் கண்டிக்கவும் தேவ ஆவியானவர் தொடர்ந்து என்னை தூண்டினார். அதனை என்னால் அதிக காலம் அசட்டை செய்து கொண்டிருக்க முடியவில்லை. இவ்விதம் செய்வது அவர் எனக்கு தந்த வேலை. அதை நான் செய்துதான் ஆகவேண்டும். இதனால் நான் பலருடைய நன் மதிப்பையும், அன்பையும், உதவிகளையும் இழக்க நேரிடும். எனக்கு பல நஷ்டங்கள் அதனால் நேரிடும். ஆனால் என்னுடைய சுய நலத்தை முன் வைத்து லாப நஷ்ட கணக்கிட்டு ஊழியம் செய்தால் அது முறையாகாது. கர்த்தர் எதற்காக என்னை அழைத்து எதனை செய்ய என்னை ஏவிக் கொண்டிருக்கின்றாரோ அதனை நான் யார் விரும்புகிறார்கள், விரும்பவில்லை என்று கவனிக்காமல் செய்து கொண்டுதான் இருக்க வேண்டும். பெரும்பான்மையினருக்கு இது பிரியமாயில்லையே என்பதற்காக நான் இதை மாற்ற முடியாது. கர்த்தர் எதை பிரியப்பட்டு செய்யச் சொல்கின்றாரோ அதனை செய்வதுதான் ஊழியனின் கடமை. ஆகையால் அந்த பாதையில் செல்ல தடையாக வரும் எந்த விமர்சனங்களையும், ஆலோசனைகளையும், மனித அபிப்பிராயங்களையும் முக்கியமாக எண்ணி செயல்பட முடியாது.

ஆம். நல்லதைப் பற்றிக் கூறுவது மட்டுமே தேவ ஊழியம் என எண்ணி விடக்கூடாது. நல்லதிற்கு எதிரானவைகளை வெளிப்படுத்துவதும் ஊழியம் தான். கர்த்தருடைய நன்மைகளைப் பற்றி பேசுவது மட்டுமே ஊழிய அழைப்பு என நினைக்கக்கூடாது. கர்த்தருடைய நியாயங்களுக்கு எதிரான முரண் பாடுகளையும், அநேகரை இடறிப் போகச் செய்யும் மாய்மாலங்களையும் கண்டித்துணர்த்துவதும் தேவ அழைப்பு தான்.

O O O

கண்டிப்பின் வடிவத்தில் தேவ அன்பு!

பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடம் இனிமையான, கனிவான, இதமான ஆதரவான வார்த்தைகளைப் பேசி அவர்களை உற்சாகப்படுத்து கின்றனர். இது அவர்களின் அன்பான இதயத்தின் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றது. ஆனால் அதேப் பெற்றோர் சில நேரங்களில் பிள்ளைகள் தவறு செய்கின்றபோது கடினமான, கோபமான, எச்சரிக்கையான, கண்டிப்பான வார்த்தைகளையும் பேசுகின்றனர். ஆனால் இதுவும் அவர்கள் பிள்ளைகள் மேல் வைத்திருக்கின்ற அன்பையும், கரிசனையையுமே வெளிப்படுத்துகின்றது. வார்த்தைகள் இதமாக தொனிக்காமல், கடினமாக தொனித்து பிள்ளைகளின் மனம் சற்று கஷ்டப்பட வழிவகுத்த போதிலும் அது பெற்றோருடைய அன்பின் இன்னொரு வடிவமே. பிள்ளைகள் தவறாகப் போகக்கூடாது நன்றாகயிருக்க வேண்டும் என்ற கரிசனையின் விளைவே அது.

அதுபோலவே தேவன் நம்முடைய வாழ்க்கையில் தம்முடைய அன்பை வெளிப்படுத்தும் போது, அது எப்போதும் இதமான, இனிமையான வடிவத்தில் இருப்பதில்லை. கண்டிப்பு, எச்சரிக்கை, கடிந்து கொள்தல், சுட்டிக்காட்டி உணர்த்துதல் ஆகிய வடிவங்களிலும் தேவ அன்பு வெளிப்படும். தேவன் நம்முடைய தந்தை என்றால், அந்த தந்தையின் அன்பு, சிட்சையின் வடிவத்திலும் இருக்க முடியும் என்பதை நாம் அறிய வேண்டும்.

நீங்கள் சிட்சையை சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களை புத்திரராக எண்ணி நடத்துகிறார். தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ. (எபி – 12:7)

ஆனால் அநேகர் ஆன்மீகம் என்றாலும், ஆண்டவர் என்றாலும் தேவ அன்பு என்றாலும் அது இனிமையாகவும், இதமாகவும் தொனிக்க வேண்டும் என்றே எண்ணுகின்றனர். எனவே கண்டிப்பு, எச்சரிக்கை, உணர்த்துதல், கடிந்து கொள்ளுதல் ஆகிய விஷயங்களை ஆன்மீகத்திற்கு அப்பாற்பட்டவைகளாக எண்ணுகின்ற நிலை இருப்பதோடு, கண்டிக்கின்றவர்களையும், கடிந்து கொள்கின்றவர்களையும், குற்றங்களை உணர்த்துகின்றவர்களையும் சீரியஸாகப் பேசுகிறவர்களையும், தேவ அன்பு குறைந்தவர்களாகவும், மனதுருக்க மனநிலை இல்லாதவர்களாகவும், முத்திரை போடுகின்ற நிலைமை உள்ளது. ஆனால் வேதாகமத்தை நன்கு படித்து, சிந்தித்து, கவனிக்கும் போது, தேவ அன்பு என்பது இதமான வார்த்தைகளை விட பன்மடங்கு அதிகமாக கண்டிப்பான வார்த்தைகளிலேயே மிகுதியாக வெளிப்பட்டது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரைப் பற்றி குறிப்பிடும் போது அவரை தேற்றரவாளர் (Comforter) என்று கூறினார். மிக மிக இதமான, ஆறுதலான, உற்சாகமான தேறுதலான உணர்வை ஏற்படுத்துகின்ற பெயர் இது. பரிசுத்த ஆவியானவர் என்றால் அவர் ஆற்றுகின்றவர், தேற்றுகின்றவர், அரவணைக்கின்றவர், ஆறுதலூட்டுகின்றவர் என்ற விதமாகவே யாரும் புரிந்து கொள்ளமுடியும்.

அதே வேளையில் பரிசுத்த ஆவியானவரை தேற்றரவாளர் என்று கூறிய ஆண்டவர் தொடர்ந்து அவருடைய வேலைகள் அல்லது நடவடிக்கைகள் எப்படியிருக்கும் என்றும் குறிப்பிட்டார். அந்த வேலைகளின் அல்லது செயல்களின் தன்மைகளைக் கவனித்துப் பாருங்கள்.

அவர் வந்து பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். (யோ– 16:8)

பார்த்தீர்களா ! பெயர் தேற்றரவாளர். ஆனால் செயல்பாடுகளோ கண்டித்து உணர்த்துதல். பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு ஆகியவற்றைக் குறித்து ஜனங்களுக்கு நல்ல விழிப்புணர்வை ஊட்டி, கண்டித்து பேசுவதுதான் பரிசுத்த ஆவியானவராகிய தேற்றரவாளரின் பிரதானப் பணிகள்.

இங்கே நாம் அறிவது என்ன? தேற்றரவு செய்கின்ற அல்லது தேற்றுகின்ற ஊழியத்தில் முக்கியமாக உட்பட்டவைதான் கண்டித்து உணர்த்துதல். அப்படியானால் கண்டித்து உணர்த்துதலும் தேவ ஆவியின் இன்னொரு வடிவமே. நம்மைத் தேற்றுதல், திடப்படுத்துதல், ஆறுதலளித்து ஆவியில் பலப்படுத்துதல் கர்த்தர் விரும்புகின்றபோது, அவைகளை வெறும், இதமான, இதயத்தை தொடுவது போன்ற இனிமையான வார்த்தைகளின் மூலமாக மட்டும் செய்யாமல் கண்டித்து உணர்த்துதல் மூலமாகவும் அதைச் செய்கிறார்.

வியாதியால் பாதிக்கப்பட்ட ஒரு மனிதனுக்கு "மருத்துவர்" என்பது மிகவும் ஆறுதலைத் தருகிற ஒரு வார்த்தைதான். அந்த மருத்துவர் மூலமாக நல்ல சிகிச்சை பெற்று உடல் வியாதியின் வேதனையிலிருந்து விடுதலை பெறலாம் என்ற நம்பிக்கையை "மருத்துவர்" என்ற வார்த்தைத் தருவதால் அது ஆறுதலூட்டும் விஷயம்தான்.

ஆயினும் அந்த மருத்துவர் தன்னிடத்தில் வருகின்ற வியாதியாளனுக்கு ஆறுதலாக எதையாவது செய்ய விரும்பினால் அதற்காக என்ன செய்வார்? நாலு வார்த்தைகளை ஆறுதலாகப் பேசி அந்த வியாதியாளனை உற்சாகப்படுத்தினால் போதும் என அவர் நினைக்கமாட்டார். அவர் முதலாவதாக நோயாளியை நன்றாக சோதித்து பார்த்து அவனுடைய வேதனைக்குக் காரணமான நோய்களைக் கண்டறிந்து கூறுவதோடு, அதனை சரி செய்ய தேவையான கடுமையான சில சிகிட்சை முறைகளுக்கும் அவனை உட்படுத்துவார். அப்போதுதான் வியாதியாளனுக்கு உண்மையான இளைப்பாறுதல் கிடைக்கும். அவ்விதமாகத்தான் மருத்துவரின் கரிசனை வெளிப்படும்.

இவ்விதமாகவே பரிசுத்த ஆவியானவரும் நம்மிடம் கிரியை செய்கின்றார். நமக்கு ஆறுதலான காரியங்களை செய்ய விரும்பும்போதும், நமக்கு இளைப்பாறுதலை அளிக்க முன்வரும்போதும், முதலாவது அவர் நம்முடைய குறைகளையும், குற்றங்களையும் ஏற்றவிதமாக சுட்டிக்காட்டி உணர்த்தி, மனந்திரும்புதலுக்கும், மனஸ்தாபப்படுதலுக்கும் வழிகளை ஏற்படுத்துகின்றார். அதனைத் தொடர்ந்துதான், நமக்கு நன்மையான ஆசீர்வாதங்கள் ஏற்படத் தேவையானவைகளைச் செய்கின்றார்.

ஆனால் அநேகர் தங்களின் வாழ்க்கையில் பிரச்சினைகள் நீக்கப்பட்டு, சந்தோஷமும், ஆசீர்வாதமுமான சூழ்நிலைகள் ஏற்பட வேண்டுமென்று விரும்புகிறார்களேயன்றி, அதற்கு அவசியமாக தங்கள் பாவங்கள் உணர்த்தப்படுவதையும், தங்கள் தவறுகள் சுட்டிக்காட்டப் படுவதையும் விரும்புவதில்லை.

ஒருமுறை பலநிலைகளில் தோல்வி கண்டு மிகுந்த வாழ்க்கைப் போராட்டங்களுக்குள் இருந்த ஒருவர், பலரிடம் போய் ஜெபித்துக் கொண்டார். அவர் சென்றவிடமெல்லாம் தேவ ஊழியர்கள் அவருடைய சூழ்நிலைகளை அறிந்து மிகவும் வருத்தப்பட்டு அவருக்கு ஆறுதலான வார்த்தை கூறி ஜெபித்து உற்சாகப்படுத்தினார்கள். அந்த நாட்களில் குறிப்பிட்ட ஒரு ஊழியர் அவரை சந்திக்க வந்தார். அவருடைய கஷ்டங்களை கேட்டறிந்த அவர் முதலாவது ஜெபிக்காமல், அவருடைய வாழ்க்கையை அவர் சோதித்துப் பார்க்க வேண்டுமென்றும், தேவன் செயல்பட முடியாதபடி ஏதாவது விஷயங்கள் தடையாக இருக்குமோ என்று ஆராய்ந்து பார்க்கும்படி ஆலோசனை கூறினார்.

ஆனால் அந்த ஊழியரின் அந்த அணுகுமுறையை அவர் விரும்பவில்லை. ஏதோ "என்னுடைய கஷ்ட நேரத்தில் ஆறுதலாக ஏதாவது சொல்லி, ஜெபித்து உற்சாகப்படுத்துவீர்கள் என்று பார்த்தால், என்னை ஒரு பாவியாக காட்டும் விதமாக பேசிக்கொண்டிருக்கின்றீர்களே" என்று அவர் விசனப்பட்டுக் கொண்டார்.

ஆம். அவர் தேவ அன்பை இதமான வார்த்தைகளின் வடிவத்தில் காண விரும்பினார். பாவங்களைக் கண்டறிகிற ஒரு ஆலோசனை அவருக்கு கடின விஷயமாகத் தோன்றியது. நோயாளியை பரிசோதித்து நோயைக் கண்டுபிடிக்காமல், சரியான சிகிச்சையை எப்படிக் கொடுக்க முடியும்? நோயின் விஷயங்களை கேட்க விரும்பாத நோயாளி எப்படி சுகம் பெற முடியும்?

இந்நாட்களில் அநேகர் தங்கள் கஷ்டங்களிலிருந்து விடுதலையாகிட இயேசுவிடம் வந்தும், அவர்கள் இளைப்பாறுதலைக் காணவில்லை. ஏனென்றால் அவர்கள் ஆறுதலையும், ஆச்சர்யமான விடுதலையையும் எதிர்பார்க்கின்றார்களேயன்றி, தங்களின் தவறுகளை சுட்டிக்காட்டி உணர்த்த விரும்பும் பரிசுத்த ஆவியானவரின் செயலை ஏற்றுக் கொள்ளவில்லை. இன்றைய தேவ ஊழியர்களும் இதமான வார்த்தை களால், ஜனங்களை தற்காலிகமாக ஆறுதல்படுத்த விரும்புகின்றார் களேயன்றி, தீர்க்கத்தரிசனமான வார்த்தைகளால் ஜனங்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து மனந்திரும்புவதற்கான வழிகளை ஏற்படுத்த வில்லை.

வியாதிப்பட்டவனுக்கு தற்காலிக வலிநிவாரணம் தரும் மாத்திரைகளைக் கொடுத்தால் சற்று நேரம் இளைப்பாறுதல் கிடைக்கத்தான் செய்யும். ஆனால் அது போதுமானதல்ல. அந்த இளைப்பாறுதல் நீடித்திருக்க வேண்டுமானால், இளைப்பாறுதலுக்கு

தடையான காரியங்கள் கண்டறியப்பட்டு உரிய சிகிச்சைகள் கொடுக்கப்படவேண்டும். அது வியாதியாளனுக்கு அவ்வளவு பிரியமானதாக இராவிட்டாலும் அது மிக அவசியம்.

வேதாகம கால தீர்க்கத்தரிசிகளிடம் பொதுவாகக் காணப்பட்ட முக்கியமான ஒரு அம்சம் அவர்கள் ஜனங்களின் பாவங்களை அவர்களுக்கு வெளிப்படுத்தி உணர்த்துவதில் விசேஷக் கரிசனை செலுத்தினார்கள். ஏனென்றால் அதுதான் தீர்க்கத்தரிசன ஆவியின் முக்கியமான ஒரு செயல்பாடாகும். இக்கால தீர்க்கத்தரிசிகள் ஆறுதல் செய்கிறோம் என்ற போர்வையில் ஜனங்களின் பாவங்களை அவர்கள் உணரமுடியாதபடி அவைகளை மறைக்கின்றார்கள். எனவேதான் உண்மையான நிவாரணம் கிடைக்காமல் போகிறது.

ஏசாயா தீர்க்கத்தரிசிக்கு தேவன் கொடுத்த கட்டளையைப் பாருங்கள்.

சத்தமிட்டு கூப்பிடு. அடக்கிக் கொள்ளாதே எக்காளத்தைப் போல் உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்திற்கு அவர்கள் மீறுதலையும், யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும் தெரிவி. (ஏசாயா – 58:1

எசேக்கியா தீர்க்கத்தரிசிக்கு தேவன் கொடுத்த கட்டளையும் அவ்விதமாகவே இருந்தது.

மனுப்புத்திரனே, நீ அவர்களுக்காக வழக்காடுவாயோ? வழக்காட மனதானால் நீ அவர்களின் பிதாக்களின் அருவருப்புகளை அவர்களுக்கு தெரியக் காட்டு. எசேக் – 20:4

ஆம். தேவன் நம்முடைய வாழ்க்கையிலே நன்மை செய்து தம்முடைய அன்பை வெளிப்படுத்த விரும்பும்போது, நாம் எப்படியிருக் கின்றோம் என்பதை முதலில் காண்பிக்க விரும்புகின்றார். நம்மிடம் என்னென்ன குறைவுகள், தவறுகள் இருக்கிறது என்பதை நமக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கின்றார். அது நமக்கு எதிரானதல்ல, ஆதரவானதே. அது, தேவனுடைய அன்பின் முக்கியமானதொரு வெளிப்பாடே.

கர்த்தருடைய கண்டிப்புகளிலும், கடிந்து கொள்தல்களிலும், சுட்டிக்காட்டுதல்களிலும் தேவ அன்பினை நாம் காணத் தவறினால், அவருடைய ஆறுதல் தொனிமிக்க வார்த்தைகளால் நாம் உணருகின்ற இளைப்பாறுதல் நீடித்து நம்மோடிருப்பதில்லை.

என் மகனே, நீ கர்த்தருடைய சிகிச்சையை அற்பமாக எண்ணாதே. அவர் கடிந்து கொள்ளும்போது சோர்ந்து போகாதே. தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறது போல, கர்த்தரும் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ, அவனை சிட்சிக்கிறார். நீதி – 3:11,12

ஒரு கால கட்டத்திலே தேவன் நாத்தான் என்னும் தீர்க்கத்தரிசியை தாவீதிடத்தில் அனுப்பினார். ஏற்கெனவே தாவீதோடே நாத்தான் நல்ல உறவும் பழக்கமும் உடையவன்தான். ஆனால் இப்பொழுது அவன் தாவீதிடம் செல்வதோ முக்கியமான ஒரு வேலைக்காக. நாத்தான் தாவீதின் பாவத்தை வெளிப்படுத்தி அதனை கண்டித்துணர்த்த வேண்டும்.

நாத்தான் தாவீதை சந்திக்க செல்லும் அந்த காலக்கட்டத்தில் தாவீது எப்படிப்பட்ட ஒரு மனநிலையோடு இருந்தான் என்பதை அறிய விரும்பினால் 51–ம் சங்கீதத்தைப் படிக்க வேண்டும். அங்கே அவன் தன்னுடைய நிர்ப்பந்த நிலைகளையும், மனப்போராட்டங்களையும், வியாகுல உணர்வுகளையும் தெளிவாக வெளிப்படுத்துகின்றான்.

அவன் செய்த பாவம் அவனுக்கு முன்பாக
நின்றுக் கொண்டிருந்தது. சங் – 51:3

அவன் அழுக்குப்படிந்த ஒரு மனநிலையோடு
சுத்தமற்ற ஒரு உணர்வோடு இருந்தான். சங் – 51:7

அவன் சந்தோஷமான ஒரு நிலைக்காக
ஏங்குகிறவனாகயிருந்தான். சங் – 51:8

தேவனுடைய இரட்சண்யத்தின் சந்தோஷத்தை
இழந்துபோய் கஷ்டமடைகிறவனாயிருந்தான். சங் – 51:2

இரத்தப்பழி தன் மேல் வரும் என்ற பயத்தினால்
பாதிக்கப்பட்டு இருந்தான். சங் – 51:14

தேவனைப் பழைய நாட்களில் துதித்துப் பாடியது
போல இப்போது பாடி மகிழ முடியாமல் இருந்தான். சங் – 51:14

சுருக்கமாக கூறுவதனால் தாவீது மிக மிக குழப்பமான மனநிலையோடும், சமாதானமின்மையோடும், மிகுந்த சஞ்சலத்தோடும் இருந்தான். ஒரு இருள் மிகுந்த பாதையில் திகில் நிறைந்த மனநிலையோடு நடக்கின்ற ஒரு மனிதனைப் போல அவன் இருந்தான்.

பத்சேபாள் என்ற பெண் விஷயத்தில் அவன் இச்சைக்கு இடம் கொடுத்து, வழி தவறி போனதின் விளைவாக சந்தோஷத்தையும், அமைதியையும், தேவ ஐக்கியத்தையும் இழந்து உள்ளான நிலையில் மிகவும் பாதிக்கப்பட்டு இருந்தான்.

இந்த விதமான ஒரு நேரத்தில்தான் தேவன் நாத்தான் தீர்க்கதரிசியை அவனிடம் அனுப்பி தாவீதின் பாவத்தைச் சுட்டிக்காட்ட கூறுகிறார். (II சாமு – 12:1) இதனுடைய உண்மையான நோக்கம் என்னவாயிருக்கும்? தாவீதை வேதனைப்படுத்தவா? குற்றத்தை சுட்டிக்காட்டி, அவனை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி அவனை புண்படுத்தவா?

இல்லை. உண்மையில் நாத்தானை தேவன் தாவீதிடம் அனுப்பியது அவனுக்கு எதிரான ஒரு செயல் அல்ல. அவனுக்கு ஆதரவான ஒரு செயலே. அது தாவீதை தண்டிக்கும் நோக்குடையது அல்ல. அது அவனை காப்பாற்றும் நோக்குடையது. உண்மையில் அது தாவீதை காயப்படுத்துவதற்காக அல்ல, காயப்பட்டுக் கிடக்கும் அவனுடைய காயங்களை கட்டுவது தொடர்பான ஒன்றிற்காகவே நாத்தான் அனுப்பப்பட்டான்.

வியாதியால் பாதிக்கப்பட்டு துன்புறும் ஒருவன் மேல் அவனுடைய நண்பன் கரிசனை கொண்டு, அவனை குணமாக்கும்படி ஒரு மருத்துவனை அனுப்புவது போன்ற செயலே அது. பாவத்தின் விளைவாக பாதிக்கப்பட்டுக் கிடந்த தாவீதின் மேல் தேவன் மனதுருகினார். அவனுக்கு அவர் உதவி செய்ய விரும்பினார். தம்முடைய அன்பை அவன் மீண்டும் அனுபவிக்க அவர் தேவையானவைகளைச் செய்ய விரும்பினார். ஆம், அங்கே தேவ அன்பு தாவீதைத் தேடி வந்தது.

ஆனால் அந்த தேவ அன்பு வெளிப்பட்ட வடிவம் வித்தியாசமானது. அது இதமான உணர்வைக் கொடுக்கும் விதமான ஒரு தோற்றத்தோடு வரவில்லை. அந்த அன்பு ஒரு எச்சரிக்கையின் வடிவத்தில் வந்தது. தேவனுடையக் கரிசனை கடிந்து கொள்ளுதலின் தோற்றம் கொண்டதாக இருந்தது.

தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்ததின் விளைவாக உள்நிலையில் அமைதியின்மையோடும், குற்ற உணர்வோடும், பயத்தோடும், கலக்கத்தோடும் காணப்பட்ட தாவீதுக்கு அந்த நேரத்தில் ஆறுதலும், ஊக்குவிப்பும், நம்பிக்கையூட்டுதலும், சமாதானமும் தேவைப்பட்டது.

ஆயினும் நாத்தான் அவனிடம் போய் "தாவீதே, கலங்காதே, திகையாதே" என்று கூறி ஆறுதல்படுத்தவில்லை. கர்த்தர் உனக்கு துணை நிற்கின்றார் என்று கூறி திடப்படுத்தவில்லை. அதற்குப் பதிலாக நாத்தான் தாவீதின் தவறை அவன் உணரத்தக்கவிதமாக அவனோடு பேச்சு கொடுத்தான். "நீயே அந்த மனிதன்" என்று கூறி அவனுடைய பாவத்தை சுட்டிக்காட்டினான். (11 சாமு – 12:7)

ஆம். தேவ அன்பு செயல்பட துவங்கிய போது, அது முதலாவது தாவீதின் பாவங்களை அவனுக்கு சுட்டிக்காட்டி உணர்த்தியது. ஏனென்றால் அது அவசியமாகயிருந்தது. அதன் விளைவாகத்தான் நான் ***"கர்த்தருக்கு முன்பாகப் பாவஞ் செய்தேன்"*** என்று தாவீது பாவ அறிக்கை செய்யும் சூழ்நிலை வந்தது. (11 சாமு – 12:13) அதனுடைய விளைவாகத்தான் உள்ளத்தை உருக்கும் 51–ம் சங்கீதம் தாவீதின் உள்ளத்திலிருந்து எழுந்தது. அதைத் தொடர்ந்துதான் தேவன் தம்முடைய இரக்கத்தின் ஆசீர்வாதத்தை மீண்டும் அவனுக்கு அளித்து அவனை கட்டி எழுப்ப முடிந்தது.

நம்மை நமக்கு யார் என்று காண்பிக்கின்ற செயல்பாட்டிற்கு பின்னர்தான் தேவ அன்பினை நாம் அனுபவிக்கும் வாய்ப்பை பெறுகின்றோம். தேவ அன்பு எச்சரிக்கையின் வடிவத்திலும், கடிந்து கொள்ளுதலின் வடிவத்திலும் வெளிப்படுவதை பழைய ஏற்பாட்டில் பரவலாகக் காண்கின்றோம். தேவன் துன்புற்று கிடக்கும் மக்களுடைய துயர் துடைக்கும் விதமாக எதையாவது செய்ய முன்வந்த வேளைகளில் முதலாவது ஒரு தீர்க்கத்தரிசியை அனுப்பி, அவர்களின் பாவ நிலையை வெளிப்படுத்தி, அவர்களை மனந்திரும்புதலுக்கு நேராக நடத்துவது வழக்கமாயிருந்தது.

அந்த தீர்க்கத்தரிசிகள் நல்ல மருத்துவர்களைப் போல முதலாவது அவர்களின் பாவங்களை சுட்டிக் காட்டுவதற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். அந்த ஊழியத்தின் வெளிப்புறத்தோற்றம் எளிதாக விரும்பத்தக்க விதமாக இருக்கவில்லை. ஏனென்றால் அங்கே கண்டனங்களும், கடிந்து கொள்தல்களும் இருந்தது. ஆனால் கசப்பான ஒரு மருந்திற்குள் பிணி நீக்கும் ஒரு தன்மை மறைந்திருப்பது போல அந்த கடிந்து கொள்தலுக்கு பின்னால் கர்த்தருடைய ஆறுதலும், அன்பும் மறைவாக இருந்தன.

ஓசியா தீர்க்கத்தரிசி வாயிலாகவும் தேவன் இந்த கருத்தையே வெளிப்படுத்தினார்.

நான் என் ஜனத்தின் சிறையிருப்பை திருப்பும் போதும், நான் இஸ்ரேலை குணமாக்க விரும்பும் போதும் எப்பிராயிமின் அக்கிரமமும், சமாரியாவின் பொல்லாப்புகளும் வெளிப்படுத்தப்படும். (ஓசியா – 7:1)

சிறையிருப்பு நீங்கும் ஆசீர்வாதமும், காயங்கள் ஆறி குணமாகும் ஆசீர்வாதமும், பாவங்களும், குற்றங்களும் வெளிப்படுத்தப்படுதலைத் தொடர்ந்தே வருவதை இங்கேக் காண்கின்றோம். நம்முடைய

குறைகளையும், குற்றங்களையும் உணருகின்ற நிலை ஏற்படாத வரை தேவனிடமிருந்து நாம் ஆசீர்வாதமான காரியங்களைப் பெற முடியாது. ஏனென்றால் நம்முடைய குறைகளும், குற்றங்களும், பாவங்களும் நமக்கு தேவ நன்மையை கொண்டு வர விடாத பெரிய தடைகளாகவும், தேவன் நம்முடைய வாழ்க்கையில் வந்து செயல்பட முடியாதபடி தடுக்கும் மதில்களாகவும் இருக்கின்றன. எனவேதான் தேவன் முதலாவது நம்முடைய பாவங்களை நாம் அறிந்து கொள்ள செய்வதில் அதிக கரிசனையாயிருக்கின்றார்.

எரேமியாவின் காலத்தில் தேசம் பாவத்தால் நிறைந்து, தேவ ஆசீர்வாதங்களை இழந்திருந்தது. ஆயினும் அந்த தேசத்தை தேவன் ஆசீர்வதிக்க விரும்பினார். தம்முடைய அன்பின் நிமித்தம் அவர்களை சரியான பாதைக்கு திருப்பி மீண்டும் தேசத்திற்கு ஷேமத்தை கொடுக்க விரும்பினார். அந்த தேவ அன்பு செயல்பட ஆரம்பித்தபோது, அது எரேமியா வழியாக எச்சரிப்பின் சத்தமாகவும், கடிந்து கொள்ளுதலின் சத்தமாகவுமே ஜனங்கள் மத்தியில் தொனித்தது. அந்த கடிந்து கொள்தலின் பின்னாலும் சுட்டிக்காட்டுதலின் பின்னாலும் இருந்த தேவ அன்பையும், கரிசனையையும் ஜனங்கள் காணவில்லை. அவர்கள் தேவ அன்பை வேறு வடிவத்தில் இதமான ரகத்தில் எதிர்பார்த்தார்கள். எனவே அந்த எச்சரிக்கையையும், கண்டனத்தையும் கேட்டு அவர்கள் கோபமடைந்தார்களேயன்றி, மனந்திரும்பவில்லை. தங்கள் பாவத்தை உணர மறுத்த அவர்களுக்கு தேவன் தாம் விரும்பிய நன்மையை செய்ய இயலவில்லை. எனவே அந்த தேசம் ஒரு பெரிய அழிவை சந்திக்க நேர்ந்தது.

இந்நாட்களில் ஜனங்களின் பிரச்சனைகளையும், கஷ்டங்களையும் பார்த்து மனம் பரிதவிக்க பலர் இருந்தாலும், ஜனங்கள் தங்கள் தவறுகளையும், குறை குற்றங்களையும் அவர்கள் உணருகின்ற விதமாக கடிந்து கொள்கின்றவர்கள் மிக மிக குறைவாகவே உள்ளனர். கடிந்து கொள்தலும், எச்சரித்தலும், பாவத்தை உணரத்தக்கதாக பேசுதலும் அன்பிற்கு அப்பாற்பட்ட விஷயமாகவே பலர் எண்ணுகின்றனர். இதமாகப் பேசி இதயங்களைத் தொடுவது மட்டுமே அன்பு என எண்ணுகின்றனர்.

சில காரியங்களை கண்டிப்போடும், கடிந்து கொள்ளுதலோடும் பேசுகின்றவர்களை அன்பாகப் பேசத் தெரியாதவர்களாகவும், சீரியஸானவர்களாகவும் ஜனங்கள் எண்ணுகின்ற நிலைமையும் உள்ளது. எரேமியாவின் காலத்தில் வாழ்ந்த அனனியா என்ற தீர்க்கதரிசி எரேமியா

பேசியதற்கு எதிர்விதமாக பேசினான். அவன் ஜனங்களுக்கு இதமான செய்திகளையும், பெரிய நன்மை நடக்கப் போகிறது என்ற ரீதியில் நம்பிக்கையான வார்த்தைகளையும் பேசினான்.

அவைகள் கேட்பதற்கு இனிமையாகவும், இதமாகவுந்தான் இருந்தது. ஆனால் அவைகள் கர்த்தருடைய வார்த்தைகளாக இருக்கவில்லை. எரேமியாவின் வார்த்தைகள் கடுமையாகத் தோன்றிய போதிலும் அவைகளே உண்மையான தேவ அன்பும், கரிசனையும் மிகுந்த தேவ வார்த்தைகளாக இருந்தன. அனனியாவின் இதமான வார்த்தைகளால் ஜனங்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை.

எனவேதான் அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு கடிதம் எழுதும் போது, எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு என்று கூறினான். (11 தீமோ – 4:2)

ஆம். வேத அடிப்படையிலான, தேவனுடைய கண்டிப்பும், கடிந்து கொள்தலும் நிறைந்த வார்த்தைகளுக்கு பின்னால் உள்ள தேவ அன்பை புரிந்து கொண்டு நாம் செயல்படவேண்டும். நம்முடைய தவறுகளை மறக்க செய்கின்ற வார்த்தைகள் அல்ல. நம்முடைய தவறுகளை வெளிப்படுத்தி மனந்திரும்பத் தூண்டும் வார்த்தைகளே தேவ அன்பு நிறைந்த ஆசீர்வாத வார்த்தைகள் என்பதை மனதில் கொள்வோம்.

○ ○ ○

அர்த்தமுள்ள ஆராதனை

12

தேவன் நாம் என்ன செய்கிறோம் என்பதையல்ல. நாம் எப்படி இருக்கின்றோம் என்பதையே மிக முக்கியமாகக் கவனிக்கின்றார். நாம் செய்கின்ற பல காரியங்கள் தேவன் நாம் செய்வதெற்கென்று சொன்ன காரியங்களாக இருக்க முடியும். ஆயினும் நாம் எப்படி இருக்க வேண்டும் என்று தேவன் சொல்லியிருக்கிறாரோ, அப்படியிராமல் போனால், அவைகளை நாம் செய்தாலும் நமக்கு பயனில்லை.

காயின் காணிக்கை கொண்டு வந்தது நல்ல காரியம்தான். ஆயினும் அவன் இருதயம் எப்படியிருக்க வேண்டுமோ அப்படியிராமல் தவறான சுபாவங்களால் நிறைந்திருந்ததால், அவனுடைய காணிக்கையை தேவன் புறக்கணித்தார்.

ஆவிக்குரிய வாழ்க்கைக்கு துதித்தல், ஸ்தோத்தரித்தல், ஆராதித்தல், காணிக்கை கொடுத்தல் ஆகியவை சுவையூட்டும் மிகச் சிறந்த செயல்களே. ஆயினும் இவைகளை மட்டுமே சார்ந்ததாக இறை வாழ்க்கை இருக்கக்கூடாது. பாயாசத்திற்கு இனிப்பு அல்லது தித்திப்பு மிக மிக முக்கியமானது. அதே வேளையில் பாயாசத்தில் இனிப்பை மட்டும் ஏராளமாக போட்டுவிட்டு, பிற பொருட்களுக்கு போதியக் கவனம் செலுத்தாமல் போனால் அதனை விரும்பிச் சுவைக்க முடியாது. சுவைக்க முற்பட்டாலும் சீக்கிரம் திகட்டிப் போய்விடும்.

இன்று அநேகருக்கு ஆவிக்குரிய வாழ்க்கை என்றால், ஆராதனை என்பதற்கு அப்பால் வேறு ஏதும் இல்லை. ஆராதனையே ஆவிக்குரிய வாழ்க்கை என்பது அவர்களின் சிந்தனை. ஆராதனை செய்தால் மட்டும் போதும், தேவன் செயல்பட ஆரம்பித்து விடுவார் என்று பலர் நினைக்கின்றனர். சில பாடல்களை அதிக உற்சாகத்தோடு பாடி, தேவ நாமங்களை சரளமாக சொல்லி துதிக்க ஆரம்பித்து விட்டால், உடனே தேவப் பிரசன்னம் வந்து விடும் என்றும், தேவ வல்லமை வெளிப்பட்டுவிடும் என்றும் அவர்கள் நம்புகின்றனர்.

ஆனால் தங்களைத் தாங்களே வசதியாக ஏமாற்றிக்கொள்ள உதவும் ஒரு தவறான எண்ணமே இது. தேவன் நாம் "யார்" என்பதைப் பாராமல்"என்ன" செய்கிறோம் என்பதை மட்டுமேப் பார்த்து கிரியை செய்வார் என எண்ணுவது தவறானது. ஆராதனைகளை விரும்பும் தேவன் ஆராதிக்கிறவர்களின் உண்மையான மனநிலை, குணநிலை, பண்புநிலை, கொள்கை நிலை பரிசுத்த நிலை ஆகியவற்றைப் பாராமல், அவைகளை அங்கீகரிக்கமாட்டார்.

பலியிடவும், பண்டிகைக் கொண்டாடவும், ஓய்வு நாளை ஆசரிக்கவும், காணிக்கை கொடுக்கவும் ஜெபம் செய்யவும் மோசே மூலமாக தேவன் கட்டளையிட்டிருந்தார். ஆனால் அவைகளை செய்த ஏசாயா தீர்க்கத்தரிசியின் காலத்து மக்களை தேவன் கண்டித்தார். அவைகளை அவர் அரோசிகமாக எண்ணி புறக்கணித்தார். (ஏசாயா – 1:11–17) ஏனென்றால் அவர்களிடம் தேவன் விசேஷமாக எதிர்பார்த்த பரிசுத்தம், நன்மை செய்தல், ஆகியவை இல்லை.

தேவன் நம்முடைய பாடல்களை மட்டும் கேட்டு பரவசமடைந்து விட மாட்டார். நம்முடைய உற்சாகக் குரல்களை மட்டும் கேட்டு களிப்பாகி விடமாட்டார். தேவ நாம துதிகளைக் கேட்டு மயங்கிப் போகமாட்டார். நாம் எப்படி வாழ்கின்றோம் என்பதை அவர் கூர்மையாகக் கவனிக்கின்றார். நம்முடைய குணநிலைகளும், மனநிலைகளும் எப்படியிருக்கிறது என்பதை கூர்ந்து பார்க்கின்றார்.

ஆமோஸ் தீர்க்கத்தரிசியின் காலத்தில் ஜனங்கள் சிறப்பாக இசைக் கருவிகளை மீட்டி அருமையாக பாடி பரவச உணர்வோடு தேவனை ஆராதித்தார்கள். ஆனால் தேவனோ அவைகளால் மகிழவில்லை. "உன் பாட்டுகளின் இரைச்சலை என்னைவிட்டு அகற்று. உன் வீணைகளின் ஓசையை நான் கேட்க மாட்டேன்" என்றார். (ஆமோஸ் – 5:23)

பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள்" என்று வேதம் சொல்கிறது. (சங் – 96:9) ஆனால் இன்றைய சபைகளில் இந்த பரிசுத்த அலங்கார தொழுது கொள்தலுக்கு போதிய முக்கியத்துவம்

இல்லை. பரிசுத்தம் என்ற விஷயத்தில் மிகவும் வைராக்கியமாக இருக்கின்ற தேவனை வெறும் பாடல்களாலும், இசைக் கருவிகளின் இன்பமான இசை ஓசைகளினாலும் அசைத்து விடலாம் என்று எண்ணுவது எவ்வளவு தவறான காரியம்!

இன்றைய பெரும்பாலான ஆவிக்குரிய ஜனங்கள், ஒரு ஆராதனை மயக்கத்திற்குள்ளேயே இருக்கின்றார்கள். ஒரு பரவசமான ஆராதனை வேளையைக் காண்பதற்கு மட்டுமே அவர்கள் அதிக ஆர்வமாயிருக்கின்றார்கள். ஒரு கலகலப்பான ஆராதனை வேளையைக் கண்டுவிட்டால் தேவனை மகிமைப்படுத்திவிட்ட உணர்வையும், தேவனை நெருக்கமாக உணர்ந்து விட்ட ஒரு மன நிலையையும் பெற்றுவிடுகிறார்கள்.

தங்களின் குறைவுகளை, குற்றங்களை, தவறுகளை, தவறான குணநிலைகளை, தேவ ஐக்கியமற்ற வாழ்க்கை நிலைகளை, கிறிஸ்தவ சாயலற்ற செயல்களைக் கண்டு கொள்ள முடியாமல் ஆராதனை என்பது ஒரு போதைமருந்து போல அவர்களை மயக்கிப் போட்டு விடுகிறது. ஆராதனை என்ற கண்ணாடியின் மூலம் தங்களைப் பார்க்கிறார்கள். அங்கே தங்களின் கண்களுக்கு அவர்கள் தேவனைக் கண்டவர்கள் போலவும், தேவனை அனுபவித்தவர்கள் போலவும் தோன்றுகிறார்கள், தேவனற்ற தங்கள் குறைவை உணர முடியாதபடி ஆராதனைப் பரவசம் அவர்களின் கண்களை மூடிப் போட்டுவிட்டது. இன்றைய சபைகளில் ஆடல்களுக்கும், பாடல்களுக்கும், அதிக சத்தத்திற்கும், முக்கியத்துவம் தரப்படுகின்றதேயன்றி பரிசுத்தமான ஒரு வாழ்க்கை நிலை, தேவனுக்கேற்ற குணநிலை ஆகியவற்றிற்கு போதிய முக்கியத்துவம் தரவில்லை.

பல சபைகளில் எழுப்பப்படும் சத்தங்கள் பலர் காதைக் கிழிக்கின்றது. ஆனால் சத்தியத்தின் ஓசையோ எவருக்கும் கேட்கத்தக்க அளவில் இல்லை. ஜனங்கள் பாடுகிறார்கள், ஆடுகிறார்கள், கொண்டாடுகிறார்கள், பரலோகத்தை நேரில் கண்டுவிட்டவர்களைப் போன்று பரவசமடைகிறார் கள். ஆனால் அவர்களிடம் யாரும் அன்பையோ, பொறுமையையோ, தாழ்மையையோ, தயாள குணத்தையோ, தெய்வீகத்திற்கு சாட்சியான செயல்களையோ பார்க்க முடியவில்லை. எனவே பாடுவதும், பரவசமாய் ஆடுவதும்தான் கிறிஸ்தவம் என்பது போன்ற தவறான ஒரு புரிந்துகொள்ளுதலுக்கு வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பல திருச்சபைத் தலைவர்கள் மேய்ப்பர்களாக இராமல் வெறும் பாடகர்களாக மட்டுமே உள்ளனர். அவர்களால் ஜனங்களைபாடவும் ஆடவும் பரவசப்படுத்தவும் முடிகின்றதேயன்றி, அவர்களுக்கு பரிசுத்தமான பாதைகளைக் காண்பித்து, ஆவிக்குரிய வழி நடத்துதல்களைக் கொடுக்கத் தெரியவில்லை. அவர்களால் இயன்றதெல்லாம், பாடல் ஆடல் மூலமாக

மட்டும் தேவனை ஆராதிக்க பழக்குவதுதான். பரிசுத்தமான வாழ்க்கை மூலம் தேவனை ஆராதிக்க வேண்டிய தேவையை வற்புறுத்தி, அதற்கேற்ற வலிமையான சத்திய நெறிகளின் பாதையில் அவர்களை நடத்தும் பாரம் அவர்களுக்கு இல்லை. மேய்ப்பர்களின் பொறுப்பு சபை கூடும் வேளைகளில் சபைக்குள்ளே ஜனங்களை பரவசமாக ஆராதிக்கப்பழக்குவது மட்டும் அல்ல. அவர்களை தேவனுக்கேற்ற பரிசுத்தமான வழிகளில் நடக்கப் பழக்குவதும் மிகவும் தேவை.

சைபர்களுக்கு ஏதாவது மதிப்பு கிட்டுமா? சைபர்கள் ஏதாவது மதிப்பை உருவாக்க முடியுமா? அவைகள் மதிப்பை ஏற்படுத்த முடியும். அவைகள் எதற்கு பின்னால் வருகின்றது என்பதைப் பொறுத்து அவை மதிப்பை பெறவும் முடியும். மதிப்பை பெருக்கவும் முடியும். முதலாவது ஒரு எண் வந்து அதற்கு பின்னால் சைபர்கள் வந்தால் அங்கே மதிப்பு பெருகிக்கொண்டே வரும். வெறும் சைபர்கள் மட்டுமே அணி வகுத்து வந்தால், அவை எவ்வளவு இருந்தாலும் எந்த மதிப்பையும் பெற முடியாது.

அதுபோலவே உண்மையான மனந்திரும்புதல், தேவனுக்கேற்ற வாழ்க்கை முறை, ஆவிக்கேற்ற குணாதிசயங்கள் ஆகியவை எண்கள் போன்றவை. துதித்தல், ஸ்தோத்தரித்தல், பாடிப்பரவசமடைதல், ஜெபித்தல், காணிக்கை கொடுத்தல் போன்றவை சைபர்கள் போன்றவை. இந்த சைபர்கள் தனித்திருக்கையில் அத்தனை சேர்ந்தாலும் பயனில்லை. அவைகள் சரியான தேவனுக்கேற்ற வாழ்க்கை நிலைகளோடு சேருமென்றால் அவைகளுக்கு மிகுந்த மதிப்பும், பயனுமுண்டு.

ஆம். நன்றாக துதிப்போம், மனம் நிறைந்து ஸ்தோத்தரிப்போம், ஆர்வத்தோடும், வாஞ்சையோடும் தேவனை ஆராதிப்போம், பரவசமாய் பாடி மகிழ்வோம். ஆயினும் இவைகள் மட்டுமே தேவனை அசைத்துவிடும் என எண்ணாதிருப்போம். ஆவிக்கேற்ற வாழ்க்கையிலும், தேவனுக்கேற்ற குணாதிசய நிலையிலும் வளருகின்ற பின்னணியோடு இவைகளைச் செய்தால் தேவனும் மகிமைப்படுவார். நாமும் மிகுதியாக ஆசீர்வதிக்கப் படுவோம். அதுவே அர்த்தமுள்ள ஆராதனை வாழ்க்கை.

O O O

காணிக்கை கொடுத்தால் போதுமா?

கர்த்தருக்கு பயந்து அவருடைய வழியில் நடக்கிற மனிதன் பாக்கியவான். (சங் – 128:1) இது தான் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டு பாக்கியவான் என்ற நிலையில் வாழ்வதற்கான தேவ ஆலோசனையா யிருக்கிறது. வாழ்க்கையில் தேவனை அவர் விரும்புகின்ற விதமான வழிகளில் கனப்படுத்தி அவருடைய வார்த்தைகளின்படி நடக்கும் போது தேவன் அவனை ஆசீர்வதிக்கின்றார்.

ஆனால் இந்நாட்களில் கடவுளுடைய நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் ஆவலாய் எதிர்பார்க்கின்ற ஜனங்களுக்கு காட்டப்படுகிற வழிகள் மிகவும் வித்தியாசமாக உள்ளன. பெரும்பாலும் இக்காலங்களில் ஜனங்களை அதிகமாக கவர்ந்ததும், தேவ ஊழியர்கள் அநேகருக்கு பிரியமானதுமான ஒரு ஆசீர்வாத வழிகாட்டுதல் என்னவென்றால் காணிக்கை வழி ஆசீர்வாதம் அடைதல் ஆகும்.

காணிக்கை உபதேசம்

பெரும்பாலான கிறிஸ்தவ பத்திரிகைகளும் கிறிஸ்தவ போதனைகளும் "காணிக்கை வழங்குங்கள் கர்த்தரிட மிருந்து நன்மை பெறுங்கள்" என்ற அறிவுரையையே அதிக முக்கியப்படுத்தி கொடுக்கின் றன. கர்த்தருடைய ஆசீர்வாதம் தங்களுக்கு தேவை என்று உணருகின்ற அநேகர், இந்த அறிவுரையை ஏற்றுக் கொண்டு காணிக்கை கொடுப்பதில் அதிக ஈடுபாடு காண்பிக்கின்றார்கள்.

ஒருமுறை மிகப்பெரிய ஊழிய ஸ்தாபனம் ஒன்று வெளியிடும் மாத இதழில் கவர்ச்சிகரமான ஒரு விளம்பர அறிவிப்பு இடம் பெற்றிருந்தது. மேலே கொட்டை எழுத்துக்களில் "நூறு மடங்கு ஆசீர்வாதம் பெற மூன்று வழிகள்" என்று தலைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. அந்த மூன்று வழிகள் என்ன என்பதை அறியும் நோக்குடன் நான் அதனை தொடர்ந்து வாசித்தேன். அந்த மூன்று வழிகளில் ஒன்று கூட தேவனுக்கு பயந்து வாழ்தல், ஜெபம், கீழ்ப்படிவு பரிசுத்தமான வாழ்க்கை, பிறருக்கு உதவுதல் என்பது போன்றவைகளோடு தொடர்புடையவை அல்ல.

அந்த மூன்று வழிகளில் ஒன்று. அந்த ஸ்தாபனத்தாருக்கு தாராளமான காணிக்கையை அவர்களுடைய பிரதான அலுவலகத்திலோ அல்லது கிளை அலுவலகங்களிலோ நேரில் செலுத்துதல். இரண்டு அப்படி செலுத்த வாய்ப்பில்லாதோர் அருகில் உள்ள ICICI வங்கி வழியாக அந்த ஸ்தாபனத்திற்கு காணிக்கை அனுப்புதல். மூன்று, மேற்கண்ட இரண்டு விதத்திலும் காணிக்கை அனுப்ப வாய்ப்பில்லாதோர் இண்டர்நெட் வழியாக காணிக்கை அனுப்புதல்.

இந்த மூன்று வழிகளில் ஏதாவது ஒரு வழியில் அந்த ஸ்தாபனத்தாருக்கு காணிக்கை செலுத்தியவுடன் விண்ணுலகத்திலிருந்து அருள்நாதரின் ஆசி 100 மடங்கு அந்த குடும்பத்திற்கு உடனே வந்துவிடும் என்று கீழே வாக்குறுதியும் உத்தரவாதமும் கொடுத்திருந்தார்கள்.

காணிக்கை அனுப்புங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார் என்று சொன்னால் அது சற்று நியாயமானது. ஆனால் காணிக்கை அனுப்பியவுடன் 100 மடங்கு ஆசீர்வாதம் வந்துவிட்ட பின்பு பரிசுத்தத்திற்கோ, உண்மைக்கோ, நீதிக்கோ, ஜெபத்திற்கோ, நற்குணங்களுக்கோ என்ன தேவையிருக்கிறது. நூறு மடங்கு ஆசீர்வாதத்தை காணிக்கை செலுத்துகின்ற ஒரு செயலாலேயே பெற வழி கிடைத்துவிட்டதே.

இதுபோன்ற அறிவிப்புகளும், விளம்பரங்களும் இன்றைய கிறிஸ்தவ ஊழியர்கள் கிறிஸ்தவ ஊழியம் என்பதை எந்த அளவிற்கு முழு வியாபாரமாக மாற்றிவிட்டார்கள் என்பதையும், காணிக்கை ஆசீர்வாதம் என்ற பெயரில் ஜனங்கள் எந்த அளவிற்கு போலி வாக்குறுதிகளால் வஞ்சிக்கப்படுகிறார்கள் என்பதையும், தெளிவாக விளக்குகிறது.

காணிக்கை மட்டும் போதுமா?

இன்று அநேகர் இயேசு கிறிஸ்துவை தங்களின் வாழ்க்கையில் ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்படவில்லை. ஆனால் இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பினை பிரபல்யப்படுத்தும் ஊழியங்களுக்கு காணிக்கை அளிக்கின்றார்கள். அவர்கள் பரிசுத்தமாக வாழ தங்கள் மனதை

நோக்கவில்லை. ஆனால் பரிசுத்தமான தேவனுடைய காரியங்களுக்கு காணிக்கை செலுத்துகின்றார்கள். அவர்கள் தேவனுடைய வழிகளில் நடக்கவும், வாழவும் எந்த கரிசனையும் கொள்ளவில்லை. ஆனால் சபைகளுக்கும், ஊழியர்களுக்கும், ஸ்தாபனங்களுக்கும், மிஷனரி ஸ்தாபனங்களுக்கும் தாராளமாகக் காணிக்கை கொடுக்கின்றார்கள். அவர்கள் தேவனோடு வாழ்வதற்கும், தேவனுடைய வார்த்தைகளின்படி வாழ்வதற்கும் எந்த ஆர்வமும் காட்டவில்லை. ஆனால் தேவனுக்காக செய்கிறோம் என்ற எண்ணத்தில் ஆலயங்களை கட்டவும், மணிக் கோபுரங்களை எழுப்பவும் தியாகமாக செலவு செய்கின்றார்கள்.

ஏனென்றால் கர்த்தர் ஒரு காணிக்கை விரும்பி போலவும், அவர் காணிக்கையை கண்டவுடன் யார், எவர் என்ற பேதமின்றி ஆசீர்வாதங்களை மூட்டை மூட்டையாக கொடுத்துவிடுவார் என்றும் மக்கள் நம்பும் விதமாக போதனைகள் மிகுந்து போய்விட்டன. காணிக்கைதான் தேவ ஆசீர் பெறும் பிரதான வழி என்று அவர்கள் நம்பி செயல்படும்படி தவறான ஒரு காணிக்கை உபதேச விதை மிகுதியாக விதைக்கப்பட்டுள்ளன.

காணிக்கை என்பது தேவ ஆசீர்வாதங்களை பெறுவதற்கான பல வழிகளில் ஒன்று அல்ல. தேவ நன்மைகளை பெறுவதற்கு நாம் தகுதியடையும்படி நம்மில் காணப்பட வேண்டிய பல அம்சங்களில் காணிக்கை வழங்கலும் ஒன்று.

நாம் கர்த்தரை நம்முடைய வாழ்க்கையில் ஏற்றுக்கொண்டு, அவருடைய வழிகளில் நடந்து, அவருக்கு பிரியமான விதங்களில் நடந்து, அவருக்கு பிரியமான விதங்களில் வாழ்வதற்கு நம்மை அர்ப்பணித்திருக்கின்ற சூழ்நிலையில்தான் நம்முடைய காணிக்கைகள் நமக்கு தேவ ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும்.

ஆனால் இன்றைய பல சபைகளும், ஊழிய ஸ்தாபனங்களும் வித்தியாசமாக மக்களை நம்ப வைக்கின்றன. நீங்கள் யாராக வேண்டுமானாலும் இருக்கலாம், எப்படி வாழ்கின்றவர்களாகவும் இருக்கலாம், ஏன் நீங்கள் பிற மதத்தலைவராகவும் இருக்கலாம். அது ஒன்றும் பிரச்சனை அல்ல. நீங்கள் காணிக்கை மட்டும் சரியாய் கொடுத்தால் போதும், நூறு மடங்கு ஆசீர்வாதமும் அப்படியே வந்துவிடும் என்பது போல அவை போதிக்கின்றன.

கர்த்தர் விரும்பாத காணிக்கை

இன்று ஜனங்களை காணிக்கை அதிகமாக கொடுக்க வைக்கவும், தசமபாகம் கொடுக்கத் தூண்டவும் மிகுதியாக காண்பிக்கப்படும் வசனம் மல்கியா – 3:10 அந்த வசனத்தை மட்டும் அடிக்கோடிட்டுக் காட்டி காணிக்கை கொடுத்தால், இடம் கொள்ளாத ஆசீர்வாதம் வந்து விடும் என

போதிப்போர் பலர். ஆனால் அதே மல்கியா தீர்க்கத்தரிசியின் புத்தகம், கர்த்தருக்கு உகந்ததல்லாத காணிக்கைகளைக் குறித்தும், தேவனால் மதிக்கப்படாமல் புறக்கணிக்கப்படும் காணிக்கைகளைக் குறித்தும், கர்த்தரின் அங்கீகாரம் பெற முடியாத காணிக்கைகளைக் குறித்தும், கர்த்தருக்கு காணிக்கைக் கொடுக்கத் தேவையான தகுதிகளைக் குறித்தும் பேசுகின்றன. (மல்கியா – 1:10; 2:13; 1:13; 3:3)

கர்த்தர் பிரியப்படும் விதமாக ஒருவர் வாழாத நிலையில் அவரின் காணிக்கை கர்த்தருக்கு உகந்ததல்ல. மல் – 1:10; கர்த்தர் விரும்பும் பரிசுத்தத்தைக் குறித்து கவலையற்றிருப்பவர்கள் காணிக்கை செலுத்துகிறவர்களாயிருந்தாலும், கர்த்தர் அவர்களை விலக்கித்தள்ளு வார் என்று வேதம் கூறுகிறது. (மல் – 2:12) கர்த்தர் நம்மை பொன்னைப் போலவும், வெள்ளியைப் போலவும் புடமிட்டு சுத்திகரித்து நீதியாய் காணிக்கை செலுத்த நம்மை தகுதிபடுத்துகிறார் என்று வேதம் சொல்கிறது. (மல் – 3:3) ஏசாயா தீர்க்கனின் காலத்தில் அக்கால யூதர்கள் பல பக்தி காரியங்களைச் செய்து அவர்கள் காணிக்கை செலுத்திய போது தேவன் இனி வீண்காணிக்கைகளக் கொண்டு வரவேண்டாம்" என்றார். (ஏசாயா – 1:13)

காணிக்கை செலுத்துவதும், கர்த்தருடைய ஊழியங்களை ஆதரிப்பதும் மிக மிக மேன்மையான ஆவிக்குரிய அவசியமானச் செயல்களே. அதே வேளையில் நம்முடைய வாழ்க்கைகள், பழக்க வழக்கங்கள், குணநிலைகள், செயல்பாடுகள், பண்புகள், நோக்கங்கள் ஆகியவை தேவனுக்கு ஏற்றதாக இல்லாத நிலையில் நம்முடைய காணிக்கைகள் தேவனுக்கு ஏற்றதாக இருக்க முடியாது. என்பதை வேதம் மிகவும் தெளிவாகக் கூறுகின்றது.

காயின் - ஆபேல்

காயினும் – ஆபேலும் பக்தியின் விளைவாக காணிக்கை செலுத்த வந்தபோது, தேவன் காயினின் காணிக்கையை தேவன் நிராகரித்தார். (ஆதி – 4:5) காயினின் கையில் இருந்த காணிக்கையை அல்ல. அவனுடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதையே தேவன் முதலில் பார்த்தார். அங்கே கோபம், எரிச்சல், பொறாமை, கசப்பு, விரோதம் ஆகியவை இருந்தன. இதயநிலை சரியில்லாதவனுடைய காணிக்கையை தேவன் புறக்கணித்தார்.

மலைப்பிரசங்கத்தின் போது, காணிக்கை கொடுப்பதற்கு முன்பு. முதலில் யாரோடாவது மனக்கசப்போ, வெறுப்பு, விரோதமோ இருந்தால் முதலில் அதை சரிசெய்ய ஆண்டவர் கூறினார். (மத் – 5:23, 24)

இன்று காணிக்கை கொடுத்தால் எந்தெந்த விதங்களிலெல்லாம் ஆசீர்வாதம் வரும் என போதிப்பதில் நூறில் ஒரு பங்கை கூட காணிக்கை

செலுத்துகிறவர் எப்படியிருக்க வேண்டும் என்றோ, யாருடைய காணிக்கையை கர்த்தர் அங்கீகரிக்கிறார் என்றோ கூறுவது கிடையாது. காணிக்கை செலுத்துதல் மட்டுமே ஆசீர்வாதத்தை அடையும் படிக்கல்லாக காண்பிக்கப்படுகிறது.

கர்த்தரை பல ஊழியர்களும், ஸ்தாபனங்களும் மிகவும் பணக்கஷ்டத்தில் இருப்பவரைப் போன்றே காண்பிக்கின்றன. பணப்பற்றாக் குறையில் ஏராளமான அவருடைய திட்டங்கள் தடைப்பட்டிருப்பது போலவும், அவருக்கு காணிக்கை கொடுக்க அநேகர் இன்னும் முன்வராததால், அநேகரை இரட்சிக்கும் அவருடைய ஊழியம் பின்னடைவில் இருப்பது போலவும் ஒரு சித்திரத்தைக் கொடுக்கின்றனர். எனவே யாராவது காணிக்கை கொடுக்க முன்வந்தால் உடனேயே அவர் அவர்களை இடம் கொள்ளாமல் ஆசீர்வதித்துவிடுவார் என்று சிந்திக்க வைக்கின்றனர்.

ஆனால் தேவனுடைய எந்த ஒரு திட்டமும் மனிதர்கள் காணிக்கை கொடுக்க தவறியதால் நின்று போவதில்லை. தேவன் யாருடைய காணிக்கையையும் சார்ந்தவரல்ல. காணிக்கை கொடுத்து அவரை எளிதாக யாரும் தங்களுக்கு ஆதரவாக திருப்பி விட முடியாது.

காணிக்கை கொடுப்பது நமக்கு கிடைத்த கவுரவம். அதே வேளையில் நம்முடைய காணிக்கையைவிட நம்முடைய ஆத்ம வாழ்க்கையும் பரிசுத்த ஜீவியமும், நற்குண செயல்பாடும் தேவனுக்கு மிக முக்கியம். யாருடைய காணிக்கையையும் தேவன் அவர்களின் வாழ்க்கையை கவனிக்காமல் ஏற்றுக்கொள்வதில்லை. நாம் காணிக்கை கொடுக்கும் போது நமக்கும் தேவனுக்கும் என்ன உறவு, நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கைத் தரம் என்ன? நாம் எப்படி வேலை செய்கிறோம், எப்படி தொழில் செய்கிறோம், எப்படி குடும்பம் நடத்துகிறோம், எப்படி பிறரோடு நடந்து கொள்கிறோம், எவ்விதமான சுபாவ நிலைகளோடு செயல்படுகிறோம், யாருக்கு என்ன நன்மை செய்கிறோம், கர்த்தருடைய சத்திய வழிகளை எந்த அளவிற்கு மதித்து நடக்கின்றோம் ஆகியவைகளைக் கர்த்தர் கவனிக்கின்றார். வெறும் காணிக்கைகளால் மட்டும் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைத் தேடினால் அது கர்த்தருடையப் பார்வையில் வீண் காணிக்கைகளே.

ஒருமுறை ஊழியங்களைத் தாங்கும் மக்கள் அதிகமாக கலந்து கொண்ட ஒரு முக்கிய கூடுகையில் நான் செய்தியளிக்க சென்றிருந்தேன். அங்கு வந்திருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தாராளமாக காணிக்கை கொடுத்து மிஷனரி ஊழியங்களை ஆதரிக்கின்றவர்கள். அநேகர் கலந்து கொண்ட அந்த கூட்டத்தில் நான் பிரசங்கித்தபோது பலர் அது பயனுள்ளது என கண்டனர். முடிவில் நான் எழுதிய புத்தகங்களும், பிரசங்க வி.சி.டி.க்களும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. இலவசமாக வழங்க மாத இதழ்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த புத்தகங்களை லேசாக திரும்பி பார்க்க மனதை செலுத்தியவர்கள் ஒரு சிலர்தான். இலவச மாத

இதழை எழுத்துச்செல்லக்கூட அவர்கள் கரிசனை கொள்ளவில்லை. ஒன்றிரண்டு பேர் மட்டும் ஒன்றிரண்டு புத்தகங்களை வாங்கினர். இவ்வளவு தியாகமாக காணிக்கை கொடுக்கும் மக்கள் அங்கே வைக்கப்பட்டிருந்த புத்தகங்களை தங்களுக்கு தொடர்பில்லாத ஒரு விஷயம் போல எண்ணி விலகிச் சென்றபோது அது விசனமான ஒன்றாகயிருந்தது.

ஆம். அநேகருக்கு காணிக்கை வழங்கி கர்த்தருடைய ஆசீர்வாதங்களைத் தேடுவதே முழு ஆவிக்குரிய அனுபவமாக இருக்கிறது. அநேகர் ஊழியங்களுக்கு காணிக்கை கொடுப்பது ஆவிக்குரிய வாஞ்சையாலோ, ஆண்டவரோடு ஏற்பட்ட பிணைப்பாலோ அல்ல. காணிக்கை கொடுப்பதால் தங்கள் குடும்பம், தொழில், வியாபாரம் ஆசீர்வதிக்கப்படும் என்ற நம்பிக்கையினாலேயே கொடுக்கின்றனர்.

இந்த சிந்தையைத்தான் பல ஊழியர்களும், அமைப்புகளும் தங்களுக்கு சாதகமாக்கி, கர்த்தருடைய வழிகளை போதிப்பதில் நாட்டம் கொள்ளாமல், ஊழியங்களுக்கு காணிக்கை கொடுக்க வைப்பதிலேயே முழு கவனத்தையும் செலுத்துகின்றார்கள். இதன் விளைவாகத்தான் காணிக்கை வழங்கி கர்த்தரின் நன்மைகளைத் தேடும் ஒரு கூட்டம் பெருகி வருகின்றன.

ஜனங்களுக்கு ஆசீர்வாதத்திற்கான சரியான தேவனுடைய வழிகளைக் காட்டாமல், காணிக்கை ஆசீர்வாதம் என்ற கவர்ச்சியான வலைக்குள் அவர்களை சிக்க வைத்து, தங்கள் சுயலாப சாராஜ்யங்களைக் கட்டுவது ஒரு கொள்ளையடிப்பதற்கு ஒப்பான முறைகேடான செயலாகும்.

ஆம். பிரியமானவர்களே உங்கள் காணிக்கை ஊழியர்களுக்கும், ஸ்தாபனங்களுக்கும் அதிக பிரியமானவைகளாக இருக்கலாம். ஆயினும் உங்கள் வாழ்க்கை, உங்கள் குணங்கள், உங்கள் வழிமுறைகள், உங்கள் பண்புநிலைகள் தேவனுக்கு பிரியமாயிருந்தால் மட்டுமே உங்கள் காணிக்கைகளும் பிரியமாயிருக்கும். உங்கள் காணிக்கைகளை அல்ல. உங்கள் இருதயத்தை தேவன் முதலாவது பார்க்கின்றார். காணிக்கைகளுக்காக ஸ்தாபனங்கள் பாராட்டும். ஆனாலும் தேவனின் பாராட்டு தேவனுக்குப் பிரியமான ஒரு வாழ்க்கைக்கே கிட்டும். தேவனுக்கேற்ற ஒரு வாழ்க்கை பின்னணியோடு நாம் செலுத்தும் காணிக்கைகள்தான் விண்ணுலகில் அறியப்பட்டு உண்மையான ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும். கர்த்தருடைய பரிசுத்தமான வழிகளைக்காட்ட போதிய முனைப்பு காட்டாமல், காணிக்கையை அளவு கோலாகக் காட்டி கர்த்தருடைய ஆசீர்வாதங்களை வாக்களிப்பது கர்த்தருடைய பரிசுத்த நாமத்தை கொச்சைப்படுத்தும் செயலாகும். வாழ்க்கையை கர்த்தருக்கு அர்ப்பணிக்காமல், காணிக்கைகள் அளித்து ஆசீர்வாதத்தைத் தேடுவது, தேவனுடைய உண்மையான ஆசீர்வாதங்களைக் கொண்டு வராது.

ஆசிரியரின் பிற நூல்கள்

1. மகிழ்ச்சியின் பாதைகள்
2. இறை ஆசியுடன் இனிய குடும்பம்
3. வெளிச்சம் வெளியரங்கமாக்கும்
4. வழிகாட்டும் சிந்தனைகள்
5. சிலுவையில் இயேசுவின் இதய ஓசைகள்
6. நம்பிக்கையில் சந்தோஷமாயிருங்கள்
7. பரிசுத்த வாழ்வின் பாதையில்
8. நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்?
9. துதிமலர்கள் ஆயிரம்
10. வல்லமையாய் ஜெபிப்பது எப்படி?
11. ஆராதனையும் அனுதின வாழ்க்கையும்
12. விசுவாசத்தின் பிரதிபலிப்புகள்
13. சிலுவையின் பாதையில் சில மனிதர்கள்
14. துக்கம் சந்தோஷமாக மாறும்
15. ஆசீர்வாதங்கள் தடைபடுவது ஏன்?
16. கிறிஸ்தவம் பேச்சில் அல்ல ....செயலில்
17. உண்மையான ஆராதனை
18. சிந்தையை சீராக்கும் சிந்தனைகள்
19. யார் என்னை தேற்ற முடியும்?
20. மனந்திரும்பியது உண்மையா?
21. சிலுவையில் அறையப்படும் சத்தியங்கள்
22. ஜீவ நீரோடை (தினசரி தியான நூல்)
23. அனுதின வாழ்வில் தேவன் (தினசரி தியரன நூல்)
24. தேவனின் பாதையில் தினமும் (தினசரி தியான நூல்)
25. இன்று நான் இயேசுவுடன் (தினசரி தியான நூல்)
26. தினமும் தேவனை நோக்கி (தினசரி தியான நூல்)

(IN ENGLISH)

27. "Stream of Life" (Daily Devotional Year Book)
28. "God's Guidance Today"(Daily Devotional Year Book)
29. "Walking With God Daily"(Daily Devotional Year Book)

★ ஜீவ நீரோடை மாத இதழ்

(புத்தகங்களைக் குறித்த விபரங்களுக்கு எழுதவும்.)

ஆசிரியரைப் பற்றி...

கிறிஸ்தவம் என்பது பேசுவதோடும், கேட்பதோடும் நின்று விடாமல், நடை முறை வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் அது பிரதிபலிக்க வேண்டும். இந்த உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு பல பயனுள்ள ஆவிக்குரிய புத்தகங்களை எழுதி வருகின்ற சகோ. சாம்சன் பால் கர்த்தரால் வல்லமையாக பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு நற்செ--தியாளர் ஆவார். இவருடைய எழுச்சியூட்டும் பிரசங்கங்களும், எழுத்துக்களும் ஆயிரக்கணக்கானோருக்கு மிகுந்த ஆசீர்வாதமாக விளங்குகிறது.

சிலுவையில் அறையப்படும் சத்தியங்கள்

அன்றைய யூத மதத்தலைவர்களுக்கு இயேசு உகந்தவராக இருக்கவில்லை. எனவே அவர்கள் அவரை சிலுவையில் அறைந்தார்கள். ஆனால் அந்த இயேசுவின் ஊழியக்காரர்களாக அறியப்பட்ட அநேகரால் இன்று அவருடைய மகிமையான சத்தியங்கள் சிலுவையில் அறையப்படுகின்றன. சத்தியத்தை தங்களுடைய வசதிக்கேற்ப மாற்றி அமைத்திட யாருக்கும் அதிகாரமில்லை. ஆனால் இன்று அது தாராளமாக நடைபெறுகிறது. உண்மை சத்தியங்களின் வெளிச்சத்தில் நடந்திட வாஞ்சை கொண்டோருக்கு இந்த நூல் ஒரு கண் திறக்கும் கருவியாயிருக்கும். இந்த நூலில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு கட்டுரையும் உங்களுக்கு ஆவிக்குரிய தெளிவையும், புதிய விழிப்புணர்வையும் தரப்போவது நிச்சயம்.